[illegible]

[illegible] 6 [illegible] 10

May 1933

[illegible]
8ɱ211, N27SM
N133.6.10.
186927

1061

1061

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR OF C.S.
16 FEB 1934
MADRAS

# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு கூ. § ஸ்ரீமுக-வைகாசி 1933-மே § திங்கள் ய.

உள்ளுறை


| | உள்ளுறை | பக்கம். |
|---|---|---|
| க. | காந்தியாரின் கைதவம். | 361 |
| உ. | ஞானவாசிட்டம். | 363 |
| ங. | சிவநேசனுக்கு வாழ்த்து. | 364 |
| ச. | திருநெல்வேலிஜில்லா ஸநாதனதர்ம மகாநாடு. | 365 |
| ரு. | சைவசமயத்தின் சிறப்பியல்பு. | 369 |
| சா. | ஆன்றோர் அமுதமொழிகள். | 375 |
| எ. | சிலப்பதிகாரம். | 376 |
| அ. | போத்திபூசை | 381 |
| கூ. | பொதுவுடைமை. | 382 |
| ய. | உருத்திரன். | 386 |
| கக. | நாஸ்திகர் யார்? | 389 |
| கஉ. | கடவுட் காட்சி | 390 |
| கங. | பெயரும்பொருளும் | 391 |
| கச. | ஆதிபகவன். | 392 |
| கரு. | சங்கரலிங்கஉலா (முகவுரை) | |


ஆசிரியர் ராம. து. ராம. இராமசாமி செட்டியார்,

பலவான்குடி.

சென்னைப் பதிவு எண் 2302.

# செய்தித் திரட்டு.

**உன்னூர்:**—குமாரவிநாயகர் திருக்கோயிலில் சித்திரை சுஉ திருவோணநாள் நடராஜரபிடேகமும், திருவாசக பாடசாலையில் சித்திரை அஉ திருநாவுக்கரசு நாயனார் குருபூசையும் சிறப்பாக நிறைவேறின.

இம்மதி உஎஉ மூலநாள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை நடைபெறும்.

**குன்றக்குடி:**—முருகப்பெருமான் திருவவதாரவைபவம் சிவஸ்ரீ சதாசிவபிர்மம் அவர்களால், அன்பர்கள் உதவியுடன் வழக்கம்போல் இம்மதி உகூஉ தொடங்கி உஅஉ வரை இனிது நடைபெறும். ஒவ்வொருநாளும் மயூரகிரி வள்ளற்குத் திருமஞ்சன திருவாராதனைகளும், பிரசங்கங்களும், பிராமணபோஜனம் மாகேசுவரபூசையும், ஆறுநாள் சித்திரத்திருவுருவத் திருவுலாவும் செய்யப்பெறும்.

**கோநகர்:**—கற்பகவிநாயக கலாசாலையில் சித்திரை அஉ சதயநாள் காலை கற்பகவிநாயகப் பெருமானுக்கும் சமயாசாரியசுவாமிகட்கும் அபிஷேக ஆராதனைகளும், திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திர உபந்நியாசமும், நண்பகல் மாகேஸ்வரபூஜையும், இரவு மேளதாள விருதுகளுடன் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவுலாவும் நடத்தப்பெற்றன. கற்பகவிநாயக கலாசாலையின் தேவார மாணவர்களால் இன்னிசைக் கருவிகளுடன் தேவார பாராயணம் செய்யப்பெற்றது.

**நேமத்துப்பட்டி:**—திருநாவுக்கரசர் வித்தியாசாலையின் 7—வது ஆண்டுவிழா, சித்திரை அஉ இனிது நடைபெற்றது. முற்பகல் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவுலாவும், திருமடத்திற் குருபூசையும், திருநாவுக்கரசர் புராண படனமும், பிற்பகல் 'சிவநேசன்' இராமசாமி செட்டியார் தலைமையில் மறைத்திரு. மீனாக்ஷி சுந்தரம் ஐயர் விரிவுரையும், மாணவர்களின் பேச்சு நடிப்புகளும் நிகழ்ந்தன. தலைவர் கல்வியின் அவசியத்தையும், திருநாவுக்கரசு சுவாமிகளின் புராணசாரத்தையும் விளக்கினர். அன்பர் பலர் குழுமியிருந்து இன்புற்றனர்,

**ஆவினிப்பட்டி:**—விவேகானந்தர் கல்விக் கழகத்தின் ஆறுவதாண்டு பதினொன்றும் மாதக்கூட்டம் 27—4—33 ல் கீழச்சிவப்பட்டி சாண்டோ திரு. மு. லெ. சோமசுந்தரச் செட்டியார் தலைமைவகிக்க, திரு. கரு. பெரியகருப்பன் செட்டியார் வரவேற்பு வழங்க, மாணவர் தமிழ் மறைகூறி விரிவுரை நிகழ்த்த, ஆசிரியர் திரு. வ. மு. இரத்திநேஸ்வரையர் பல ஆதாரங்களுடன், "கற்றலின் அவசியம்—ஆராய்ந்து நன்னெறி நிற்றலின் உயர்வு" என்பன விளக்கி, 'கற்றாய்ந் தொழுகல்' என்னும் விரிவுரை நிகழ்த்த, தலைவர் கல்வியின் அவசியம்—தமிழ்நாட்டவர் தமிழையே முதன்மையாகக் கற்கவேண்டும்—மேனாட்டவர் கல்வியால் முன்னேறினர்—ஆகாய விமானங்கண்டது பண்டைச்சரித்திரங்களின் உண்மையைவிளக்குகிறது—இளைஞர்கள் உடலுறுதியையும் கலையறிவையும் பெறல்வேண்டும் எனவிளக்கி, கழகத் தலைவரின் சீரிய செயலையும் ஆசிரியரமைந்த முறையையும் கூறிச் சிலநீதிகள் புகல இனிது நிறைவேறியது.

---



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

OFFICE OF THE REGISTRAR OF ... 16 FEB 1934 MADRAS


# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு சூ } பலவான்குடி—ஸ்ரீமுக—வைகாசி { திங்கள் ய.


உடையா னுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## காந்தியாரின் கைதவம்.

காந்தியார் சிலதினங்களாக மேற்கொண்டசெயல் செய்தவமா? கைதவமா? என்பது சிந்தித்தற் குரியது.

"தவமாவது மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கலும், கோடைக்கண் வெயினிலை நிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றாற் றம்முயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்து, பிற வுயிர்களை யோம்புதல்." எனப் பரிமேலழகர் தவத்தின் இயல்பை விளக்கியுள்ளார்.

இதுவே செய்தவமாகும். "தவமும் தவமுடையார்க் காகும்" என்றதனால், அதனை அஃதிலார் மேற்கொள்வது அவமேயாகும். அதுவே பயனில் முயற்சியாய்க் கைதவம் எனப் பெயர் பெறும்.

காந்தியார் எப்பயன் குறித்து இக் கருமத்தில் தலைப்பட்டார் எனின், ஆசார வீனர்களை ஆலயத்துட் புக விடவேண்டியே. அதுவும் அவர்களைப் புனிதமாக்கக் கருதியா? ஆலய நன்மை குறித்தா? என ஆராய்ந்தால் தனித்தொகுதி வேண்டாது ஒழிதற்பொருட்டென்பதே பெறப்படும். தனித்தொகுதிப் பிரதிநிதித்துவச் சச்சரவால் தான் கொண்ட எண்ணம் பலிக்காமற்போனதுகொண்டே

பட்டினி கிடந்து பழிசுமத்தத் தலைப்பட்டார். ஐயோ! பாவம்!! காந்தியார் மாய்ந்தால் உலகம் அத்தமிக்கும் என்று கூறும் சிலரும், சுயநலங்குறித்த சிலரும் சேர்ந்து, பூனா ஒப்பந்தம் செய்துவிட்டதாகவும், அதற்கு உலக முழுதும் கட்டுப்பட்டுவிட்டதென்றும் கூறமுற்பட்டார்கள். இந்தச் சமயத்திற்றான் சநாதனிகளுக்கு விழிப்பு வந்தது. வேதாகமாதி நூல்களை அருளிச்செய்த இறைவர் கட்டளையையும், அவரது அருளைப் பூரணமாகப் பெற்ற ஆன்றோரது ஆசாரணைகளையும் மேற்கொள்ளாத ஒருவரை மகாத்மா—மகாத்மா என்று வானளாவப் புகழ்ந்து மதிமோசம் போகலாகாது; ஆலய நிந்தை புரிபவராகிய அவருக்கும் சைவ வைஷ்ணவ ஆலயங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை; ஆதலால், அவர் ஆலய விஷயங்களிற் றலையிட அருகராகாரெனத் தீர்மானித்தனர்.

ஆகவே, தனக்கிருந்த மதிப்புக் குறைந்து எதிர்ப்பு அதிகரித்தகாரணத்தால் 8—5—1933 முதல் இக் கைதவம் மேற்கொண்டாரென்பதே அமையும். இத்தவத்தால் எதுவும் ஆவதுமில்லை; அழிவதுமில்லை. ஆயினும், ஆலயங்களுக்காவது ஆசார வீனர்களுக்காவது எவ்வித பயனும் ஏற்படத் தக்கதில்லை.

இவர் கருத்துக்கு ஈடுபட்டகக்ஷி நியாயமா? எதிர்க்கக்ஷி நியாயமா? என்று நடுநிலையோடு ஆழ்ந்து சிந்தித்து முடிவுகட்ட முற்படாமல், பட்டினிகிடந்து பழிபோடுவதாற் பயனுண்டாகுமா?

ஆசாரவீனர்களை உயர்த்த வேண்டுமென்றால், அவர்களை ஆசாரசீலர்களாக்க முயல்வதே தகுதியாகுமன்றி, ஆலய அமைப்பேதென்னவென்றறியாத இவர், ஆலயத்திற் புகத்தகாரைப் புகுத்தி யெல்லாரையும் சமநிலையாக்கப் பாடுபடுவது, கழுதையைக் குதிரையாக்க முயன்ற கதையோடொக்கும். இவரது தவம் கைதவமே யன்றிச் செய்தவமாகாது. சநாதனிகள் இக் கைதவங் கண்டு மயங்குவதில்லை. தவத்தினிலக்கணம் சாத்திரவுணர்ச்சியால் மேம்பாடுடைய ஜனதனதர்மிகளே யறிவர்.

"நீஇ ராடல் நிலக்கிடை கோடல்
தோஒ லுடுத்தல் தொல்லெரி யோம்பல்
ஊரடை யாமை உறுசடை புனைதல்
காட்டி லுணவு கடவுட் பூசை
ஏற்ற தவத்தின் இயல்பென மொழிப."

என்ற இலக்கணப் பொருத்தம் எதுவுமின்றி, பத்திரிகைகளில் விளம்பரம் செய்து, பக்கத்தில் தாதுப்பரீக்ஷகரும் தன் சகாக்களும் சூழ உடலுறுதி மனவுறுதி யற்று உறக்கமும் மயக்கமு முற்றுக் கவலைக் கடலிலாழ்வதுதான் காந்தியார் கடுந்தவம் போலும்.

186929

# ஞானவாசிட்டம்.

"அருமறை நால்வே றுகைபால் வருணம்
ஆச்சிர மங்களும் நான்காம்
தருமம் யாகாதி கருமமும் மறையின்
றகைமையிற் றேன்றின மறையும்
கருமநூல் ஞான நூலென இரண்டாம்
கருமநூ லிவனருச் சனைக்கு
வரும்வினை யுணர்த்தும் ஞானநூ லிவன்றன்
வடிவிலா வடிவினை யுணர்த்தும்."

என்னும் பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற் செய்யுட் கருத்தின்படி, இறைவனருளிய முதனூலாகிய வேதம் கருமகாண்டம் ஞானகாண்டம் என இருவகைத் தாகும். கருமகாண்டம் சரியை கிரியாயோக சாதனங்களையும், ஞானகாண்டம் தத்துவாதீதத் தனிமுதலையும் உணர்த்தும்.

வினைக் கீடாக வடிவெடுத்த மக்கள் எவரும் கருமகாண்டங்களை யுணர்ந்து, அவை கூறும் அறநெறிக்கண் ஒழுகி, அதனாற் பெரும் பயன் றுய்த்தலோ டமையாது, மேலே ஞான நூற்களையும் உணர்ந்து, தத்துவ விசாரஞ் செய்து, தேகாத்ம புத்தியொழிந்து, ஆன்மநிலை யறிந்து, ஆன்ம நாயகனைக்கூடி அத்துவித நிலை யடைந்து முத்தியின்பந் துய்த்தலே முடிந்த முடிபாய்ப் பெறத்தகும் பேறும்.

ஞானநூல்கள் அளப்பிலவாயினும், அவற்றுள் ஞானவாசிட்டம் என்பதும் ஒன்றாம். இந்நூல், தேனொழுகு துழாயலங்கற் றிருமார்பனாகிய திருமாலின் றசாவதாரங்களுள், பரமசாந்த திவ்ய மங்கள சொரூபமாய்த் திருவவதரித்த ஸ்ரீ இராமபிரானுக்குப் பிரமதேவரின் மானஸ புத்திரராகிய வசிட்ட மகாமுனிவர் அருளிய ஞான நூலாகும். இது, பல கதாரூபங்களுடன் ஞான நிலையைப் போதிப்பது. இவ் ஞானநூல் யாவர்க்கும் பொதுவேயாயினும் சிறப்பாக வேதாந்த மடாலயங்களிற் பெரிதும் போற்றப்பெறுகின்றது. இதனைக் குருமுகமாகப் பத்திவிநயத்துடன் கேட்டுச் சிந்தித்துத் தெளிபவர், சாந்த சீலராய் மனோலயமுற்றுப் பிரமத்தியானத்துடன் பிரமபாவனையிலிருந்து பிரம்மயமாய்ப் பேரின்ப முத்திப் பேற்றுக்குரியராகின்றனர் என்பது இந் நூற்கருத்து. இந் நூலிற் பரந்து விரிந்து சிறந்தபொருள்களாலும், படித்துணர்ந்து பயன்றுய்ப்பாரின் அனுபவ சித்தாந்தத்தாலும், அது வச்சிர ஸ்தம்பமென நின்று நிலைபெறும். குருமுகமாகக் கேட்டுத் தெளியக்கூடிய நூலாதலின் ஈண்டு விரித்தற்பாலதன்று.

அன்பினால் மகார்க்கு இதஞ்செய்யும் அன்னையும் அருள்வடிவமாகிய இந்நூற்கு நிகராகாள். பெற்ற தாய் பிறவியை யுண்

டாக்கும் விஷயவாசனைகளை வளர்ப்பவளா யிருத்தலினாலும், இந் நூல் பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும் வீடும் பெருக்கும் பெற்றியுடைத்தா யிருத்தலினாலும், அன்புடன் தன்னைப் பெற்ற அன்னையும் இந் நூற்கு நிகராகாள் என்பது,

"தெருளுறு மகார்க்கிதஞ் செய்யு மன்பினால்
அருமைவா சிட்டநூற் கன்னை யொப்பளோ
உரியதாய் பிறவியை யுள்ள தாக்குவள்
பெருமைவா சிட்டமிப் பிறப்பை மாற்றுமே"

என்னும் இந் நூற் செய்யுள் இனிது விளக்கும்.

---

## சிவநேசனுக்கு வாழ்த்து.

[இராமாயண வெண்பா ஆசிரியர் கோட்டையூர் மறைத்திருவாளர் வித்வான் சுப்பிரமணிய ஐயர் அவர்கள்.]

1. சீர்பூத்த கடவுடையார் புவிமடந்தை திருமுகம்போற்
   சிறப்பு வாய்ந்த
   கார்பூத்த வளங்கொள்பல வான்குடியாம் திருநகர்க்கண்
   கலைவல் லோர்கள்
   ஏர்பூத்த வுளந்திகழும் சிவநேசன் பத்திரிகை
   ஏற்றந் தாங்கத்
   தார்பூத்த தனவசிய னிராமவள்ளல் பெரும்புகழே
   சார்பா மன்றே.

2. தவநேசம் பொருந்திவளர் சான்றோர்க ளிதயமெனும்
   களிக்கண் மிக்க
   பவநேசம் பொருந்தாது பலகலையின் தெளிவருளிப்
   பாசம் வீசும்
   சிவநேசம் சிறந்துவளர் சிவநேசப் பத்திரிகை
   செழிக்கச் செய்தற்
   கிவனேசம் பன்னனெனு மிராமவள்ளல் புகழ்புலவோ
   ரிசைக்கற் பாற்றே.

3. ஆத்திகத்தி னுரம்பெருக்கி நாத்திகத்தி னிறங்கருக்கி
   அறிஞர்க் கேற்ற
   சாத்திகத்தி னறந்தெருட்டிச் சைவசித்தாந் தத்தனத்தைத்
   தாங்கி யோங்கும்
   கோத்திரத்திற் பெருமைகொண்ட சிவநேசப் பத்திரிகை
   குறிக்குந் தன்பொன்
   நேத்திரத்திற் சிறப்பருளு மிராமவள்ளல் புகழுலகர்
   நினைப்பாம் வாழி!

---

# திருநெல்வேலி ஜில்லா ஸநாதன தர்ம மஹாநாடு.

---

22—4—1933

[வரவேற்புக் கமிட்டித்தலைவரும் ஸ்ரீவானமாமலை மடம் ஆஸ்தான வித்துவானுமான ஸ்ரீமான், என். டி. சடகோபையங்கார் அவர்களின் வரவேற்பு உபந்நியாசம்.]

அக்ராஸநாதிபதி யவர்களே! ஆஸ்திகப்ரமுகர்களே!!

இன்று நான்குனேரி என்று வழங்கும் இந்த வானமாமலை திவ்ய க்ஷேத்திரத்தில் எங்களுடைய அழைப்புக்கிணங்கிக்கூடியிருக்கும் தங்களைத் திருநெல்வேலி ஜில்லா ஸநாதன தர்ம மஹாநாட்டின் வரவேற்புக் கமிட்டியின் சார்பாக நான் அநேக வந்தனத்துடன் வரவேற்கின்றேன். இதே முதலாக இவ்வளவுபெரிய ஸநாதனதர்மிகளின் கூட்டமானது இவ்வூருக்கு ஒருஅரிய ஸந்தர்ப்பமா யிருப்பதுபற்றி இந்த ஸ்தலத்திற்கு விசேஷப்பெருமை எற்படுகின்றது. இந்த ஸ்தலம் இப்பாரத பூமியிலுள்ள எட்டு ஸ்வயம் வியக்தக்ஷேத்திரங்களில் உத்தமமானது. ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமம் ஆவிர்ப்பவித்ததும் இந்த க்ஷேத்திரத்தில்தான். முற்காலத்தில் க்ஷேத்திரமஹாத்மியங்களையும் தர்மவியவஸ்தைகளையும் தெரிந்து கொள்வதற்காக எல்லா மஹரிஷிகளும் இந்த க்ஷேத்திரத்தில்தான் கூடினார்கள். அதற்கறிகுறியாக அநேகம் ரிஷிகள் அர்ச்சாரூபமாக இவ்விடம் சந்நிதியில் விளங்குவதை இப்பொழுதும் பார்க்கலாம். இன்னும் வைதிகதர்மங்களையும் வைதிக மதங்களையும் நிலைநிறுத்துவதற்காக அவதரித்தஉத்தமராகிய ஸ்ரீராமாநுஜாசாரியரின் பரம்பரைபீடத்தில் தர்மாசார்யர்களாக விளங்கும் ஸ்ரீவானமாமலை மடம் ஸ்ரீராமாநுஜஜீயர் ஸ்வாமிகள் சந்நிதியின்முன் அவர்களது பூர்ண அநுக்ரகத்தை அவலம்பித்து நடைபெறுவதாலும், இம்மஹாநாடு மற்ற எல்லா மஹாநாடுகளிலும் மிகச் சிறந்ததென்பது யாவரும் அறியக்கூடியதே. எல்லா மஹான்களும் வெகு தூரத்திலிருந்தும்கூட சரீரசிரமத்தையும், பொருட்செலவையும் பாராட்டாது இங்கு விஜயம் செய்திருப்பது, அவர்களின் ஆஸ்திகத்தன்மையையும், மதஉணர்ச்சியையும் வெளிப்படுத்துகின்றது.

இப்பொழுது ராஜ்ய முன்னேற்றத்திற்காக சிலர் தீண்டாமை என்பது உலகில் இருக்கக்கூடாது என்றும், தீண்டாதாரின் ஆலயப்பிரவேசம் முதலியன இக்காலத்திற்கு இன்றியமையாதவைகளென்றும், இவைகள் கூடாவென்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் கிடையாதென்றும் சொல்லி, நமது புராதனதர்மத்தை அழிக்க முன்வந்திருப்பது அனைவருக்கும் தெரிந்தவிஷயமே. ஆனால் இப்பொழுது ஆரம்பித்திருக்கும் இக்கிளர்ச்சியின் முடிவு என்னவாகுமென்று

இதன் தலைவர்களாகிய காந்திஜீ முதலானவர்கள் உணரவில்லையென்றே சொல்லவேண்டும். காந்திஜீயவர்களுக்கும் அவரது சிஷ்யர்களுக்கும் நல்லறிவு வரவேண்டுமென்று பகவானைப் பிரார்த்திக்கின்றேன். இக்கிளர்ச்சி தீண்டாதாராலும்கூட விரும்பப்படவில்லை:- Elden Lord Chancellor (எல்டன் லார்ட் சான்ஸலர்) என்பவர் கிருஸ்தவ மதப்படி சர்ச்கட்டி கிருஸ்தவக் கொள்கைகளுக்குமாறாக விருப்பவர்கள் சர்ச்சுக்குள் வரக்கூடாதென்று தீர்மானித்ததை மாற்ற முடியாதென்றுநாளிதுவரை தீர்ப்புகள்பிறந்துகொண்டிருக்கின்றன. இந்தியாவில்எல்லோருக்கும் பொதுவான மதம்என்பதுகிடையாது. இவ்விதம் பல மதஸ்தர்களடங்கிய ஜனசமூகத்தின் மெஜாரிட்டியைக்கொண்டு ஒருமதத்தின் கொள்கையைச் சீர்திருத்த முயல்வது பெருந்தவறு. மேலும் மெஜாரிட்டியைக் கொண்டு பழக்கவழக்கங்களை மாற்றக்கூடாதென்று அனேக தீர்ப்புகளுமிருக்கின்றன. சட்டத்தைக் கொண்டு நமது மதக்கொள்கையை மாற்றுவதற்கு இப்பொழுது என்ன நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. காந்திஜீயைத் திருப்தி செய்வதற்காகவே இச்சட்டங்களை நிறைவேற்ற வேண்டுமா என்று அரசாங்கத்தார் சற்று ஆலோசிக்க வேண்டும். அவரைத் திருப்தி செய்வதால் தீண்டாத வகுப்பினரைத் திருப்தி செய்ததாகவு மாகாது. தீண்டாதார்கள் காந்திஜீயைத் தங்கள் பிரதிநிதியாக ஒப்புக்கொள்ளவில்லை. காந்திஜீ சொல்வதைக் கேட்கவும் அவர்கள் தயாராகஇல்லை. உதாரணமாக: கட்குடியை நிறுத்த வேண்டுமென்று காந்திஜீ அவர்களுக்கு உபதேசித்தபோது அது நடைமுறையில் பயன்படவில்லை என்பது எல்லோரும் அறிந்த விஷயமே. இம்மாதிரி தீண்டாதார்களை ஒழுக்கம் சரியாகஇருக்கவேண்டுமென்று சொல்வது இப்பொழுது அவர்களை நிந்திப்பதாகவே இருக்கிறது. Polshevism (பொதுவுடைமைக்கட்சி) போல் அவரவர்கள் தங்கள் தொழில் முதலியன செய்யாமல் உலகம் நடப்பதையே தடுப்பதாகக் காந்திஜீயின் உபதேசமிருக்கின்றதென்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். அரசாங்கத்தார் இம்மாதிரியான சட்டங்களை அனுமதிப்பதானல் மேல்வரும் கேடுகளை ஆலோசித்துப் பார்க்கவேண்டும். ஆலயப்பிரவேசம் முதலிய சட்டங்கள் அமுலுக்கு வந்தால், அர்ச்சகர்கள் கோவில்களில் பூஜைசெய்ய மாட்டார்கள். சேவார்த்திகளும் கோவிலுக்குவர மார்க்கமில்லாமல் போய்விடும். கோவில்களின் நோக்கமும் பாதிக்கப்பட்டு ஷை. நோக்கங்களை அநுசரித்த கட்டளைகள், மானியங்கள், பண்டுகள் முதலியன அந்தந்த தார்மிகர்களின் கொள்கைக்கு மாறாகப்புதுமனிதர்கள் கையில் பலாத்காரமாகப் பிடுங்கிக் கொடுக்கப்பட்டதாகிவிடும். பெரியோர்களின் மனதில் தீராப் புண்களையும் உண்டாக்கும். சத்தியாக்கிரகம் போன்ற கலகங்கள் ஆங்காங்கு ஆரம்பிக்கப்பட்டுவிடும். பணக்காரர்களின் சொத்துக்களைப் பணமில்லாதவர்களுக்குப்



பங்கிட்டுக் கொடுப்பதுபோலவே இச்சட்டங்களிருக்கின்றன. இதுபோன்ற கஷ்டங்களை நினைக்கும்போது மனது மிகவும் கவலையில் ஆழ்கின்றது. மதசம்பந்தமான ஒழுங்கீனத்திற்கு ஏற்கனவே நாம் ஆளாகியிருக்கும் நிலைமையையும், இந்துசமூகத்திற்கும், மதத்திற்கும் ஏற்படவிருக்கும் ஆபத்துக்களையும், நினைக்கும்போது ஆஸ்திகர் ஒவ்வொருவருடைய மனதும் மிகப்பதரும் என்பதில் ஐயமில்லை. ஆனால் ஒரு விஷயத்திற்கு காந்திஜீயை நாம் பாராட்டவேண்டும். இதுபோன்ற மஹாநாடுகளுக்கு அவரே முக்கிய காரணம். ஸனாதனிகளாகிற நாம் பகவத் சந்நிதியில் பொறுப்பை வைத்துத்தர்மத்தைக்காக்க முயற்சித்தோமானல், தர்மம் தானகவே நிலைபெறுமென்பது நிச்சயம். இதற்கு ஆஸ்திகர் அனைவரும் இம்மஹாநாட்டிற்கு விஜயம் செய்திருப்பதே முக்கிய அத்தாக்ஷியாகும்.

கீழ்ச்சாதியாருக்கு அவசியம்செய்து கொடுக்கவேண்டிய லௌகிக வசதிகளைச்செய்து, அவர்கள் ஆகாரத்திற்குத் திண்டாடாமல் வாழும்படியான சௌகர்யங்கள் பல செய்ய வேண்டியிருக்கின்றன. ஒருவிதத்திலும் பயன்படாத இந்த ஆலயப்பிரவேசம் முதலான கிளர்ச்சிகளைச் செய்வதைவிட மேற்கூறிய காரியங்களைச்செய்வது மிகச்சிறந்ததாகும். ஆனல் காந்திஜீ முதலானவர்கள் சாஸ்திரம் தங்களுக்குத் தெரியாதென்றும், சாஸ்திரங்களில் தீண்டாமை முதலானவற்றிற்கு ஆதாரம் கிடையாதென்றும், சாஸ்திரங்களில் தங்கள் மனதிற்குப் பிடித்த பாகந்தான் பிரமாணம் என்றும், இவ்விதம் முரண்பட்ட வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு தங்கள் கொள்கையை நிலைநாட்ட முயல்வது விந்தையாக விருக்கிறது.

## ஸனாதன தர்மத்தின் பெருமை.

நமது தர்மம் ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டதல்ல. அது அனாதியானது. அதுபற்றியே அதற்கு சனாதனதர்மம் என்று பெயர் வழங்கப்படுகிறது. "ஸநாதனஸ்ய தர்ம:" என்று பகவானுடைய அங்கீகாரம்பெற்ற தர்மம் என்றும் பொருள் உண்டு. இத் தர்மத்திற்கு வேதம், தர்மசாஸ்திரம், புராணம், ஆகமம், சிஷ்டாசாரம் என்பவை பிரமாணங்கள். இப் பிரமாணங்கள் ஈசுவரனுடைய ஆக்ஞாரூபமானவை. "ச்ருதிஸ்ம்ருதீ மமை வாச்ஞா" என்று பகவானே சொல்லியிருக்கிறார். ச்ருதியாவது வேதம், ஸ்மிருதியாவது தர்மசாஸ்திரம்.

'ச்ருதிஸ்து வேதோவிக்ஞேயோதர்மசாஸ்த்ரம்துவைஸ்ம்ருதி' புராணம் ஆகமம் முதலியவைகளும், ச்ருதி, ஸ்மிருதிகளின் அர்த்தங்களையே விரிவாகச் சொல்லுகின்றன. பகவானுடைய கட்டளைப்படி நாம் நடவாவிட்டால் இப்பிறவியிலும், மறுபிறவியிலும் அனேக துன்பங்களை அனுபவிக்க நேரிடும் என்பது இந்துமதத்தின் கொள்கை.

"ஆச்ஞாச்ஞேதீ மம த்ரோகீ
க்ஷிபாம்யஜஸ்ரமசுபாநா ஸுரீஷ்வேவ யோநிஷு"

(எனது கட்டளையைமீறுபவர்கள் எனக்குச்சத்ருவாகிறார்கள். அவர்களைத் தாழ்ந்த ஜன்மங்களில் தள்ளிவிடுகிறேன்) என்று கீதாசாரியர் சொல்லுகிறார். இக்காலத்தில் ஈசுவரன் இல்லை என்று சொல்லுபவர்கள் ஒருவருமிருக்கமாட்டார்கள். காந்திஜீயவர்களும் ஈசுவரனை ஒப்புக்கொள்ளுகிறார். நமது சிற்றறிவைக்கொண்டு பார்ப்போமானால் நமது இஷ்டப்படியெல்லாம் கைகூடுவதில்லை. சில விஷயம் நாம் எதிர்பாராமலே நன்றாய் முடிந்துவிடுகிறது. அப்பொழுது நாம் "அதிர்ஷ்ட வசத்தால் நடந்தது என்று சொல்லுகிறோம்." நமது மனச்சாக்ஷியானது நமது இச்சைக்கும் முயற்சிக்கும் மாறாக அதிர்ஷ்டம் என்று ஒன்று இருக்கிறதென்று உறுதியாகக் கூறுகின்றது. அந்த அதிர்ஷ்டமானது ஈசுவரனுடைய சங்கல்பத்தைத் தவிர வேறல்ல. நன்கு ஆராய்ந்து பார்த்தால் இவ் விஷயத்தை ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளாமலிருப்பதற்கில்லை. நமது இந்துமதமும் இதைத்தான் மூலாதாரமாகக் கொண்டிருக்கிறது.

ஒருகாலத்தில் இந்த நமது சரீரத்தைவிட்டு ஆத்மா பிரிந்துவிடுவதை நாம் அறிகிறோம். அவ் வாத்மா இச் சரீரத்தினின்றும் பிரிந்தபிறகு இச் சரீரத்திற்கு நடக்கவோ, பேசவோ, அல்லது நல்லதைத் தெரிந்துகொள்ளவோ சக்தியில்லை. ஆகவே, இச் சரீரம் நமது தேவாலய உற்சவகாலங்களில் மனிதனால் உட்புகுந்துகொண்டுவரப்படும் ஒருவகை உருவத்திற்கு ஒப்பானதே. சிலர் ஷெடி உருவங்களைப்பார்த்து மனிதனென்று எண்ணுவதுமுண்டு. அந்த உருவங்களில் மனிதன் உட்புகுந்தபொழுது அவை ஆடுவதையும், குதிப்பதையும் பார்க்கிறோம். அம் மனிதன் வெளியேறிவிட்டால் வெகு துர்நாற்றத்திற்குரிய காகிதப் பசைகளைத் தவிர வேறொன்றுமில்லை. அதுபோல இவ் வாத்மா சரீரத்திலிருக்கும்போது சுகதுக்கங்களை இந்த சரீரத்துடன் கூடி அனுபவிக்கிறதென்பது நமது மதத்தின் உண்மை. ஆனால், நாம் இவ்விடத்தில் ஒன்று கவனிக்க வேண்டும். சில ஆத்மாக்கள் சரீரத்தில் சந்தோஷமாக வாழ்நாளைக் கழிப்பதற்கும், சிலர் வியாதியாலும், புத்திரர் பந்துக்களில்லாமலும், பசியாலும், வருந்துதற்கும் என்ன காரணம்? இதற்கு நமது இந்து ஸநாதனதர்மத்தில் தெளிவாக இருப்பதுபோல் வேறு மதங்களில் கிடையாதென்பது திண்ணம். மேற்கூறியபடி பகவானது கட்டளையை அனுசரித்து நடப்பது நல்வாழ்விற்கும், அதை மீறி நடப்பது துன்பத்திற்கும் காரணமென்றும், மேற்குறித்த கீதை, வேதம் முதலியவைகளில் நன்கு விளங்கும்.

(வரும்.)

உ

# சைவசமயத்தின் சிறப்பியல்பு.

[ திருமதி: ஈ. த. இராஜேசுவரியம்மாள் எம். ஏ. எல். டி. ]

( முற்றொடர்ச்சி: திங்கள் - கூ, பக்கம் - 328. )

ஆயினும், முடிவில் யுக்தி அநுபவத்திற்கு அவ்வாறு சர்வ வல்லமையுள்ள பெருமான் பிரதிநிதியாய் அவர்கள் உலகக்கடுமையில் சலனமற்று நிற்கவில்லை. அச்சமய்குரவர்கள், நல்லொழுக்கமுள்ள பெரியோர்களாயினும், சாதாரண மனிதர்களால் வழிபடத்தக்க யோக்கியதை உடையவர்களாயிருந்தும், அவர் இயற்கைப் பொருளின் இயற்கைத் தத்துவத்தை அவசியமான காலங்களில் மாற்றத்தக்க சக்தி வாய்ந்தவர்கள் அல்லவென்பது அவர்கள் சரித்திரங்களால் வெளியாகிறது. நமது சமயகுரவர்களில், நீற்றறையிலிட்ட அப்பரோ எழுநாள் சென்ற பின்னர் வெளிவந்து,

'மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை யிணையடி நீழலே.'

என்றுபாடினார். சம்பந்தர் மடத்தைச் சுற்றிச் சமணர் கொளுத்தியதீயை,

'செய்ய னே! திரு வாலவாய் மேவிய
ஐயனே ! அஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே."

என்றமாத்திரத்தில் பாண்டியனை அத்தீ கொல்லாது வெப்பு நோயாய்ச் சூழ்ந்தது. பிறகு சமணருடன் வாதிக்கும்போது சம்பந்தர் நெருப்பிலிட்ட ஓலை தீயில் அழியாது நின்றதும், ஓடும் நீரிலிட்ட ஓலை வெள்ளத்தை எதிர்த்து எதிர்நோக்கி நெடுந்தூரஞ் சென்றதும் ஆன இத்தகைய அற்புதங்கள் நேர்ந்திராவிடின், சைவசமயம் பேரின்றி மறைந்துபோயிருக்குமன்றோ? மேற் கூறிய மேல்நாட்டுச் சமயகுரவர்கள் தங்களைக் கடவுளின் பிரதிநிதி என்றார்கள். நமது சமய குரவர்களோ இத்தகைய அற்புதஞ் செய்தும் தம்மைக் கடவுள் பிரதிநிதி என்று கூறவில்லை. இவையெல்லாம் இறைவன் செயலென்றனர். சமணர் தந்த விஷம் அமுதானதும், கொலையானை அவரைக்கண்டு நடுங்கிப்பணிந்ததும், கற்பாறைகடலில் சடைப்படகுபோல் அவரைச் சுமந்து சென்றதும் கடவுள் திருநாமத்தின் உச்சரிப்பால் ஏற்பட்டனவென்பர், ஆளுடைய வரசு :—

"துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்தி டாதே
அஞ்செழுத் தோதி நாளும் அரனடிக் கன்ப தாகும்
வஞ்சனைப் பால்சோ றாக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமு தாக்கி வைத்தார் நனிபள்ளி யடிக ளாரே."

“மலைக்கொ ளானையை மயக்கிய வல்வினை
நிலைக்கொ ளானை நினைப்புறு நெஞ்சமே
கொலைக்கை யானையுங் கொன்றிடு மாதலால்
கலைக்கை யானைகண் டீர்கட வூரரே.”

‘கல்லி னோடெனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றிஉய்ந் தேனன்றே.”

திருஞான சம்பந்தரும் அப்பரும் இவ்வாறு சமணர் சூழ்ச்சிக்கு இலக்காய் மாளாமையே, அவர்கள் தெய்வத்தன்மை பொருந்தி உலகத்தில் உலாவினார்களென்பதற்குச் சான்றாகும். மேல் நாட்டுச் சமய குரவர்கள்மரித்தது போல் வடநாட்டிலும் டேஸ் பகதூர் (Tej Bahadur ) முதலிய சீக்கிய (Sikhs) குரவர்களும், தமது மதத்தை நிறுவினும் புறச்சமயர் கைக்கு இரையாயினராதலால், வேறு சமயங்களிலுள்ள சமய குரவர்களைப்போல் பல ஈனமான மனித தத்துவம் பெறாமல் நமது சமயகுரவர்கள் தேகமானது காய சித்தியிலும், சிறந்த உடல்வன்மையாய், மாறாது நின்ற தெய்வத்தன்மையும் வாய்திருந்தது. அவ்வாறிருந்தும், மான் காட்டி மானைப்பிடிப்பதுபோல் சிவபெருமான் இவர்களை உலகத்தில் அனுப்பினார் என்பதற்கு அத்தாட்சியாய், உலகத்திலுள்ள பாமர ஜனங்களுடன் யாதொருஆடம்பரமுமின்றி சகோதர வாஞ்சையாய் உலவியதுடன்,

‘எவரேனும் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமும் கண்டா லுள்கி
யுவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.”

என்னும் இலக்கணம் பொருந்தி இருந்தனர். ஆயினும் இவர்கள் ஏழைகளல்ல. புகலி வேந்தன் தந்தை சிவபாத விருதையர் சீகாழிக்குத் தலைவராகக் காணப்படுகின்றார். இவர்குடி சீகாழிக்குத் தலைமை வாய்ந்திராவிடில் தம்மை ‘மன்னன்’ என்றும், ‘கோன்’ என்றும், ‘வேந்தன்’ என்றும், தமது திருக்கடைக்காப்பில் கூறார் என்பது திண்ணம். அப்பர் குடும்பத்தை உற்றுநோக்கில் அவரும் அக்காலத்திய பெரியபிரபு என்றே காட்டுகின்றது. அவர் தமக்கையை மணக்கக் கலிப்பகையாகிய அரசன்சேனாபதி நிச்சயித்திருந்தாரெனில் சாதாரண குடும்பமாய் அப்பர் இல்லம்இருந்திராதென்பது திண்ணம். திருமறுமாற்றத் திருத்தாண்டகம் பல்லவன் மந்திரி முதலானோரைப் பார்த்து அளித்தவிடை. இது தன்மைப்பன்மையிலிருக்கிறது. ‘யாம்’ ‘நாம்’ என்று கூறுவதற்கு, உலக அந்தஸ்து முக்கியமானது. வைதிக ஒழுங்கில், ‘அடியேன்’ ‘நாயேன்’ என்றவர், லௌகிக ஒழுங்கில், ‘யாம் வாரோம்’ ‘நாம் குடியல்லோம்,’ ‘நாம் இடையோம்,’ என்றதால், இத்தகைய மாற்றங்கள் உலகத்தில் அவர் பெற்றிருந்த பதவியையே காட்டுகின்



றன. இதனால், அப்பரும் அரசஅந்தஸ்து அல்லது அதற்குத் தக்க பிரபுத்தன்மை வாய்ந்தவரென்பது நிச்சயம். சுந்தரரை உற்றுநோக்கின் அவரும் அரசகுமாரனாக வளர்ந்தாரென்பதும், தமிழ்நாட்டு மூவேந்தரும் இவரைப் போற்றி நிற்கத் திருப்பரங்குன்றம் முதலிய தலயாத்திரை செய்தாரென்பதும் காணப்படுகின்றன. திருநாகைக் காரோணத்தில், சுந்தரர் முத்தாரம் வைரக்கோவை, கஸ்தூரி சாந்து, காற்றனைய கடும்பரிமா இவை சிவபெருமானைத் தரவேண்டுமென்று வேண்டியதால், அவர் இவையாவும் உபயோகித்த பெரிய பிரபு என்பதற்குச் சந்தேகம் உண்டோ? ஆதலால், நமது சமயகுரவர்கள் ஏழைகளல்லர். அருட்செல்வம் பொருட்செல்வம் இரண்டும் வாய்ந்தவரென்று வெளியாகிறது. ஆயினும், அவர்கள் தாங்கள் கடவுளிடத்திலிருந்து வந்தவர்கள் என்று ஒருவருக்கும் வெளியில் பகர்ந்தவர்களல்லர். மற்றவர்களைப் போலவே, அவர்களும் உலகமாயையில் வருந்துவது போல் வருந்தி, மெய்நிலையான பரம்பொருளின் பேரின்பம் அருளவேண்டுமென்று சிவபெருமானைத் தனியேயும் கணங்களோடும் துதிக்கலாயினர்.

எனவே, சைவசமயமானது மற்றச் சமயங்களினின்று முதலில் தொன்மையில் பேதப்படும். பிறகு மறைகளின் இலக்கணத்தால் பேதப்படும். அதாவது, ஏனைய சமய மறைகளைப்போல் தம்மையே நம்பவேண்டுமென்று கூறாமல் தோத்திர முறைகளாய் இம்மை மறுமைக்கு இன்றியமையாத மேலான ஞானத்தை ஓதுவிப்பது மன்றித் தமது அடியார்களைத் தனித்தனியே ஆராய்ச்சித் துறையில் மூழ்கி ஒவ்வொன்றும் அநுபவத்தால் தேர்ந்து தெளிய வேண்டுமென்று கூறும்.

“பாறினாய் பாவி நெஞ்சே! பன்றிபோ லளற்றிற் பட்டுத்
தேறிநீ நினைதி யாயிற் சிவகதி திண்ண மாகும்
ஊறலே யுவர்ப்பு நாறி யுதிரமே யொழுகும் பாசக்
கூறையால் மூடப் பட்டும் கோலமாக் கருதி னாயே.”

என்றார் அப்பர். இவ்வாறு மற்று எந்த மறையும் போதித்ததில்லை. கண்மூடி நம்பிக்கையே வேண்டுமென்று கட்டாயப்படுத்தும், புறச்சமய மறைகள். நமது சமய குரவர்களோ அறிவியல் துறையில் அறிவியல் இயந்திர ரசாயன சாலைகளில் வேலைசெய்யும் ஆசிரியர்கள்போல், இயற்கைத் தத்துவ அறிவியல் ஞானம் அற்புதமாக வெளிப்படுத்துகின்றனர். நமது மதத்தில் சேர்ந்தவர்கள் வெளிச் சைவநாமம் பெறவேண்டிய அவசியமில்லை என்பது முன்னரே காட்டினோம். ஆகையால், ஏனையசமயங்களைப்போல் சைவரில் வகுப்புகள் கிடையா. சைவரில் வீர சைவரென்பவரும், பொதுச் சைவர்களுக்கு விரோதமான கட்சியரல்ல. வைணவத்தில் வடகலை, தென்கலை போல, சைவத்தில் வெறும் சைவம் வீர சைவம் என்னும் பேதமில்லை. ரோமன் காதலிக் சமயத்தில் (Roman Catholics) ஜெசுயிட் (Jesuits) இருப்பதுபோல் சைவத்தில் வீரசைவம் அமையும். இவையே சைவத்திற்கும் ஏனைய சமயங்களுக்கும் உள்ள சொரூப லக்ஷண பேதங்களாம்.

2. இனி, தடஸ்த லக்ஷண பேதங்களைக் கவனிப்போம். ஒவ்வொரு சமயத்திலும், சுவர்க்கம் (Heaven), நரகம் (Hell), கடவுள் (God), முத்தி Salvatiou), என்கின்ற நால்வகை தடஸ்த முகங்கள் உள. இவை சுருதி (Authority of Scriptures), யுக்தி (Logical pasis of discussion),

அநுபவம் (Practical and concrete experience) இம்மூன்றுக்கும் பொருத்தமாகக் காட்டக்கூடிய சமயம், நமது சமயம் ஒன்றே. எல்லா மதங்களிலும் நரகமானது கடவுள் துஷ்டர்களைத் தண்டிக்கச் சிருஷ்டித்த இடமெனக்கொள்ளப்படும். நமது சமயமோ நரகத்தைப்பற்றிப் பேசுகின்றதாயினும், அது அன்பே உருவான சிவத்தினுடைய சிருஷ்டி யென்று எண்ணவில்லை. நமது கடவுளுக்குத் தண்டனை விதிக்கும் நியாயாதிபதி வேலையையும், தண்டனை நிறைவேற்றும் சிறைச்சாலைத் தலைவன் வேலையையும், நமதுசமயம் கொடுக்கவில்லை. நரகம் சிவன் சிருஷ்டி யன்று; ஜீவசிருஷ்டி எனப்படும். இங்கும், சிவன் பேயோடாடியாய் ஜீவனுடைய பாவத்தை நீக்கமுயலும்.

"பேயாயின பாடப்பெரு நடமாடிய பெருமான்
வேயாயின தோளிக்கொரு பாகம்மிக உடையான்
தாயாகிய உலகங்களை நிலைபேறுசெய் தலைவன்
நேயாடிய பெருமானிடம் நெய்த்தானமென் னீரே"
—சம்பந்தர்.

சைவ சமயத்தில், மீளாநரகம் என்பதே கிடையாது. அத்தகைய நரகத்திற்கு ஆளாக்க வேண்டிய இராவணனையும், சிவபெருமான் தம்மைத் துதித்தவுடன் மன்னித்து அவன் வேண்டும் வரங்கள் ஈந்தார் என்பது, புராண இதிகாசங்களின் வரலாறும்.

மற்றும், நரகமானது நமது மதத்தில் பாவிகள் உறையும் வேறு உலகமென்று எண்ணவில்லை. ஒருவன் செய்த குற்றத்திற்கு அவனை அதை மறந்து பல காலத்திற்குப் பிறகு தண்டிப்பதில், நியாயம் பொருந்தாது. குற்றம் செய்த காலத்திற்கும், தண்டனை விதிக்கும் காலத்திற்கும் இடையே ஒருவன் நல்ல நடவடிக்கையுடன் நற்காரியங்கள் செய்து வாழ்ந்திருக்கலாம். ஆகையால் தண்டனை கொடுப்பதாயின் குற்றம் செய்த உடனே தாமதமின்றிக் கொடுக்கவேண்டியதாகும். எல்லாம் அறிந்த இறைவனுக்குச் சாட்சிவேண்டியதில்லை. ஆதலால், அவர் குற்றத்துக்குத்தண்டனை பலகாலத்துக்குப் பின்னர் கொடுக்கின்றார் என்பது யுத்திக்குப் பொருந்தாததாம். எனவே, நரகம் ஒவ்வொரு ஜீவனும் தன்தன் பாவத்தினால் சிருஷ்டித்துக் கொள்ளுவதேயன்றிச் சிவன் செயலால் வருவதன்று. அது இம்மையிலே பெரும்பாலும் சம்பவிக்கும்.

"குற்றொருவரைக் கூறைகொண்டு கொலைகள்சூழ்ந்த களவெலாம்
செற்றொருவரைச் செய்ததீமைகள் இம்மையேவரும் திண்ணமே
மற்றொருவரைப் பற்றிலேன்மற வாதெழுமட நெஞ்சமே
புற்றரவுடை பெற்றமேறி புறம்பயம்தொழப் போதுமே"
—சுந்தரர்.

அவ்வாறு சம்பவிக்காது, அச்சீவனுக்கு மரணம் சம்பவிக்குமாயின் அவ்வினை அச்சீவனைமறுசன்மத்தில் தொடரும். இதனால், இம்மையில் சொர்க்க நரகங்கள் உலகவாழ்க்கையில் கலந்திருப்பதை நாம் பிரத்தியட்சமாய்க் காண்கின்றோம். சிறைச்சாலையிலுள்ள குற்றவாளி, நரகத்தை அநுபவிக்கின்றான். அவனுடன் சதாவிருந்தும், எல்லாக் குற்றவாளிக்கும்தண்டனைகளை நிறைவேற்றும் அச்சாலைத் தலைவனோ, பெரிய ஊதியம் பெற்றுச்



சுகமான இல்வாழ்க்கை நடத்துகின்றான். எனவே, ஒரே இடமானது ஒருவனுக்கு நரகமாயும், மற்றொருவனுக்குப் பொன்னகராயு மிருக்கின்றது. சிறைச்சாலையை விட்டு நமது இல்லத்தை நோக்குவோம்; தாய் தந்தையர் வருந்துவதும் உழைப்பு தீராதிருப்பதுமாய் ஓயாக் கஷ்டஸ்திதியிலிருக்க, அவர்கள் மைந்தர்கள் ஒரு கவலையுமின்றிச் சுகத்தை அநுபவிப்பது நாம் காண்கின்றோமன்றோ? இவ்வாறு சுவர்க்கமும் நரகமும், நிலைமைக்கும் பார்வைக்கும் ஏற்றவாறு மாறுகின்றன. சுவர்க்கத்திலுள்ளவர்களைத் இறுமாப்புடன் காலக்ஷேபம் செய்யவொட்டாமலும், நரகவேதனைப் படுவோரை வருந்தவொட்டாமலும், நமது சமயமானது மனதைக் குடையும் ஒரு அற்புத யந்திரம்போ லிருக்கின்றது. இதுவே, சைவசமயத்தின் பெருந்தொழிலாகும்.

இனிக் கடவுளும், முத்தியும் என்னும் விஷயங்களின் சிறப்பு அங்கங்களைக் கவனிப்போம். நமது சமயத்தில் பொன்னுலகம் முத்தி என்று கருதப்படவில்லை. அதை இந்திரலோக மென்றும், உலகத்திலுள்ள இன்பங்களைப் பன்மடங்கு அதிகரித்து அநுபவிக்க அது இடமென்றும், பலகாலம் அங்குவசிக்க அமுதபான முண்டென்றும், வேண்டும் பொருள்களைக் கொடுக்கக் கற்பகத்தரு உண்டென்றும், இன்னும் பற்பல தேவ போகங்களைப் பெற்ற பொன்னுலகமும் அழியத்தக்க தென்றும் கூறும்; அவற்றைப் பொருளென எண்ணலாகாதென்றும் நமது மறைகள் கூறும். எனவே, சைவ சமயத்தின்கண் முத்தியெனக் கொள்ளப்பட்டது யாது? எனின், சைவத்தில் முத்தியாவது, 'சாயுச்சியம்' (Perfect union of the individual with the Universal soul) அதாவது, சிவத்தன்மை வாய்ந்து அன்பே உருவமாய்த் திகழ்தல்; எனவே, சைவமுத்தியானது நான் எனது என்னும் பற்றறுத்த போதே தான் என்றுவந்து நின்ற இன்பமாய்த் திகழ்வதாம்.

'ஊனாகி உயிராகி அதனுள் நின்ற
உணர்வாகி பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேது மறியாமே என்னுள் வந்து
நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றியூராய்
திருவானைக் காவிலுறை சிவனே! ஞானம்
ஆனாயுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே."

இம்முத்தியில், எல்லாம் வல்ல இறைவன் சச்சிதாநந்த சொரூபமாய் விளங்குகின்றான்; சத்திலக்கணமாய் ஓய்வில்லா நடனம் அம்பலத்தில் செய்கின்றான். அந்நடனத்தாலே உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருள்களினியக்கமும் நிலைகுலையாது நிற்கின்றது. நமக்குக் காணப்படும் அசைவற்ற பொருள்களும் ஒருவகை இயக்கம் பெற்றுக் செல்லாநிற்கும். நமது கோளங்கள் சூரியனைச்சுற்றி ஓடுவது போல் சூக்கும அணுவிலுள்ள காரண அணுக்களின் ஓட்டமும் நடராஜப் பெருமான் நடனத்தின் காரியமாகவே காணப்படுகின்றது. ஒரு நிமிஷமாகிலும் அம்பலக்கூத்து நிற்குமாயின், அணுமுதல் அண்டங்கள் வரையிலுள்ள எல்லாக்கூத்துகளும் நின்றுவிடும். இக்கூத்தைப் பதஞ்சலி முனிவரைப்போல் கண்டு களித்து, தான் என்பதை முற்றும் மறந்து அதுவே தானாய் நிற்கு[illegible] சைவத்

186927

தின் முத்தியாம். எனவே, சிவபெருமான் எங்கும் நிறைந்து இன்பம் ஊற்றுவதை ஜீவன் முத்தர்கள் அங்கங்கு உள்ளவிடத்திலேயே அனுபவிப்பார். இவ்வானந்தம் நித்திரையிலுள்ள மூடவின்பமன்று. அறிவுடன்கூடிய இன்பமாதலால் சித்தானந்தமாகும்.

கடவுளானவர், ஒவ்வொருஉயிருக்கும் உயிராய் நிற்பது ஒருமுகமாயும், உலகத்தில் எள்ளில் எண்ணெய்போற் கலந்திருப்பது மற்றொருமுகமாயும், அடியார்கள் 'எந்தாய்' என்று அழைத்த மாத்திரத்திலேயே 'இருந்தேன்' என வெளிவரும் லிங்கமூர்த்தம் ஒருமுகமாயும், சுடலையில் பேயோடாடுவது மற்றொரு முகமாயும், கயிலையில் உமையவளோடு இருப்பது பின்னும் ஒரு முகமாயும், ஆக ஐவகை முகங்களான பஞ்சானனனாய்ப், பஞ்சாக்கர சொரூபனாய் விளங்குவான். இதனுடன் பேதமின்றி அறிவுடன் அதுவே தானாய் நிற்கும் நிலை, முத்திநிலை என்று மேலோர் கூறுவர். அத்தகைய முத்தி எவ்வாறு பெறலாமெனின் மும்மல சம்பந்தமுழுமையுமற்று அன்பே வடிவாய்த் திகழ்ந்தாலன்றி அந்நிலையை எய்துவதாகாது. அவ்வாறு அந்நிலை எய்தியவர் மீள்வதில்லை. அந்நிலையில் தீவினையற்று, புலன்கள் பந்தம் அற்று, ஒன்றிய மனத்துடன் ஞான வடிவாய் உள்ளம் திகழும். இந்நிலையே முத்திநிலை என்பது அப்பர் பாசுரத்தான் வெளியாகும்.

'வென்றானைப் புலனைந்து மென் தீவினை
கொன்றானைக் குணத்தாலே வணங்கிட
நன்றானம் மனம்வைத்திடு ஞானமாம்
ஒன்றானைக்கண்டு கொண்டதென் னுள்ளமே. "

ஆகையால், நமது சமயத்தில் முத்தி என்னப்பட்டது இறந்தபின் பெறும் பேறன்று. ஒவ்வொரு ஜீவனும் பிரத்தியட்சத்தில் இம்மையிலேயே பெறும் பேறாகும். ஏனைய சமயங்களோ மரணத்துக்கு முன்னர் முத்தி உண்டென்று கூறுவதில்லை. சைவசமயம் ஒன்றே உயிருள்ளபோதே முத்தியை வற்புறுத்தி விளக்கும். அதைத் தாயுமானவர் தன் அநுபவத்தினின்றும் பின்வரும் செய்யுளால் விளக்குகின்றார்:—

'யானெனல் காணேன் பூரண நிறைவில்
யாதினு மிருந்தபே ரொளிநீ
தானென நிற்கும் சமத்துற வென்னைத்
தன்னவ னாக்கவும் தகுங்காண்
வானென வயங்கி யொன்றிரண் டென்னா
மார்க்கமா நெறிதந்து மாறாத்
தேனென ருசித்து ளன்பரைக் கலந்த
செல்வமே சிற்பர சிவமே. "

இவ்வாறு சைவசமயமானது தடஸ்த லக்ஷணத்திலும் ஏனைய சமயங்களினின்றும் பேதப்படுவது காண்க. இதன் முக்கிய நோக்கமாவது காகத்தைப் போல் உறவுடன் யாவரையும் அருட்பிரவாகத்தை உண்ண அழைப்பதுவேயாம். இக்கருத்தையே முன்வைத்துச் சிவபெருமான் பேயோடாடுகின்றார். அவருடன் சம்பந்தப்படுவதே அன்பின் தொழிலாம். இதில் வஞ்சகம் பொறாமை முதலியவற்றிற்கு இடமேயில்லை. உயிர்த் துணைவனைக் கற்புறு மனைவி யைப்பற்றி வாழ்நாள் நடத்துவது போலும், முன்னிலையே



யன்றித் தன்மை ஒழித்த தத்துவமாகும். இதைப் புகலி வேந்தர் திருக்கழுமலத் திருப்பதிகம் ஒன்றில் மிகவும்அழகாகப் பின்வருமாறுவிளக்குகின்றார்:

"பத்திப்பேர் வித்திட்டே பரந்த ஐம்பு லன்கள்வாய்ப்
பாலே போகா மேகாவாப் பகையறும் வகைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்கு முக்கு ணங்கள்வாய்
மூடா வூடா நாலந்தக் கரணமும் ஒருநெறியாய்ச்
சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்த மெய்ப்ப ரம்பொருள்
சேர்வார் தாமே தானாகச் செயுமவன் உறையுமிடங்
கத்திட்டோர் சட்டங்கங் கலந்தி லங்கு நற்பொருள்
காலே யோவா தார்மேவுங் கழுமல வளநகரே. "

திருச்சிற்றம்பலம். (சித்தாந்தம்.)

---

## ஆன்றோர் அமுதமொழிகள்.

1. ஒரு தங்க வியாபாரி மாற்றுக் குறைவான பொன்னைத் திராவகங்கள் கலந்து புடம்போட்டுத் தங்க மாக்குவதுபோல, விஷயாதிகளால் விகாரப்படும் மனத்தை விகாரமற்று விளங்குவதற்குத் தாரணை, தியானம், மனனம், நிதித்தியாசனம் முதலிய சாதனங்களால் சுத்தப்படுத்தல் வேண்டும்.

2. எலுமிச்சம்பழம்; புளி இவற்றின் ரசத்தை ஒரு தங்கக் கிண்ணியில் வைத்தால் களிம்பு ஏறுகிறதில்லை. செப்புக் கிண்ணியில் வைத்தால் உடனே களிம்பேறி விடுகின்றது. இங்ஙனமே சுத்தமாகிய அந்தக்கரணத்தோடு கூடியவர்களிடத்தில் விஷயவிருத்திகளிருந்தபோதிலும் விகாரமுண்டாவதில்லை. அசுத்தமனதோடுகூடியவர்கள் விஷயங்களோடு கலப்பதினால் விகாரப்படுகின்றனர்.

3. ஒரு விருக்ஷம் புஷ்பித்த உடனே நாம் எங்ஙனம் அதனால் பலனடையுங்காலம் சமீபித்திருக்கின்றதென்று அறிகிறோமோ அங்ஙனமே யாருடைய அந்தக் கரணத்தில் சாந்தமாகிற புஷ்பம் மலர்ந்திருக்கிறதோ அவர்கள் அபேதரூப ஞான பலத்தை அடையுங் காலம் சமீபத் திருக்கிறதென்று அறியலாம்.

4. எங்ஙனம், விஷமானது ஸ்திரீகளையும், புருடர்களையும், சிசுவையும், கிழவனையும், சக்ரவர்த்தியையும், ஏழையையும், பிராம்மணனையும், மற்றவனையும் கொல்லுமோ, அங்ஙனமே யாருடைய மனத்தில் விஷய வாசனைகள் உள வாகுமோ அவர்கள் துன்புறாமல் இருக்க முடியாது.

5. வைராக்கிய மற்றவர்களின் யோகம், ஆத்ம விசாரம் முதலிய சத் சாதனங்கள் யாவும் உவர்மண் நிலத்திற்செய்த விவசாயம் போற் பயனற்றன வாகும். ஆகலின், முமூட்சுக்கள் வைராக்கிய சம்பத்தியோடு ஆத்ம விசாரத்தில் பிரவர்த்திக்க வேண்டும்.

---

உ

# சிலப்பதிகாரம்.

---

கோநகர் திருவாளர் சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார்.

சிலப்பதிகாரம் என்னும் நூல், பழைய காவியங்க ளைந்தனு ளொன்றாகும். இஃது, தமிழ்நாட்டு மூவேந்தர்களுள் முதலில்வைத் தெண்ணப்படும் சேரர்வமிசத் துதித்துத் துறவறநெறியிற் சிறந்திருந்த இளங்கோ வடிகளாலியற்றப்பெற்றது. புகார் நகரமென்னுங் காவிரிப்பூம் பட்டினத்து வாழ்ந்து வந்த பெருங்குடி வணிகமரபினராகிய கோவலன் கண்ணகியின் சரிதத்தைக் கூறுவது. சரிதநிகழ்ச்சியை யொட்டிப் புகார்க்காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டமெனு மூன்று பிரிவுகளையுடையது. இலக்கியச் சுவைநிறைந் தின்பமளிப்பது. சரிதநிகழ்ச்சிகளைக் கண்ணுற்கண்டதை யொப்பத் தெளிவுபெற அறிவிப்பது. தமிழ்நாட்டில் நாடகம்இல்லையென்பார்க்கு வாய்ப்பூட்டாக அமைந்து, இயலிசை நாடகமென்னும் முத்தமிழும் விரவப்பெற்று, இயலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுளென்றும் நாடகக் காப்பியமென்றும் பெயர்விளங்குவது.

இந்நூலாசிரியராகிய இளங்கோவடிகள், சேரநாட்டை வஞ்சிமாநகரத்திருந் தரசுபுரிந்த சேரலாதனென்னு மரசனது குமாரர். சேரன் செங்குட்டுவனது தம்பி. இவரது திருநாமமாகிய இளங்கோ என்பது இயற்பெயர்தானோ; அன்றி, அரசகுமாரரானமையின், இளவரசு என்னும் பொருள்படக் காரணப்பெயராக அமைந்ததோ? தெரியவில்லை. ஆனால், இவரைப்பற்றிய சரிதமுதலிய ஆராய்ந்து வெளியிட்ட பெரியோர்களெல்லாம் இவரை இளங்கோ என்றே தாபித்திருப்பதனால், இயற்பெயராகவே யிருப்பினு மிருக்கலாம். இவர் முதலில் இளங்கோ என்னும் பெயர்பெற்றுப் பின் துறவுபூண்டமையால் அடிகளென்னும் பட்டத்தையும் பெற்றார் எனத் தெரிகின்றது. இவர் துறவுபூண்டமைக்குக் காரணம், இந்நூலுள் பதிகத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதியுள்ளவுரையில், "குமரியொடு வடவிமயத் தொருமொழிவைத் துலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற் றேழ்பரி நெடுந்தேர்ச் சோழன் றன்மகணற் சோணையீன்ற மக்களிருவருள் முன்னோன் றன்னைப் பின்னரியற்றிப் பின்னோன் றன்னையும் பெருநம்பி யாகென வன்னவர் தம்மொடு தென்னர் செம்பியர் தன்னடிபோற்றத் தமனிய மண்டபத்துச் சிங்கஞ்சுமந்த பொங்கணை மீமிசை யுவரித்திரையிற் கவரியிரட்ட வேந்தனிருந்துழிச் சார்ந்தநிமித்திகன் அடிமுதன் முடிவரை நெடிதுநோக்கியின்றோள் கழியப்பொன்றிக முலகஞ்சேர்தி நீயெனச் சேரலற் குரைத்தவன், மைந்தரை நோக்கி நந்தாச் செங்கோ லந்தமி லின்பத் தரசாளுரிமை யிளையோற்குண்டென வுளைவனனிவெகுண் டழுக்காற் றொழுக்கத் திழுக்கு நெஞ்சினன் கண்ணெரிதவழ வண்ணலை நோக்குங் கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த்தானைச் செங்குட்டுவன்றன் செல்லனீங்கப் பகல் செல் வாயிற் படியோர் தம்மு னகலிடப் பார மகலநீக்கிச் சிந்தைசெல்லாச் சேணெடுந்தூரத் தந்தமி லின்பத் தரைசாள் வேந்தாயினன்.' என்பதாலும், அடிகளே வரந்தருகாதையில் கண்ணகி யுரைத்ததாகக் கூறும்,



'வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
நுந்தை தாணிழ லிருந்தோய் நின்னை
யரைசுவீற் றிருக்குந் திருப்பொறி யுண்டென்
றுரைசெய் தவன்மே லுருத்து நோக்கிக்
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்
செங்குட் டுவன்றன் செல்ல னீங்கப்
பகல்செல் வாயிற் படியோர் தம்மு
னகலிடப் பார மகல நீக்கிச்
சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்
தந்தமி லின்பத் தரசாள் வேந்தென்
றென்றிற முரைத்த விமையோ ரிளங்கொடி"

என்னும் அடிகளாலும் அறியலாம். என்னே, இவர்தம் சகோதரவாஞ்சை! முன்னோனிருக்கப் பின்னோன் முடிசூடுவது முறையன்றெனு நீதியை மனத்துட்கொண்டு, தன் அண்ணனே அரசனாயிருக்குமாறு விட்டுத் தனக்குத் துறவறநெறியே அறமெனக்கொள்ளுதல் எந்தத் தம்பிக்கும் இயலுமா? பீஷ்மர், தனது தந்தையின் மறுவிவாகத்தின் பொருட்டு, என்றும் பிரமசாரியாகவே அரண்மனையிலிருந்தார். ஆனால் இவரோ, தனக்கு அரசபதவி மட்டும் வேண்டாமென்று அரண்மனையிலேயே யிருந்துவரினும், ஏதேனும் மனமாறுபட்டால் அவ்வரச போகப்பற்று உண்டாயினு முண்டாகலாமெனநினைத்தே வஞ்சிநகரத்தின் கீழ்த்திசைக்கண்ணதாய திருக்குணவாயிலென்னுமூரிலுள்ள கோட்டத்தில் தவவுருத்தாங்கித் துறந்திருந்தா ரெனத்தெரிகின்றது.

இவர் காலத்துச் சாதி தூஷணை, சமயதூஷணை முதலிய வில்லையென்பதை இச்சிலப்பதிகாரமே வலியுறுத்தும். சேரவமிசத் துதித்தவராகிய இம்முனிவர், புகார்க்காண்டத்திலும் மதுரைக் காண்டத்திலும் சோழ பாண்டிய நாட்டரசர்களைப் போற்றிப் புகழ்ந்து கூறியிருப்பதாலும், இன்னும் இந்நூலுள் செங்குட்டுவன் பத்தினிக் கடவுளின் படிவஞ் சமைத்தற்குக் கற்கொண்டுவரப் புறப்பட்ட பொழுது, சிவபெருமானின் பாதுகைகளை முடியில் தாங்கிச் சென்றதாக,

"நிலவுக் கதிர்முடித்த நீளிருஞ் சென்னி
யுலகுபொதி யுருவத் துயர்ந்தோன் சேவடி
மறஞ்சேர் வஞ்சி மாலை யொடுபுனைந்
திறைஞ்சாச் சென்னி யிறைஞ்சிவலங் கொண்டு' எனவும்,

"நீலமேனி நேடியோன் கோயிலும்" எனவும்,

'ஆடக மாடத் தறிதுயி லமர்ந்தோன்
சேடங் கொண்டு சிலர்நின் றேத்தத்
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலி
னங்கது வாங்கி யணிமணிப் புயத்துத்
தாங்கின னாகி"

எனவும் கூறுவதாலும் இதனை யறியலாம். இவரது சமயம், இவர்க்கு அடிகள்எனப் பெயர் வந்திருப்பதாலும், 'குணவாயிற் கோட்டத் தரசு துறந்

திருந்த' என்ற அடிக்கு அடியார்க்கு நல்லார் உரையெழுதுங்கால், கோட்டமென்பது அருகன் கோயிலென எழுதுவதாலும், சைனமென்று சிலர் கூறுவர். எனினும், வேறுபலமேற்கோள்கள் கொண்டு, இவரைச் சைவரெனவுங் கூறலாம். இவர், மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் என்னும் புலவர் பெருமானின் தூண்டுதலால், இந்நூலைச் செய்தாரென்றும், இந்நூலி னிறுதியில் இதன் தொடர்ச்சியாகிய மணிமேகலையின் சரிதத்தையும் பாடக்கருதி யிருந்த இவர், அச் சரிதத்தை மணிமேகலை யென்னும் பெயரால், முப்பது காதைகளுள்ள ஓர் நூலாகத் தாமியற்றியதாகக் கூலவாணிகன் சாத்தனார் கூறியதால் விடுத்தாரென்றும், உரைப்பாயிரத் தடியார்க்கு நல்லாருரையா லறியலாம். எனவே, கூலவாணிகன் சாத்தனார் காலமாகிய கடைச்சங்ககாலமே இவருடைய கால மாகும்.

இவ் வடிகளாற், சிலப்பதிகார மொன்றே செய்யப் பெற்றதாகத் தெரிகின்றது. வேறுநூல்களேனும் தனிக்கவிகளேனும் செய்ததாகத் தெரியவில்லை. இவராற் செய்யப் பெற்ற சிலப்பதிகாரத்தை, அரும்பதவுரை யொன்றுடனும், அடியார்க்கு நல்லாருரையுடனும், ஒளித்த நூல்களை வெளிப்படுத்தி உலகோர்க் குபகாரம் புரியும் மஹாமஹோபாத்யாயதாக்ஷிணாத்யகலாநிதி டாக்ட்ர், உ. வே. சாமிநாதையரவர்கள் வெளியிட்டுள்ளார்கள். ஐயரவர்கள், அச்சிடுவதற்குத் துணைபுரிந்த ஏட்டுச்சுவடிகளுள், ஏழாம் பகுதியாகிய கானல்வரி நீங்கலாக, பத்தொன்பதாம் பகுதியாகிய ஊர்சூழ்வரி வரையுமே, அடியார்க்குநல்லா ருரையகப்பட்டு, வெளிவந்துள்ளது. முழுதுக்கும் அடியார்க்குநல்லா ருரையிருக்குமாயின், மிகமிக இன்பந்தரும். பிற்காலத்தார், தமிழணங்கைப் போற்றுவதிற் பராமுகமா யிருந்ததனாலேயே, அஃது ஓடி ஒளித்தவிட மறிய இயலாமற்போயிற்று. இனி, சிலப்பதிகாரச் சுவைநயங்களை ஆராய்வாம்:—

பதிகத்துள், நூலால் விளங்கும் நீதிகள் பலவற்றையும், 'அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉ, முரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலு, மூழ்வினை யுருத் துவந் தூட்டு மென்பதூஉம்' என்ற அடிகள் தெள்ளிதின் விளக்கும்.

நீதிதவறி அரசுபுரியும் அரசர்வாழுகின்ற நாட்டில் மழைபெய்யாது. அதனால் வறுமைமிகுந்து நோய் முதலியன அந்நாட்டவரைப்பற்றித் துன்பப்படுத்து மென்பது உரைபெறு கட்டுரையில், 'அன்று தொட்டுப் பாண்டியனாடு மழைவறங்கூர்ந்து வெப்புநோயுங் குருவுந் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்ல ராயிரவரைக்கொன்று விழவொடு சாந்தி செய்ய நாடுமலிய மழைபெய்து நோயுந் துன்பமு நீங்கியது' என்பதா லறியக் கிடக்கின்றது. என்னை?

'மாநிலங்கா வலனாவான் மன்னுயிர் காக்குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தா
லூனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மா
லானபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனே'

இவ் வாறிருக்க: அரசனாலேயே ஒருயிர் நீங்கியதனாலன்றோ, மழைவளம் நீங்கியது. "விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே, பசும்புற் றலைகாண்



பரிது' அன்றோ? ஆதலின், மழைபெய்யாவிடின் வறுமைநோயுண்டாதலும், அவ் வறுமையால் உயிர்களுக்குப் பிணியுண்டாதலும் இயற்கையே.

முதன் முதலாகக் காப்புக் கூறுமிடத்துச் சைனமதக் கொள்கையைத் தழுவியவராயின் அருகக்கடவுளையாவது, அன்றிச் சைவமசயக் கொள்கையைத் தழுவியவராயின் சிவபெருமானையாவது தோத்திரஞ் செய்யவில்லை. இக் கடவுள்களையெல்லாம் அகக்கண்ணாலன்றி முகக்கண்ணாலறிய முடியாது. சூரியனும் சந்திரனுமே முகக்கண்ணிற்குப் புலப்படும் கடவுள்கள். இப்பொழுதும், பாமரமக்கள் உண்மையைச் சாதிக்குங் காலத்தில், 'இந்தச் சூரியநாராயணனுக்குப் பொதுவாக' என்று சூரியனைச் சுட்டிக்காண்பிப்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஆதலின், அறிவாளிகள்முதல் பாமரஜனங்கள்வரை எதைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்களோ, அதனையே போற்றுகின்றார், இவ்வாறு, கண்கண்ட தெய்வங்களாகிய சந்திர சூரிய வணக்கத்தின்பிறகு மழையைப் போற்றுகின்றார்.

'நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு'

என்பது, நாயனார்திருவாக்கன்றோ? ஆதலின், தெய்வவணக்கத்தின் பிறகு, உயிர்களுக்கு இன்றியமையாதபொருள்களுள் தலைசிறந்து விளங்குவதாகிய மழையைப் போற்றுதல் சிறப்புடைத்து. இனி, சோழநாட்டுப் புகார்நகரத்து நடந்த சரிதமாதலின், அந் நாட்டரசனாகிய சோழனைப் புகழ்ந்து. சந்திரன் அவனது வெண்கொற்றக் குடைபோன் றிருத்தலா லதனையும், சூரிய னவன தாக்ஞா சக்கரத்தை யொத்தலா னதனையும், மழை அவனது வள்ளற்றன்மை வாய்ந்திருப்பதா லதனையும், புகார் அவனது சிறந்த நகரமாதலி னதனையும் போற்றுவே மெனக் கூறினாரென்பது அறிந்து இன்புறற் பாலது.

கண்ணகியின் வயதையும், கோவலனது வயதையு மவர்களது திருமண நாளில், 'ஈராறாண்டகவையாள்' என்றும், 'ஈரெட்டாண்டகவையான்' என்றும் இளம்பருவங்களைக் குறிக்கின்றார். இவ் விளம்பருவத்திற் கல்யாணஞ் செய்யும்முறை நம் தனவணிகமக்களுள் மட்டுமே பெரும்பாலுமுண்டு. ஆதலின், இவர்கள் நம் மரபிலுதித்தவர்க ளென்பதிற் சிறிதுமைய மின்று. இன்னு மிதற்குரிய சான்றுகள் பின்வருமிடங்களிலெல்லாமெடுத்துக் காட்டப்பெறும். தனவணிகர்கள் காவிரிப்பூம் பட்டினத்து வாழ்ந்து வந்த காலத்தில், 'மகுடதனவைசியர்' என்னும் பெயர் கொண்டாராய், அளவற்ற செல்வத்துடன் வாழ்ந்திருந்தனரென நகரத்தார் சரித்திரத்தா லறியக்கிடப்பதை, யிவர் கண்ணகியின் தந்தையாகிய மாநாய்கனை 'மாக வானிகர் வண்கைமா நாய்கன்!' என அவனது கொடைத்திறத்தைப் புகழ்ந்தும், கோவலனது தந்தையாகிய மாசாத்துவானை, 'வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்துவான்' எனவும், 'இருநிதிக்கிழவன்' எனவும் கூறுவதாலறியலாம். கண்ணகியினது கற்பின்றிறம் கூறுங்கால்,

'தீதிலா வடமீனின் றிறமிவ டிறமென்று
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னுங் கண்ணகியென் பாண்மன்னோ'

என்று அருந்ததியனைய கற்பினையுடையாள் கண்ணகியென்றும், அவ்

வருந்ததி தீதிலாதவளென்றுங் கூறினர். அடியார்க்கு நல்லார், தீதிலா என்பதற்குப் 'பிறர்நெஞ்சு புகுதலில்லாத' என்று உரையெழுதியிருக்கின்றார். "மண்டிணி ஞாலத்து மழைவளந் தரூஉம், பெண்டி ராயிற் பிறர் நெஞ்சு புகார்." என்பது மணிமேகலை. கற்புடைப்பெண்களுக்கு மழையும் ஏவல்செய்யுமன்றோ? "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை.' பிறர் நெஞ்சுபுகுதல் கற்புடைப்பெண்ணிற்குரியதன்று. ஆதலினாலேயே தீதிலா வடமீனின் றிறமிவ டிறமெனக் கூறினர். கண்ணகியைப் போதிலார் திருவினாள் புகழுடை வடிவுடையாளென்றும், கோவலனை மண்டேய்த்த புகழினா னென்றும், புகழைப்புகழ் சேருதல் முறையாதலின் இருவரும் புகழுடையா ரென்பது தோன்றவும், தெரிவரும் பெருமையை யுடையது பூமியாகலான், அப்பூமியையும்சிறிதென எண்ணுமாறு மிகுந்த புகழையுடையானெனவும் கூறினர்.

'முழங்குகடல் ஞால முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி
யரும்பொரு டரூஉம் விருந்திற் றேஎ
மொருங்குதொக் கன்ன வுடைப்பெரும் பண்டங்
கலத்தினுங் காலினுந் தருவன ரீட்ட."

என்ற அடிகட்கு, அடியார்க்கு நல்லா ரெழுதிய 'பலதேயப் பண்டங்களெல்லாம் பொருந்தி, அவ்வெல்லாத் தேயங்களும் புகார் நகரத்துப் பொருந்திய தே போன்றது' என்றஉரையால், அக் காலத்துக் கப்பல்வியாபாரம் எவ்வளவு சிறந்து விளங்கியிருக்கிற தென்பதையறியலாம். இதனையே கடியலூர் உருத்திரங்கண்ணனார், பத்துப்பாட்டுப் பட்டினப்பாலையுள்,

'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியுங்
காரின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னுங்
குடமலைப் பிறந்த வாரமு மகிலுந்
தென்கடன் முத்துங் குணகடற் றுகிருங்
கங்கை வாரியுங் காவிரிப் பயனும்
ஈழத் துணவுங் காழகத் தாக்கமு
மரியவும் பெரியவும்."

என்ற அடிகளிற் கூறியுள்ளார். 'கலத்தினுங் காலினுந் தருவன ரீட்டக், குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வர்.' எனக்கண்ணகியின் தந்தையையும் கோவலனின் றந்தையையும் அடிகள் கூறுவதாலும், குலத்திற்குன்றாமையாவது, 'நெடுநுகத்துப் பகல்போல, நடுவுநின்ற நன்னெஞ்சினோர் வடுவஞ்சி வாய்மொழிந்து, தமவும் பிறவு மொப்ப நாடிக், கொள்வதூஉ மிகை கொளாது கொடுப்பதூஉங் குறைகொடாது என்பது" என அடியார்க்குநல்லா ரெழுதிய உரையாலும் அவர்கள் கப்பல்வியாபாரத்திற் சிறந்திருந்தனரெனத் தெரிகின்றது. திரைகடலோடி வியாபாரஞ் செய்தல் தனவணிக மக்களுக்கே யுரியது. அக் கப்பல்வியாபாரத்திற் சிறிதும் நெறிதவறுத நிலையினர்களென்பதால் தனவணிக மரபினரென்பது புலப்படும்.

(தொடரும்.)

---

உ

# போத்திபூசை.

சிவாகம ரீதியிற் கட்டப்பட்ட சிவாலயங்களில் மூர்த்திகளைத் தீண்டிப் பூசித்தற்குரியார் ஆதிசைவப் பிராமணர்களே. அவர்களுக்கே 'முப்போதுந் திருமேனி தீண்டுவார்' என்ற பெருமையு முண்டு. ஆனால், திருச்செந்தூர், திருவொற்றியூர் முதலிய இரண்டொரு பெரிய ஆலயங்களில் போத்திகளென்ற ஒருவகைச் சாதியார் பூசாரிகளா யிருக்கின்றனர். ஆனால் அங்கு அவரதுபூசை மூலவர்க்குமட்டுமே நடக்கின்றது. உத்ஸவர் முதலிய மற்ற மூர்த்திகளை அங்கும் ஆதிசைவரே அர்ச்சிக்கின்றனர். அப்போத்திகள் மலையாளத்தார், மத்துவமதஸ்தர், சிவாகமங்களைப் பிரமாணமெனக் கொள்ளாதவர், சைவசமயம் இன்னதென்றே தெரியாதவர். அவர்களுக்குச் சிவாலயபூசை எப்படிப் பாத்தியப்படும்? சிலர் 'போத்திகள் மிகவும் பரிசுத்தவான்கள். ஆகையால், அவர்கள் பூசைசெய்ய வுரியவர்களே' யென்கின்றனர். ஆயின் அக்கோயில்களில் உத்ஸவமூர்த்திகளையும் அப்போத்திகள் அர்ச்சியாமை ஏன்? ஒருக்கால் அவர் மூலவருக்குக் காட்டிலும் உத்ஸவருக்கு அவ்வளவு பரிசுத்தவான்களின் பூசைவேண்டா மென்பர்போலும். என்னே, அவரது மடமையின் மாகாத்மியம்! அப்படி ஆதிசைவப் பிராமணரிடமில்லாத பரிசுத்தம் போத்திகளிடம் ஒன்றும் வந்துவிடவில்லை. அக்கோயில் மூலஸ்தானங்களிலுள்ள சாந்நித்திய சூனியமே அதற்கு இன்றும் நிதர்சனம். மேலும் சமயவரம்புக் கடங்கியே பரிசுத்தங் கவனிக்கப்படவேண்டும். இன்றேல், துருக்கருஞ் சிவாலயபூசைக்கு உரியராகலாம். ஆகவே சிவாலயபூசை யுரிமையை ஆதிசைவர்க்கிலதாக்கிப் போத்திகள் முதலிய அசைவர்க்குப் பிடுங்கிக்கொடுக்கப் பரிசுத்தமுதலிய வேறெதற்குஞ் சக்தியில்லை யென்பதறிக. ஆதிசைவரிடந் தவறுகளிருக்குமாயின் அவற்றைத் திருத்த யாரும் வேண்டாமென்னார். ஆனால், தமிழ்நாட்டுச்சைவர்கள் சிவாலயங்களில் அசைவராகிய போத்திகளின் பூசையை நிவர்த்திக்க இதுகாறும் செய்த தென்ன? தங்களையுஞ் சீர்திருத்தக்காரர்களென்று அச்சைவர்கள் வெட்கமின்றிப் பிரஸ்தாபித்துக் கொள்கிறார்களே.

'ஆகமம் வேண்டாத பாவிகள் கோயிலிற்
போகலொட் டோமினி யுந்தீபற
புகல்வாம் விதியெடுத் துந்தீபற'

என்று வைதிகசைவ சண்டமாருதம் முழங்கிவிட்டுச் சென்றது. தனக்குப் பின்வருந் தமிழச்சைவரும்ஆண்பிள்ளைகளாயிருப்பார்களென்று நம்பி அது 'ஓம்' 'ஆம்' என்ற பன்மைகள் கொடுத்து அவ்வீரமுழக்கஞ் செய்தது. ஆனால் அவ்விதி யெடுத்துப்புகல இக்காலைத் தமிழச்சைவரிடம் மதியுண்டா? மதியுடையாரன்றோ ஆண்மையும் வீரமு முடையர்? ஓடிப்போன மனைவியைக் கழுவித் திரும்பச் சேர்த்துக்கொள்ளலாம்; அதுவே பழந்தமிழரின் விழுமிய நாகரிகம் என்று வெட்கம் மானம்.ரோஷம் ஆண்மையின்றிப்பிதற்றவே அவர் உடலெடுத்துத்திரிகின்றார். இந்நிலையில் சிவாலயங்களிலுள்ளபோத்திபூசைக்கு இனிப்போங்காலம் என்றோ?

௨

# பொதுவுடைமை.

எல்லா மக்களிடமும் இருக்குந் தாவரசங்கம சொத்துக்களனைத்தையும் பறிமுதல் செய்து அவரெல்லார்க்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்துவிடவேண்டும். அப்படிக் கொடுத்து விட்டால் மக்களிடைச் செல்வனிவன் வறியனிவன் என்னும் உயர்வுதாழ்விராது. ஆகவே திருடு பொறாமை துன்புறுத்தல் முதலிய கொடுமைகள் அடியோடு தொலையும். எவனுந் தனக்கென மனைவிமாரை வைத்துக்கொள்ளக் கூடாது. எவளுந் தனக்கெனக் கணவன்மாரை வைத்துக்கொள்ளவுங் கூடாது. அப்படி வைத்துக் கொள்வதாலேயே பரஸ்திரீகமனம் பரபுருஷேச்சை முதலிய விபசாரங்கள் உண்டாகின்றன. ஆகலின் எல்லாப் பெண்டிரும் எல்லா ஆடவர்க்கும் பொது: எல்லா ஆடவரும் எல்லாப் பெண்டிர்க்கும் பொது: எவனெவன் எவளையெவளை எவளெவள் எவனையெவனைப் புணரவிரும்புகின்றனரோ அவனவன் அவளையவளை அவளவள் அவனையவனை அப்படிச் செய்யலாம் என்றநிலை ஏற்படவேண்டும். அப்போது அவ் விபசாரங்கள் சிறிதுந் தலைக்காட்டா. அப்பன் பிள்ளை அண்ணன் தம்பி மாமன் மருகன் தாய் மகள் அக்கை தங்கை மாமி மருகி பாட்டி பேர்த்தி முதலாக முறைகள்பல: அவை என்தந்தை என்பிள்ளை முதலிய அபிமானங்கட் கிடமாகின்றன. அவ்வபிமானிகளுக்குப் பிறன்தந்தைபிறன்பிள்ளை யென்றவேறுபாடுந் தோன்றத்தானே செய்யும்? அஃது ஒழிய வேண்டும். அதற்குவழி அம்முறைகளைத்தொலைப்பதேயாம். புலாலுண்பவரும் கட்குடியரும் நிந்திக்கப் படுகின்றனர். அவ்வுணவுங் குடியுந் தீயனவென்னுங் கொள்கையே அதற்குக்காரணம். அவற்றை நல்லனவென அங்கீகரித்து விட்டால் அவரை ஏன் நிந்திக்கவேண்டும்? ஆகலின், எவனெவன் எதையெதை யுண்ணவும் குடிக்கவும் இச்சிக்கின்றானோ அவனவன் அதையதை யுண்ணலாம், குடிக்கலாம் என்பது வேண்டும். இந்தவிதமான தட்டுக்கெட்ட நிலைதான் ரஷ்யமாந்தரின் பொதுவுடைமை யாகும். சிலர், தம் மானத்தைக் காத்துக்கொள்ளும் பொருட்டு அப் பொதுவுடைமை அப்படி யன்றென வாயளவில் மறுப்பர். பூரணம் பெற்ற பொதுவுடைமை மேற்காட்டியவாறுதா னிருக்கும்.

அப்பொதுவுடைமை பிறநாடுகளில் மக்கள் நீங்கலாக மற்றைச்சீவராசிகளிடமே காணப்படுகின்றது. விலங்குகளிடம் தமக்கெனச் சொத்துக்களுண்டா? மனைவி கணவன்மாருண்டா? தந்தை பிள்ளை முதலிய முறைகளுண்டா? இன்றாகலின் அவைகளிடம் உடைமை வறுமை யென்னும் உயர்வுதாழ்வில்லை. பிறர்மனை நயத்தல் பிறர்கணவன் நயத்தல் முதலிய ஊர்மேய்வில்லை. தன்தந்தை தன்பிள்ளையென்ற பற்றும் பிறிதின்தந்தை பிறிதின்பிள்ளை யென்ற பராமுகமுமில்லை. மாமிசபட்சணி மதுபானியென்ற நிந்தையில்லை. மானமுடைய கட்டிருந்தாலன்றோ அதன்குலைவுக்கு அவமானமுண்டு. ஆனால், ரஷ்யமக்களின் பொதுவுடைமைக்கும் விலங்குகளின் பொதுவுடைமைக்குமுள்ள வித்தியாசம் இரண்டொன்றே. முன்னதற்கு அரசுண்டு. பின்னதற்கு அஃதில்லை. விலங்குகளில் பெட்டை தன் குட்டியிடமுங் குட்டி அப் பெட்டையிடமுஞ் சிறிதுகாலமாயினும் அன்பு செலுத்தத் தடைகிடையாது. ரஷ்யமாந்தரில் அந்த அன்பும் நிகழலாகாது. பொது



வுடைமைக்கு அபாயம் வந்துவிடுமென்று பயந்து அவ்வரசு அப் பிரேமையையுந் தடுக்கின்றது.

மேனாட்டாராய்ச்சியில் மனிதன் குரங்கிலிருந்து பரிணமித்தவனாகின்றான். குரங்கினிடம் பொதுவுடைமை யிருந்தது வாஸ்தவம். குரங்கு மனிதனாக ஆகப் பொதுவுடைமை மறைந்து தனியுடைமை சித்தித்தது. தனியுடைமையாவது மக்கள் தத்தமக்கென வெவ்வேறு சொத்து மனைவி கணவன் முறை முதலியனவுடையராதல். இனி மனிதனுக்குப் பொதுவுடைமை பொருந்தாதென்பது சிறிது காட்டுதும்.

விலங்கு 'நான் எந்த நன்மையை யடையும் பொருட்டு இவ்வுலகில் வாழ்கின்றேன்' என்று ஆராயாமலே வாழ்கின்றது. ஆகலின், வயிறாரவுண்பதும் குறியாரப் புணர்வதுமே அதற்குப் போதும். மனிதனோ கணந்தோறும் அவ்வாராய்ச்சியிற் கண்வைத்தே சரிக்கின்றான். ஆனால், பொதுவுடைமையில் அவனுக்கும் அவ்வாராய்ச்சி வேண்டாம். 'விலங்கு அஃதில்லாமலே சுகமடையாமலா போயிற்று? ஆகலின் அவனுக்கும் அது அநாவசியம்' என்று அதுவாதிட்டு மனிதனைக் குறிக்கோளற்றவனாக்குகின்றது.

நாய் பூனை முதலியவற்றுள் ஒவ்வோரினமுந் தன்னொடுதானுந் தன்னொடு பிறிதும் உறவாடலுண்டா? இல்லை. ஆகலின் அவ் வினங்களில் அன்பென்னு மருங்குணமும் உதிப்பதில்லை. உறவே அன்பின் தோற்றுவாய். விலங்கினுள்ளுந் தாய்க்குங் குட்டிக்கு மிடையில் நிகழும் அன்பே அதற்குச் சான்று. வேறு அண்ணன் தம்பி அப்பன் பிள்ளை முதலிய வுறவுகள் அவ் வினத்திற் சூனியம். ஆகலின் அவ் வுறவுபற்றிய அன்பும் அதிற் பாழ். மனித வினத்தில் அவ் வுறவுகளெல்லா முண்டு. ஆகலின் மனிதன் மனசில் அந்த அன்பும் விகசிக்கலாயிற்று. பொதுவுடைமை, சாதிசமயங்களைப்போல் அக் குடும்ப முறையையும் அழிக்கவேண்டுமென்கிறது. அன்பின் வாயிலை அடைத்துவிட்டால் அன்பு வளர்வதெப்படி?

மனிதன் ஐம்பொறிகளாலும் அறிந்து இன்பதுன்பங்களை நுகருகின்றான். அவற்றுள் மெய்வாயிலாய் வரும் இன்பதுன்பங்களே மிகவுமதிகம். அந்த மெய்யென்னும் பொறியுணர்வு மரமுதல் மனிதர்வரைச் சர்வசீவர்கட்குஞ் சமமாகவே யுண்டு. ஆகலின் அதன் வழித்தாகிய இன்பதுன்பங்களும் அவற்றிற் கப்படித்தான். பொதுவுடைமை நியாயமுடையதாயின் அனைத்துயிர்க்கும் இதஞ்செய்தல் வேண்டும். ஆனால் குடும்பம் சாதி தேசம் சமயம் முதலியவற்றிற்குப் பிரதியாக வடிவத்தை வரம்பாக வைத்துக் கொண்டு மனிதவடிவெடுத்த ஒருசாருயிர்கட்கே நலஞ்செய்வதாக அது வந்துளது. மற்றப் பிறப்பெடுத்த வுயிர்களின் கதி யாதாகற்பாலது?

மனிதனுக்கே பகுத்தறிவு உண்டு. விலங்கினின்று அவனைப் பிரித்து உயர்த்திக்காட்டு மிலக்கணம் அஃதொன்றே. சிலர் விலங்கிற்கும் பகுத்தறி வுண்டென்பர். ஆயினும், அவ்வறிவுக்கு வளர்ச்சி தளர்ச்சிகள் கிடையா. மனிதனது பகுத்தறிவிற்கே அவை யிருக்கின்றன. இனிப் பகுத்தறிவு என்ற மாத்திரத்தில் பகாவறிவும் பெறப்படும். பகுத்தறிவு பிரித்தறியும். பகாவறிவு தொகுத்தறியும். ஆனால் மனிதன் நீரை இரண்டாகப் பிரித்தறிகிறான். காற்றைப் பலவாகப் பிரித்தறிகிறான், அவையெல்லாம் பகுத்தறிவாமா? ஆகா. ஒருவனது நினைவு சொல் செயல்களில்

நன்மையிது தீமையிது வெனக் காண்டலே பகுத்தறிவு. பொதுவுடைமைக்குப் பகுத்தறிவு பகை. பொது பகு வென்னும் பிரயோகங்களே அதற்குச் சாட்சி. பகாவறிவே பொதுவுடைமைக்குப பொருந்தும்.

நான் யார்? இவ்வுடலா? அதனின்வேறா? இப் பிறப்புக்கு முன்னிருந்தேனா? பின்னுமிருப்பேனா? அறிவுப் பொருளா? அறியாமைப் பொருளா? இரண்டுமா யிருக்கக் காரணமென்ன? இவ்வுலகில் ஏன் வந்தேன்? எங்குப் போகவேண்டும்? தனக்கொரு தலைவ னில்லாத் தலைவனை யுடையேனா? என்றிப்படியெல்லாம் மனிதன் ஆலோசிக்கு மியல்புடைனல்லனா? இங்ஙனம் யோசித்து அவன் ஒரு தீர்மானத்துக்குவரின் அதற்கேற்பத்தானே அவன் ஒழுகவிரும்புவான்? அப்படியொழுகுங்கால் அவனுக்கு அரசுகள் வசதிசெய்து கொடுக்கவேண்டாமா? ஆனால் பொதுவுடைமை மனிதனிடமிருந்து அச் சிந்தனாசக்தியை வேரிற் கிள்ளி வெந்நீர்விட எத்தனிக்கின்றது. அச் சிந்தனாசக்தி மனிதனைச் சமயம் தத்துவம் ஆசாரம் முதலியவற்றிற் கொண்டுபோய்த் தள்ளிவிடுமென்ற பயங்கொண்டு அது மனிதன் மதியிலும் மண்போடலாயிற்று.

பந்தம் துன்பத்துக் குறையுள். முத்தி இன்பத்துக் குறையுள். பந்தம் பிடிபடல். முத்தி விடுபடல். ‘மனிதனை மனிதன் அடக்கிவைக்கிறான். அடங்கிய மனிதன் அடையுந் துன்பத்துக் களவில்லை. அவன் சுகமடையவேண்டுமாயின் அவ்வடக்கத்தினின்று விடுபடவேண்டும்’ என்று பொதுவுடைமை சொல்லுகின்றது. ஆனால் மனிதரில் ‘லெனின்’ போன்ற அறிஞனும் கண்ணின்றிக் காணான்; கையின்றிச் செய்யான்; பின்னிருப்பதை யுணரான்; நேற்று நடந்ததையும் நாளை நடப்பதையும் இன்று நினைவுகூரான்; உறங்கும்போது முகத்தில் ஒருவன் காறியுமிழ்ந்தாலுந் தெரியகில்லான்; ஒன்றைநினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்; ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும். இவை யெல்லாம் பந்தமாகாவா? இந்த அடிமைவாழ்வைப் போக்கி வாழ்வதன்றோ உண்மையான விடுதலை வாழ்வு, இன்பவாழ்வு? பொதுவுடைமை அந்த விடுதலைக்கு எந்தவிதம் உதவிபுரியும்?

உடைமை பொதுவாய் விட்டால் மனிதனிடம் யானெனதென்னுஞ் செருக்கு அறுந்து விடும் என்கின்றது பொதுவுடைமை. அப்படியாயின் விலங்கு அச் செருக்கற் றிருக்கவேண்டும். அஃதில்லை. தனக்கொரு தலைவனில்லாத் தலைவன் எனக்குளன்: என்னை யெல்லாவற்றிலும் இயக்குபவன் அவனே: அவனையின்றி எனக்கெனச் செயலொன்றில்லை யென்னுமுண்மையைநான்மறந்து எல்லாம்நானேயென மருண்டுநிற்றலே யானென்னுஞ்செருக்கு. தனுகரண புவனபோகங்க ளெல்லாம் அத்தலைவனுடைமை யென்னுமுண்மையை நான் மறந்து அவையனைத்தும் என்னுடையனவே யென மருண்டு நிற்றலே எனதென்னுஞ் செருக்கு. பொதுவுடைமை அச் செருக்கை நீக்கவல்லதன்று; நிலைப்பிக்கவே வல்லது.

மனிதன் நன்மை தீமைகளை மனம் வாக்குக் காயங்களாற் செய்கின்றான். எத்திற வரசும் வாக்குக் காயம் வாயிலாய் நிகழும் நன்மைதீமைகளுக்கே இன்ப துன்பங் கொடுக்கவல்லது. மனத்தால் நிகழும் நலந்தீங்குக்கு அவற்றைக் கொடுக்கவல்ல அரசு எதுவுமில்லை. ஆனால், எல்லாவரசுகளுந்



தமது எளிமையை யுணர்ந்து ‘கடவுளொருவனுளன். மனிதன் நெஞ்சால் நிகழ்த்தும் வினைகளைக் கண்டு பலனளிக்குமாற்றல் அவனுக்குண்டு’ என்னுங் கடவுளியலைப் புகட்டி மனிதனை எச்சரிக்கின்றன. மனிதன் கடவுட்கஞ்சியே கடுவினை நினைகிலன். ஆனால் பொதுவுடைமை நாஸ்திகம். அதனரசில் மனிதன் மனதில் எத்தகைய கொடுமையையுங் கொள்ளலாம்; நன்மையையுந் தள்ளலாம். அவனைத் தடுப்பதற்கு அங்கு யாருமிலர். அம்மட்டோ? அவன் வாக்காலுங் காயத்தாலுங்கூடக் கொடுமை செய்வதைத் தடுக்கப் பொதுவுடைமை வலியறுகின்றது. ஒருவருமில்லாவிடத்தில் வலியவன் எளியவனை வையவும் வதைக்கவும் அவனிட மிருப்பதை வாங்கிக்கொள்ளவுஞ் செய்தால் பொதுவுடைமை யரசு அவ்வலியவனைச் சிட்சிப்பதெப்படி? அவ்வெளியவனை ரட்சிப்பதெப்படி? இன்னொருவிஷயம். பழியஞ்சின படலத்துவழக்கு உலகவியலோடு மாறுபட்டதன்று. அன்ன வழக்குகள் அநேகமாயிரம் இன்றும் நடக்கின்றன. அவற்றையும் பொதுவுடைமையரசுக்குத் தீர்க்குந் திறமுண்டா?

இச்சுருங்கியவாராய்ச்சியால், மனிதவியல்போடு முற்றிலும் மாறுபட்டதேபொதுவுடைமையென்பது விளக்கமாயிற்று. குறிக்கோட்கொலை, அன்புக்கொலை, அறிவுக்கொலை, சுதந்திரக்கொலை, செருக்கறுக்கவல்ல தலைவனுணர்ச்சிக்கொலை, மறைவிலுந் தீயன புரியலாகாதே யென்ற நடுக்கக்கொலை முதலிய எத்தனை கொலைகளை அவ்வரசு செய்கின்றது? ‘தீவினைக்கும் இன்பப்பலனையே தருகின்றோம்: சேரவாரும் செகத்தீரே’ யென்று கூவியழைக்கும் அக்கொடுங்கட்சியில் துஷ்டர்களே துள்ளியோடிச்சேர்வர். அதிவிருப்பனவாகத் தெரியும் அன்பு முதலிய மனிதவியல்புக ளெல்லாம் அதற்குமுன் அம்மனிதர்பாலிருந்த ஆஸ்திக விளைவின் தோற்றங்களே. தனியுடைமைக் கொள்கைதான் எவ்விதக் கொலைக் கொடுமையுமின்றி நியமநெறியில் சர்வசீவர்களையும் ஆதரிக்கவல்லது. நட்பை வளர்க்குமது பகையையும் வளர்க்குமாறெங்ஙனம்? தனியுடைமையில் ஒருவன்போய் மற்றவனுடைமையில் வீழ்வது முதலிய கொடுமைகளுக்கு அறியாமையால் அவனிடமுதிக்கும் பொதுவுடைமைப் பித்தமே காரணம். தனியுடைமையில் முடிமன்னர் முல்லைக்கொடிக்குப் பொற்றேர் ஈந்தனர்: மயிலுக்குப் போர்வை வழங்கினர்: தவளைக்குப் பொன்சொரிந்தனர்: ஆன்கன்றுக்கு நிகரெனத் தம்மரசிளங் குமரனைத் தேர்க்காலிற் கிடத்தி யரைத்தனர். இவற்றால் ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர்வரை அனைத்துயிர்கட்கும் இதஞ்செய்யுந் தனியுடைமையை நிந்திப்பது புத்தியாமா? உடைமை பொதுவாவதிற் பயனில்லை. எல்லாருஞ் செல்வராய்விடின் மனிதர் கொடுமை செய்யமாட்டாரா? ஆயின் இப்போதுள்ள பணக்காரரெல்லாம் பரமசாதுக்களாக வேண்டுமே. அப்படித்தானா? ஆகலின், மனமே பொதுவாகவேண்டும். மனம் நெகிழ்ந்து எல்லார்க்கும் இரங்குதலே அது. அப்பொருட்டு ஆதரிக்கத்தக்கது தனியுடைமை யொன்றுதான். பொதுவுடைமை தள்ளத்தக்கதே. இவ்வாறு சொல்லும் எம்மை ஒருதனவந்தர்போலுமெனச் சிலர் ஐயுறலாம். அஃதில்லை.

மெ. குப்புசாமி.

௨

# உருத்திரன்.

[அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் எழுதியது.]

உருத்திரன் என்னுந் திருநாமமானது தூரியப்பிரம மகாருத்திரராகிய சிவனுக்கும், அவரின் வேற்றுமையின்றி விளங்கும் அவரது குமாரர்களுக்கும், அவரைத் தியானிக்கும் கணங்களுக்கும், அவர்திருமேனியைத் தாங்கிய காலாக்கினி உருத்திரர் முதலியோருக்கும், அக்கினிதேவனுக்குஞ் செல்லும்.

"உருத்திர னென்னு நாம மொப்பிலா வரற்கு மன்னுன்
றாத்தகு சிறார்க ளானோர் தங்கட்கு மனையன் பாதங்
கருத்திடை யுன்னிப் போற்றுங் கணங்கட்கு மவன்றன் மேனி
பரித்திடு வோர்க்குஞ் செந்தீப் பண்ணவன் றனக்கு மாமால்."
(கந்தபுராணம் ததீசிப்படலம். சரு)

சனன சாகரத்திற்பட்டோர்களுடைய கவலைகளை உருக்கி ஒழித்து அவர்களை உயர்த்திவிடலால் சிவபெருமானுக்கு 'உருத்திரன்' என்னும் நாமம் எய்திற்று. இங்ஙனம் அவருடைய திருப்பெயர் அவர் திருக்குமாரர்கட்கும், அவர் திருவடிகளை அடைந்தவர்களுக்கும், அவர் சாரூப்பியமுற்றோருக்கும் எய்தியது.

"இன்னலங் கடலுட் பட்டோர் யாரையு மெடுக்கு நீரா
லுன்னரும் பரம மூர்த்தி யுருத்திர னெனும்பேர் பெற்றா
னன்னவன் றரவந் தோர்க்கு மடியடைந் தோர்க்கு மன்னுன்
றன்னுரு வெய்தி னோர்க்குஞ் சார்ந்ததா லவன்ற னிப்பேர்."
(ததீசிப்படலம் — சசு.)

உருத்திரமூர்த்தி உயர்ந்த பரம்பொருளாயுள்ளவர். அவருடைய திருவடிகளைத்தியானித்தோர் அவருடையதிருமேனியையும் நாமத்தையுந் தாங்குவர். அவர்களுடைய தொகை அளவுபடாது. சிவனுக்குரிய உருத்திரர் என்னும் நாமத்தைப் பெற்றவர் அப்பெயர் மாத்திரையால் அவரியல்பை அடையார்கள். அவர்களுடைய வடிவமு மங்ஙனமே சிவரூபமாகாது. ஆயினும், அவர் பூவுலகத்தாரும் வானுலகத்தாரும் கடவுளென்றே துதிக்க இருப்பர். பிரமாவும் புகழுந்தன்மையுடைய ஆப்தராயிருப்பர். (ததீசிப்படலம்—௯௦—௯௨). இவர்கள்மகாஉருத்திரமூர்த்திக்கு ஒப்பாகார்கள். இந்த மகாஉருத்திரராகிய சிவன் பிரமா விட்டுணு உருத்திரர் என்னும் மூவருக்கும் தூரிய மூர்த்தி என்று கைவல்லியம் முதலியசுருதிகள் முழங்குகின்றன. இவ்வுண்மை உணரமாட்டாது அம்மூவரு ளொருவராகிய காரியருத்திரர் என்றும், பிரமாவின் நெற்றியினின்று ஓர்கால் தோற்றிய நீலலோகிதருத்திரர் என்றும் இடர்ப்படுவாரை நோக்கியன்றே,

"தேவரி லொருவ னென்பர் திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்ற தோரார்"
(சிவஞானசித்தி கம்—௬ சகூ) எனவும்,



'தேவர்கோ வறியாத தேவ தேவன் செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை, மூவர்கோ னய்நின்ற முதல்வன்"
(திருவாசகம் திருச்சதகம் - ௯௰)எனவும்,

"முந்து நடுவு முடிவு மாகிய மூவ ரறியாச்
சிந்துரச் சேவடி யானை (ஷை குயிற்பத்து) எனவும்,

"அரியாகிக் காப்பா னயனாய்ப் படைப்பா
னரனா யழிப்பவனுந் தானே" (பதினோராந்திருமுறை) எனவும்,

"மூவரின் முதல்வன்" (ததீசிப்படலம்)

எனவும் திருவாக்குகள் எழுந்தன வென்று உணர்க.

வேதங்களிலே உருத்திரன் என்னும் பெயரால் தாழ்ந்தவராகிய மற்றையோர்களைக் கூறினமை தூரிய உருத்திரரைச் சாராது; இத்தூரியஉருத்திரரைச் சுட்டியுரைத்த உருத்திரநாமமும் ஏனையோர்க்குச் செல்லாது. சிவபெருமானுக்கு உருத்திரப் பெயர் உண்மை,

"உம்ப ரானை யுருத்திர மூர்த்தியை
அம்ப ரானை யமலனை யாதியைக்
கம்ப நீர்க்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
எம்பி ரானைக்கண் டின்பம தாயிற்றே."

என்னும் அப்பர்சுவாமிகள் தேவாரத்தாலும் உணரப்படும்.

சிவபெருமானது சாரூபத்தைப் பெற்ற பதினொரு உருத்திரரும் பிரமாவுக்கு அருள்புரிந்த சரித்திரம் வருமாறு:—முன்னொரு கற்பத்தில்பிரமா உலகு உயிர்களைப் படைத்து அகந்தை கொண்டு சிவபெருமானை மறந்து படைக்க, அது நிறைவேறாமை கண்டு வருந்தி, எம்மை முன்னாளிலே பெற்றருளிய பஞ்சகிருத்திய முதல்வராகிய சிவபெருமானை மறந்தேன் போலும்; அவரருளைப் பெற்றாலன்றி இத்தொழில் கைகூடாதென நினைத்துத் தவஞ் செய்தார்; சிவபெருமான் வாராமைகண்டு துன்பமுற்று அழுதார்; கண்ணீர் விழவிழப் பேய்களாய் மிகுதியாக எழுந்து நெருங்கிற்று. பிரமா அவற்றைக்கண்டு துன்பமுற்று வீழ்ந்து சோர்ந்தார். சிவபெருமான் உணர்வைக்கொடுத்து அவர் கனவில் வந்து, "மைந்தனே! இனி நீ வருந்தாதே; எழுக; நீ நின்னைப் பரமென நினைத்து எம்மைமறந்தாய்; ஆதலால், உனக்குச் சிருட்டித்தொழில் கைகூடவில்லை; அதுநிறைவேறும்படி நம்முடைய பதத்திலுள்ள உருத்திரரை உன்னிடத்தில் அனுப்புவோம்." என்றருளிச் செய்தார். பிரமா எழுந்து மனதிற் றெளிவடைந்து, அக்கனவை நினைத்தார். பதினொரு ருத்திரர்களும் தூரிய உருத்திர மூர்த்தியினுடைய திருவருளால் பிரமனது நெற்றியிற் றோன்றிநின்றார்கள். பிரமா அவர்களைப்பார்த்து, "நீவிர் வந்தகாரணம் என்ன?" என்று வினவ, "உன் படைப்புத்தொழில் கைகூடும்படி சிவபெருமான் எங்களைவிடுத்தருளினார்' என்றுகூறினார்கள். பிரமா 'நீவிர் உயிர்களைப் படைக்குதிர்' என்றுகூற, அவர்கள் தம்மைப் போலப் பதினொருகோடி ருத்திரர் கூட்டத்தைத் தந்தார்கள். பிரமா அவர்களைப்பார்த்து, 'உயிர்களை இருவினைக்கீடாகப்

படைப்பதன்றி, இவ்வாறுபடைத்தல் முறையல்ல." என்றார். பதினொரு ருத்திரர்களும் 'நீ உயிர்களை முன்போலப் படைத்துக்கொண்டிருப்பாய்; நாம் எமது பதத்துக்குப்போவோம்" என்று கூறிப் பிரமாவைப் படைக்கும்படி செய்து, சிவபெருமான் தமக்குக் கொடுத்தருளிய புவனத்தை அடைந்தார்கள்: அவர்கள் படைத்த பதினொருகோடி யுருத்திரர்களும் சிவபெருமானுடைய திருவருளினாலே தேவர்கூட்டத்தைச் சேர்ந்தார்கள்.

(உருத்திரர் கேள்விப்படலம்)

சிவபெருமான் சுப்பிரமணியக் கடவுளுக்குச் சூரன் முதலிய அவுணர்களோடு எதிர்த்து யுத்தஞ் செய்யச் செல்லுமாறு விடைகொடுத்து, மகாதேவன், அரன், ருத்ரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், பீமன், தேவதேவன் பவோற்பவன், கபாலிகன் என்னு மிப்பதினொரு ருத்திரர்களையே தோமரம், கொடி, வாள், குலிசம், அம்பு, அங்குசம், மணி, தாமரைப்பூ, தண்டம், வில், மழு என்னும் பதினொருபடையாக்கி அறுமுகக் கடவுளுடைய கரத்திற் கொடுத்தாரென்று கூறப்பட்டிருக்கின்றது. இதனானும் உருத்திரர்களாகிய சிவனடியார்களின் பெருமை விளங்கும்.

(விடைபெறு—௯௪—௯௭.)

உருத்திரபதம் அக்கினியை உணத்துதற்குக் காரணம் என்னை யெனிற் கூறுதும். முன்னோர்காலத்தில் தேவர்களுக்கும்அசுரர்களுக்கும் போர் நிகழ்ந்தது. அப்பொழுது தேவர்கள் தமக்குவாய்த்த பெருநிதியைக் காக்குமாறு, அக்கினியிடத்து வைத்துப்போய்ப் பகைவரோடு யுத்தஞ்செய்து மீண்டுவந்து கேட்க, அக்கினி அதனை அபகரித்துக்கொண்டு கொடாது ஓடினான். அதுபற்றி அவனை அத்தேவர் வலிசெய்யலுற்றுழி அவன் ரோதனஞ் செய்தான் (அழுதான்).அதனால், அவனுக்கு ருத்திரன் என்னும்பெயர் எய்திற்று எனச் சுருதி கூறுகின்றது.

(தசீசி—௪௭—௪௮—௪௯)

இன்னும், ருத்திரப்பெயர் யசுர்வேதத்திலே யாகத்துக்குங் கேட்கப்படுகின்றது. அது எதனால் எனின், உருத்திரனோடு இயைபுடைத்தாகியயாகத்துக்கு அஃது ஆகுபெயராய் வந்தது என்று உணர்க. உயிர்களுக்குத்தாபத்தை உண்டாக்கி அவைகளை இரங்கச் செய்தலின் சுரத்துக்கும் அப்பெயர் வழக்கு உண்டாயிற்றென அறிக.

இனிப் புராணங்களினும், பாரதத்தினும் விட்டுணுவுக்கும் பிரமாவுக்குந் தாழ்வாக உருத்திரப்பெயராற் கூறப்படுவோர் காத்தற்றொழிலும் படைத்தற்றொழிலும் இனிது நடாத்துதற்பொருட்டு சங்கார உருத்திரர் கூறாய் அவர்பாற் றோன்றிய நீலலோகிதர் முதலிய அவதார மூர்த்திகளேயாம் என்று உணர்க.

இதனானே உருத்திரப்பெயர் வழக்கு இவ்விவர்க்கு உண்டென்பதும், சிவனை ஏனைத்தேவரோ டொப்பவைத்து எண்ணாது, யாவர்க்கு மேலாம் அளவிலாச் சீருடைய இறைவரெனத் தேர்ந்து வணங்குதலும் வாழ்த்துதலும் நன்றாமென்பதும், பிறவும் பெறப்பட்டமைகாண்க.

———

உ

# நாஸ்திகர் யார்?

———

'சைவக்கடவுளாகிய சிவனை வைஷ்ணவர் முதலிய மற்ற ஆஸ்திகர் பொய்யென்பர். வைஷ்ணவக் கடவுளாகிய விஷ்ணுவைச் சைவர் முதலிய மற்றஆஸ்திகர் பொய்யென்பர். அப்படியே அல்லா ஏகோவாமுதலிய எல்லாத் தெய்வங்களும் மற்ற ஆஸ்திகமதப் பார்வையிற் பொய்யாகும். ஆகலின் எல்லாக் கடவுளரும் இல்பொருள்கள்தான். அப்போது ஆஸ்திகம் நிலைப்பது எப்படி? ஆகவே உலகடங்கலு முள்ள சர்வமதமக்களும் நாஸ்திகரே' யென்று சுயமரியாதை யியக்கம் விவகரிக்கின்றது. அவ்விவகாரத்தின் துர்ப்பலத்தைச் சிறிது காட்டுதும்.

1. கள்ளுக்குடிப்பவனையே குடிகாரனென்று யோக்கியர் அழைப்பர். அக்குடிகாரன் அந்த யோக்கியரைப்பார்த்து 'நான் கள்ளுக்குடித்தால் நீங்கள் தண்ணீரையாவது குடிக்கவில்லையா? இரண்டுங்குடிதானே. ஆகலின் நீங்களுங் குடிகாரரே' என்கின்றான்.

2. மிருகதருமம் மனிததருமம் எனத் தருமம் இருவகை. மிருகதருமம் நாஸ்திகமென்பதிற் சந்தேக மில்லை. மனித தருமமும் நாஸ்திகந்தானா? அல்லது ஆஸ்திகமேயா? நாஸ்திகர் அதனையும் நாஸ்திகமென்பர். ஆஸ்திகரோ அதனை ஆஸ்திகமே யென்பர். ஒருமிருகம் அம்மக்களைப்பார்த்து 'மனித தருமம் நாஸ்திகமில்லை யென்பாரும் ஆஸ்திகமில்லை யென்பாருமாய் நீங்களே பிளந்து கிடக்கின்றீர்கள். ஆகையால் மனித தருமமென்பதே அர்த்தமற்றதாகும். மிருகதரும மொன்றே வாஸ்தவம். நீங்களும் மிருகங்கள்தான்' என்கின்றது.

3. மக்களுக்கு வேண்டுவது பகுத்தறிவு. ஆனால், ஒருபகுத்தறிவு தங்கையையும் பெண்டாளலாமென்கிறது. இன்னொரு பகுத்தறிவு அது கூடவே கூடாதென்கிறது. ஒருமூடன் பகுத்தறிவு வேண்டுமென்பாரைப் பார்த்து 'உண்மையான பகுத்தறிவு இன்னதுதானென்று பகுத்தறிவுப்பித்தாகிய வுங்களுக்குள் இன்னந் தீர்மானமாகவில்லை. ஆகலின் மூடத்தின் வேறாய்ப் பகுத்தறிவென ஒன்றுண்டென்பது வெறும் பொய். மூடமொன்றே மக்களிட மிருப்பதும் மக்களுக்கு வேண்டுவதுமாகும்" என்கின்றான்.

சு—மக்களது விவகாரம் அம்மூன்றையும் போலவே யிருக்கிறது. ஆஸ்திகமென்பதற்குக் கடவுளுண்டென்பதே பொருள். நாஸ்திகமென்பதற்குக் கடவுளில்லை யென்பதே பொருள். கடவுள் உண்டு இல்லையென்னும் வாதத்துக்கும், கடவுள் சிவனல்லன் விஷ்ணு, விஷ்ணுவல்லன் சிவன் என்பனவாய வாதத்துக்கும் பேதந்தெரிய மாட்டாத போதமும் ஒரு போதமா? கடவுள் உண்டு இல்லை யென்பது அரசன் உண்டு இல்லை யென்பது போன்றது. கடவுள் சிவனல்லன் விஷ்ணு, விஷ்ணுவல்லன் சிவன் என்பன, அரசன் நளனல்லன் புஷ்கரன் புஷ்கரனல்லன் நளன் என்பன போன்றவை. சு - மக்களின் விவகாரம் யோக்கியனையுங் குடிகாரனுக்குகின்றது;

மனிதனையும் மிருகமாக்குகின்றது; அறிஞனையும் மூடனாக்குகின்றது. அம்மம்ம! அவர் மௌடீகமே மௌடீகம். ஆஸ்திகத்திற் சைவம் வைஷ்ணவம் முதலாகப் பலமதங்களிருக்கின்றன. அப்படியே நாஸ்திகத்திலும் பல மதங்களுண்டு. புத்தசமணங்கள் நாஸ்திகமல்லவா? புத்தருஞ் சமணரும் எத்தனை சண்டையிட்டுக் கொண்டாலும் நாஸ்திகத்தை ஏகோபித்து ஆதரிப்பர். அப்படியேதான் சைவர் வைஷ்ணவர் முதலியோரும் எத்தனை சண்டையிட்டுக்கொண்டாலும் ஆஸ்திகத்தை ஏகோபித்து ஆதரிப்பரென்க. புத்தருஞ் சமணருஞ் சண்டையிட்டுக்கொண்டால் நாஸ்திகம் பொய்யாகாது. அதுபோல் ஆஸ்திக சமயங்கள் சண்டையிட்டுக் கொண்டால் ஆஸ்திகமும் பொய்யாகாது. சுயமரியாதை யியக்கம் கடவுளில்லை யென்று சொல்லுகிறது. ஆகலின் அவ்வியக்க மக்கள்தான் நாஸ்திகர். ஆனால், பிறர் அவ்வியக்கத்தை அவ்வாறழைக்கக் கூடாது. அழைத்தால் அதற்கு மானங் கெட்டுவிடும். ஒருக்கால் பிறர் தன்னை அவ்வாறழைத்தாலும் தன்மானத்தைக் காத்துக்கொள்ளவே அது ஆஸ்திகத்தையும் நாஸ்திகமென்று நாட்டப்பார்க்கிறது. என்னபுத்தி! இன்னும் புத்தசமணங்களிலாயினும் மக்கள் ஆசரிப்பதற்குப் பலவரன்முறைகள் உள்ளன. சுயமரியாதை யியக்கத்தின் நாஸ்திகமோ தட்டுக்கெட்ட நாஸ்திகமென்பதும் அறியற்பாலது.

---

## கடவுட்காட்சி.

பிறவிக் குருடனொருவன் சந்திரனென்ற வார்த்தையை அடிக்கடி கேட்டிருந்தான். ஆனால், அப்பெயர்ப்பொருளை அவன் தெரியமுடியவில்லை. ஆயினும் அப்பொருளை யறிய அவன் ஆசைப்பட்டு நின்றதைக் கண்ணுடைய பலர்கண்டு அவனுக்கு அப்பொருளைத் தெரிவிக்கத் தொடங்கினர். அவனைப்பார்த்து அவர்களிலொருவன் சந்திரன் வட்டவடிவமானதென்றான். இன்னொருவன் வெள்ளைநிறமுடையதென்றான். பின்னொருவன் ஆகாயத்திற் சரிப்பதென்றான். மற்றொருவன் இரவில் ஒளிதருவதென்றான். வேறொருவன் ஞாயிற்றினொளியை வாங்கி வெளியிடுங் கண்ணாடியென்றான்: பிறிதொருவன் பெருத்துஞ் சிறுத்தும் வருமொரு ஒளியுருண்டை யென்றான். அடுத்தொருவன் பூமியைச் சுற்றிக்கொண்டே சூரியப் பிரதக்ஷிணஞ் செய்யும் ஒரு சிறிய கோள மென்றான். கடைசியொருவன் இத்தனையும் இன்னும் இன்னின்ன இலக்கணங்களுஞ் சேர்ந்து விளங்குமொரு பொருளென்றான். அத்தனைபேரும் எத்தனை சொல்லியும் அக் குருடனுக்கு அப் பெயர்ப்பொருள் தெரிந்ததா? தெரியாமையால் அப்பொருளை யில்லையென்று சொல்லி அப் பெயரைக் கற்பனையென அவன் நிந்திக்கலாமா? குருடு நீங்கினால் அப் பெயர்ப்பொருள் தானே விளங்குகின்றது. அப்படியே கடவுளைக் கண்ட பலர் அப் பெயர்ப்பொருளைப் பலவாறு விளக்கியுள்ளார். சுயமரியாதை யியக்கக் குருடர் அப் பொருளைக் காணுங் கண்ணற்று அப் பெயரைக் கற்பனையெனப் பிதற்றித் திரிகின்றனர். அவருக்கிருக்கும் அறியாமைக் குருடு நீங்கிவிடின் கடவுட்பொருள் அவர்களுக்குத் தெரியும். ஆனால், பிறவிக்குருடனுக்காயினுங் கண்திறந்தாலுந் திறக்கும். நம் சு. மக்களுக்கு அறியாமைக்குருடு இப்போதைக்குள் நீங்குவதாயில்லை.

---

உ

## பெயரும் பொருளும்.

‘தீ நீர் முதலியன பெயர்கள். அவற்றின் பொருள்களை நாம் நேரிற் காண்கிறோம். ஆகலின் அப்பதங்களெல்லாம் அர்த்தமுடையனவென்பது சந்தேகமற்ற விஷயம். அப்படியே கடவுள் உயிர் முதலியனவும் பதங்கள். ஆனால் அவற்றின் பொருள்களை இதுவரை யாரும் நேரிற் கண்டதில்லை. ஆகலின் அப்பதங்கள் அர்த்தமற்றன வென்பதும் சந்தேகமற்ற விஷயம்’ என்று இக்காலைச் சில சாமானியர் விவகரிக்கின்றனர்.

அவரைப்பார்த்து நாம் ‘தீ நீர் முதலியன பொருள்கள். அவற்றின் பெயர்களை நாம் நேரிற் படிக்கிறோம். ஆகலின் அப்பொருள்களெல்லாம் பெயருடையன வென்பது சந்தேகமற்ற விஷயம். ஆனால், உலகம் பலபொருட் கூட்டம். அவற்றுள் எத்தனையோ பொருள்களின் பெயரை இதுவரை யாரும் நேரிற் படித்ததில்லை. ஆகலின் அப்பொருள்களனைத்தும் பெயரற்றன வென்பது சந்தேகமற்ற விஷயம்’ என்றெதிர்த்தால் அவர் சம்மதிப்பாரா? சம்மதிப்பாராயின், உலகிடைக் காணப்படும் எண்ணிறந்த பாஷைகளிலும் அவ்வஸ்துக்களிற் குறிப்பிட்டவொன்றுக்குப் பெயரில்லையென அவர் நிரூபிக்கவேண்டும். அது அவரால் முடியாது. ஆகலின், அப்பொருள்களுக்கும் பெயர்கள் உள்ளனதான். ஆனால், நமக்கு அவை தெரியவில்லை யென்பதே முடிவு.

ஆனால் அச்சாமானியர் ‘நாம் ஒரு பொருளைக்காண்கிறோம். அதன் பெயர் நமக்குத் தெரியாது.. ஆயினும் நாம் அதற்கு ஏதேனும் ஒருபெயரைப் புதிதாகஇட்டு வழங்கவில்லையா? அப்படியே கடவுள் உயிர்முதலிய பெயர்களின் மெய்ப்பொருளுந் தெரியாது. ஆகலின் அப்பெயர்களுக்கு ஏதேனும் நாமறிந்த பொருள்களைச் சமர்த்தித்து வழங்கலாமா?’ என மீண்டும் வினவுவர்.

பொருளுக்குப் பெயரிடுமுறை இரண்டு. ஒன்று ‘கடல்மீனுக்கு நுளையனிட்டது பெயர்’ என்பது போன்றது. அதற்கு இடுகுறி யென்றுபெயர். இன்னொன்று அப் பொருளினியல்பு தெரிந்து அதற்கேற்ப இடுவது. அதற்குக் காரணக்குறியென்றுபெயர். அப்படியே பெயருக்குப் பொருள்காணுமுறையுமிருக்கிறது. அதுதான் உத்தேசம் இலக்கணம் பரீட்சை யென்னுமூன்றுமாம். அம்முறையில் கடவுள் உயிர் முதலிய சொற்களுக்குப் பொருள்காணவேண்டும். உலகில் அத்தனை ஆஸ்திக சமயங்களும் அப்பொருட்டே யுளவாயின. மேலும் பெயர்தெரியாப் பொருளுக்குப் புதுப்பெயர் வழங்குவதே வழக்கம். பொருள்தெரியாப் பெயர்களுக்குப் புதுப்பொருள் வழங்குவது யாண்டுமில்லை.

ஆகவே, புத்தியுள்ள மனிதன் ஒருபெயருக்குப் பொருள் தெரியாமையால் அப்பெயரைப் பொருளற்றதென்றும், ஒருபொருளுக்குப் பெயர்தெரியாமையால் அப்பொருளைப் பெயரற்றதென்றுங் கூறவேமாட்டான் என்க.

கா. ராஜமாணிக்கப்பிள்ளை.

---

உ

# ஆதிபகவன்.

திருக்குறள் முதற்பாவிற் பிரயோகமாகும் 'ஆதிபகவன்' என்னுந் தொடரை ஆதியையுடைய பகவன் எனப்பிரித்து மங்கை பங்காளன் எனப் பொருள்படுத்துகிறார் திரு. பா. ரா. பரமசிவ முதலியார். சிவநேசன்' ஆண்டு 6–திங்கள் 9–பக்கம் 346–350 பார்க்க. திருவள்ளுவர் கடவுளைப் பெண்ணாகவும் ஆணாகவும் வைத்தே வழிபட்டுள்ளார்: ஆகலின் அவரும் ஆண்களிடத்திலும் பெண்களிடத்திலுஞ் சமநோக்குள்ளவர்தான் என்று யாருக்கோ நிரூபித்துக் காட்டும் பொருட்டு அம்முதலியார் வலிந்து தேடியபொருள் அது. ஆயினும் அப்பொருள் அந் நிரூபணத்துக்குச் சிறிதும் உதவுமாறில்லை. ஆதியையுடைய பகவன் என்றால், ஆதிஉடைமையாகும். பகவன் உடையனாவான். உடைமையும் உடையனுஞ் சமமாதல் யாண்டுமில்லை. அர்த்தநாரீசுவரன் உமையொருபாகன் மங்கைபங்காளன் முதலியனவும் பார்வதியாரை உடைமையாகவும், பரமேசுவரரை உடையவராகவுமே கொண்டபிரயோகங்கள். ஆகலின் ஆதிபகவன் முதல் அப்பிரயோகங்களனைத்தும் கடவுளை ஆண்பாலாகவே வைத்து வழுத்துவன. பரமேசுவரரை உடைமையாகவும் பார்வதியாரை உடையாராகவும் காட்டும் பிரயோகங்கள் தமிழிலோ வடமொழியிலோ உள்ள பெண்பெரியார் வாக்குக்களிலேனுங் காணப்படுமோ? யாம் விரும்புவன அர்த்தாசுவர நாரி, சிவனொரு பாகி, காளைபங்கினள் முதலியனபோன்றவை. ஆகவே, திருவள்ளுவர் 'ஆதிபகவன்' என்ற தொடராலும் கடவுளை ஆண்பாலாகவே கொண்டுவழிபட்டுத் தமக்குப் புதுத்தமிழர் ஆசைப்படுகிறபடி ஆண் பெண் சமத்துவக் கொள்கையில்லை யென்பதையே விளக்கியுள்ளார்.

மே. குப்புசாமி.

---

வள்ளுவர்சீ ரன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணந் தொகுசித்தி யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம்.

(உமாபதிசிவாசாரியர்.)

உ

கணபதி துணை

# சங்கர நயினார் கோயிற்

# சங்கரலிங்க உலா.

இது

மகாமகோபாத்யாய—தாக்ஷிணாத்ய கலாநிதி

## டாக்டர் உ. வே. சாமிநாதையரால்

பரிசோதித்துத்

தாம் நூதனமாக எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன்

பதிப்பிக்கப்பெற்றது.

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலை.

ஸ்ரீமுக௵ சித்திரை௴

1933

All rights Reserved] [விலை அணா - 6.

உ

# இப்புத்தகத்திலடங்கியவை


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | முகவுரை ... ... ... | i–x |
| 2. | சங்கரநயினார் கோயிற் சங்கரலிங்க உலாவும் குறிப்புரையும் ... ... | 1 - 40 |
| | தலவிசேடம் முதலியன ... ... | 1 |
| | சித்திரைத்திருவிழா ... ... | 7 |
| | திருப்பள்ளி யெழுச்சி முதலியன ... ... | 8 |
| | திருவாபரணம் புனைந்தருளுதல் ... ... | 9 |
| | உடன் வருவோர்கள் ... ... | 13 |
| | திருத்தேரில் எழுந்தருளல் .... ... | 15 |
| | இசைக்கருவிகள் ... ... | 17 |
| | திருச்சின்னம் ... ... | 18 |
| | குழாங்கள் ... ... | ,, |
| | குழாங்களின் கூற்று ... ... | 20 |
| | பேதை ... ... | 23 |
| | பெதும்பை ... ... | 25 |
| | மங்கை ... ... | 27 |
| | மடந்தை ... ... | 30 |
| | அரிவை ... ... | 32 |
| | தெரிவை ... ... | 34 |
| | தசாங்கம் ... ... | 35 |
| | பேரிளம்பெண் ... ... | 36 |
| | சித்திரசாலைக் காட்சி .... ... | 38 |
| | காவை வடமலைப் பிள்ளையன் பணிகள் ... | ,, |
| 3. | சங்கரநயினார் கோயில் சம்பந்தமான செய்திகள் உள்ள நூற்பகுதிகளும் தனிப்பாடல்களும்... | 41 - 6 |
| 4. | ஏட்டுப்பிரதி ஒன்றில் வரையப்பெற்றிருந்தவை | 46 |
| 5. | விஷயங்கள் முதலியவற்றின் அகராதி ... | 47 - 8 |

உ

கணபதி துணை.

# முகவுரை.

---

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

காரேறு நெடுங்குடுமிக் கயிலா யன்காண்
கறைக்கண்டன் காண்கண்ணார் நெற்றி யான்காண்
போரேறு நெடுங்கொடிமே லுயர்த்தி னான்காண்
புண்ணியன்கா ணெண்ணரும்பல் குணத்தி னான்காண்
நீரேறு சுடர்ச்சூலப் படையி னான்காண்
நின்மலன்கா ணிகரேது மில்லா தான்காண்
சீரேறு திருமாலோர் பாகத் தான்காண்
திருவாரூ ரான்காணென் சிந்தை யானே.

திருச்சிற்றம்பலம்.

தெய்வங்களையும் அரசர்களையும் உபகாரிகளையும் ஆசிரியர்களையும் புகழ்ந்து புலவர்கள் பாடும் தமிழ்ப் பிரபந்தங்கள் பலவற்றுள் உலா என்பது ஒன்று. இது பாட்டுடைத் தலைவனது பவனியைச் சிறப்பித்துப் பாடுதலின் இப்பெயர் பெற்றது. தலைவன் உலாவருகையில், பேதைமுதற் பேரிளம்பெண் ஈறாக உள்ள எழுபருவத்துப் பொதுமகளிர் அவனை நயந்தாரென்னும் பொருளமையக் கலிவெண்பாவால் இயற்றப்பட வேண்டுமென்பது இதற்குரிய இலக்கணம்.

சங்கரலிங்க உலா என்பது பாண்டிநாட்டுச் சிவஸ்தலங்களுள் ஒன்றாகிய சங்கரநயினார் கோயிலில் எழுந்தருளியுள்ள சங்கரலிங்கமென்னும் திருநாமமுள்ள சிவபெருமான்மீது இயற்றப்பெற்றது. இது வரராசை உலா எனவும் வழங்கும். இதனை இயற்றிய ஆசிரியர் இன்னாரென்று தெரியவில்லை; இதன்கண் காவை வடமலையப்பப் பிள்ளையன் செய்த திருப்பணிகளைப் பற்றிய செய்திகள் கூறப்படுதலால், அப்பிள்ளையன் காலத்துக்குப் பிற்பட்டவர் என்பதுமட்டும் பெறப்படுகிறது. இந்நூல் 312 கண்ணிகளை உடையது.

இத்தலத்தில் சிவபெருமான்,

"ஒருபாற் புலித்தோ லுடைதயங்க மற்றை
ஒருபாற்பொன் னுடை யொளிர—ஒருபால்
மழுவு மொருபால் வளையுந் துலங்கத்
தழுவு முருவமைந்து" (கண்ணி, 13—4)

சங்கரநாராயணராக எழுந்தருளி யிருக்கின்றார். அவருக்குரிய அறுபத்து நான்கு மூர்த்தங்களில் சங்கரநாராயண மூர்த்தம் ஒன்று. அம்பிகையின் வேண்டுகோளுக்கிரங்கி அவர் இத்திருவுருவத்தோடு இத்தலத்தில் எழுந்தருளினர் என்பது புராணவரலாறு. இஃது இந்நூலிலுள்ள நான்காங் கண்ணி முதலியவற்றால் விளங்கும்.

"கங்கா யமுனைச் சங்கமம் போலவும்
சங்கர நாரணர் சட்டகம் போலவும்
வெண்பாவு மாசி ரியமுமாய் விராஅய்ப்
பண்பார் புறநிலை ..............."

(யா. வி. சூ. 2, மேற்.)

என்னும் பழைய உதாரணச்செய்யுளில் மருட்பாவுக்கு இம்மூர்த்தம் உவமையாகக் கூறப்பெறுதல் இங்கே அறிதற்குரியது.

இத்தலத்திற்கு இந்நூலையன்றித் தமிழ்ப்புராணம் ஒன்றும், *அந்தாதி ஒன்றும் உள்ளன.

இந்நூலின்கண் இத்தலவரலாறுகள் பலஅமைந்திருக்கின்றன. கௌரி பூசித்த செய்தி முற்பகுதியில் (4 - 16) விரிவாகச் சொல்லப்படுவதோடு, பின்னும், "நேசிக்கு மன்பா னிறைகருணை யாவுடைத்தேன், பூசிக்கும் புன்னைவனப் பூங்கனியே" (143) எனவும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வரலாறு இத்தலத்திலுள்ள சித்திரசாலையில் ஓவியமாகக் காட்டப்பெற்றிருந்ததென்பதை, "நீடுபுன்னைக்-காவைநே சித்துவந்த கண்ணுதலை யாவுடைய, பாவை பூசித்த படிபாரீர்" (234) என்பது தெரிவிக்கின்றது.

சங்கன், பதுமன்என்னும் மகாநாகர் இருவருள் ஒருவர் உண்மைப்பொருள் சிவபெருமானென்றும், மற்றொருவர் திருமாலென்றும் வாதித்துக்கொண்டிருந்து பின்னர் வியாழபகவானது ஏவலால் வந்து இத்தலத்தில் தவஞ்செய்ய, இருவரும் ஒருவரென்பது அவர்களுக்குப் புலப்படச்செய்தற்கு இறைவர் சங்கரநாராயணத் திருவுருவத்தைக் காட்டியருளினர். இவ்வரலாறு முற்பகுதியிற் (17 - 9)

* இவ் வந்தாதி என்னால் அச்சிடப்பட்டுவருகிறது.



சொல்லப்பட்டிருப்பதன்றி, "சங்கபற்ப, நாகம் பரவவந்த நாதனார்" (33) எனவும், குழாங்களின் கூற்றில், "பூத்த மதிவெதுப்பும் போதுசங்க பற்பரென, வாய்த்த வரவை வழுத்துமென்பார்" (140) எனவும், சித்திரசாலைக் காட்சியைப் பற்றிய செய்தியில், "இவ்வுலகிற் சங்கபற்ப ரென்னு மரவரசர்க், கவ்வுருவந் தந்த வருள்பாரீர்" (286) எனவும் அமைந்துள்ளது.

உக்கிரபாண்டியர் திருக்கோயிலமைத்தது (22 - 3, 287), ஓரந்தணனது பெண்பிறவியை இறைவர் மாற்றி முத்தியளித்தது (24), அகத்திய முனிவர்க்குப் பஞ்சாட்சர உபதேசம் செய்தது (26, 288), இந்திரகுமாரனாகிய சயந்தனுக்குக் காக்கைவடிவம் நீக்கியது (27), நாகசுனையில் வீழ்ந்திறந்த ஒரு வேடனுக்கு முத்தி அளித்தது (28), ஓரந்தணன் செய்த கோஹத்திப்பாவத்தைத் தீர்த்தது (29) முதலிய வரலாறுகளும் இந்நூலின் இடையிடையே காணப்படுகின்றன.

சிராத்தத்திற்காக அந்தணனொருவன் வைத்திருந்த பழத்தை உண்டதனாற் சோழனொருவன் உற்றநோயை இறைவர் புற்றுமண்ணாகிய மருந்தை அளித்து நீக்கினர் (25.) இக்காலத்தும் இத்தலத்திற் புற்றுமண்ணை மருந்தாக உண்டு பிணிதீர்ந்து காணிக்கை அளித்துச்செல்வோர் பலர். இச்செய்தி இந்நூலில், "பூவலயம், வெம்பும் பிணிக்கு மெலியாது காணிக்கைச், செம்பொன் குவிக்குந் திருநாளில்" (37 - 8), "பொருந்தும் பெரும்பிணிக்கோர் புற்றினிடத்து, மருந்து தரவந்தான் வந்தான்" (111), "கூருநோய், ஆற்று மருந்தளிப்பான்" (135 - 6), "புற்றிடத்து மண்மருந்தா லெப்பிணியும், போமருந்து மென்றான்" (182) என்று பலபடியாகப் பாராட்டப்படுகின்றது.

இத்தலத்து மூர்த்தியின் திருநாமங்களுள் சங்கரர் (30, 180, 238, 246), வன்மீகநாதனார் (32), சங்கர நாராயணர் (34) என்பன இந்நூலில் வந்துள்ளன. அம்பிகையின் திருநாமம் கோமதியென வடமொழியிலும் ஆவுடைநாயகியெனத் தென்மொழியிலும் வழங்கும். ஆவுடைநாயகி யென்பது 'ஆவுடைத்தேன்' (30, 143), 'ஆவுடைய செந்தேன்' (104), 'ஆவுடைய வஞ்சி' (43), 'ஆவுடைய, பூங்கொம் பனையாள்" (163) என இந்நூலிற் பாராட்டப் பெற்றுளது. இத்தலத்தின் வேறு பெயர்களாகிய ராசை (34),

சிராசை (87, 246, 262), வராசை (184, 204, 296), கூழை (306) என்பவை இதன்கண் ஆளப்படுகின்றன. இராசையென்பது ஸ்ரீராஜபுரம் என்பதன் மரூஉவென்று தெரியவருகின்றது. இத்தலத்து விருட்சம் புன்னையாதலின் இது புன்னைவனம், *நாகவனமெனவும் வழங்கப்பெறும். இத் தலத்திலுள்ள தீர்த்தங்கள் பல. அவற்றுள் இதன்கண் தேவர்கள் திருத்தியமைத்த தேவதீர்த்தமும் (11), சங்கபற்பராற் காணப்பெற்ற நாகசுனையும் (28, 138, 151) † கூறப்படுகின்றன.

இந்நூலாசிரியர் சைவசமயாசாரியர் நால்வரிடத்தும் பேரன்பு பூண்டவர். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை, "பொன்னிசைய மேவும் புகலியர் கோன்" (269), "தென்புகலி வேந்து" (278) என்பர். அவருடைய அருட்செயல்களுள் என்பைப் பெண்ணாக்கியதையும் (79, 154 - 5), பாண்டியனது கூனைநிமிர்த்ததையும் (278) எடுத்தாளுவார் அவர் அருளிச்செய்த தேவாரத்தை, "சிந்தைமகிழ், தேம்பா கனையவிசைச் செந்தமிழ்" (78 - 9), "செஞ்சொன் முதுதமிழ்" (278) எனப் பாராட்டுவார். திருநாவுக்கரசு நாயனாரை, "வேம்படிக்குக், கூடிப் பறிதலைவன் குண்டரிட்ட நீற்றறையைப், பாடிக் குளிர்வித்த பாவலன்" (79 - 80), "வன்புலையர், கற்றூணையாச் சேர்த்துக் கடற்படுத்த வஞ்செழுத்தும், நற்றுணையென் றேற்றினோன்" (278 - 9) என்பர். சுந்தரமூர்த்திநாயனாரை, "ஏடவிழ்ந்து, புள்ளையழைக்கும் புனலின் முதலைவாய்ப், பிள்ளை யழைக்கும் பெருமான்" (80 - 81), "முற்றுலகும், அண்டத் தொகையு மருமறையும் போற்றுதிருத், தொண்டத் தொகைவகுத்தோன்" (279 - 80) என்பர். தேவாரங்களை, "தமிழ்மூவர் செஞ்சொலமுதம்" (55), "மதுரம், பழுத்ததமிழ் மூவரிசைப் பாட்டு" (74) என்றுசிறப்பிப்பார். மாணிக்கவாசகரை, "வாதவூராளி" (75), "தெள்ளியசொற், செம்பாவை நாவாற் றெளித்து வடித்ததிரு, அம்பாவை பாடியபே ரன்பினன்" (81 - 2), "பண்டுமன்றி, லாடினோன் பூண்டெழுத வாய்ந்ததுறை நானூறு, பாடினோன்" (280 - 81) என்றுகூறுவர். திருவாசகத்தை, "இன்செஞ்சொல்" (75) என்றும், "பைந்தமிழ்" (281)

* நாகம்—புன்னைமரம்.

† இத் தலத்தைப்பற்றிய பிற வரலாறுகளைச் சங்கரநயினார்கோயிலந்தாதியின் முகவுரையிற் காணலாம்.



என்றும் பாராட்டுவார். நாயன்மார்களுள், சேரமான் பெருமாணாயனாரை, "கூடலின் முக்கட் குழகன் வரவிட்ட, பாட லிசைபுனைந்த பார்த்திவன்" (83) என்பர். "மண்ணிடந்த மாலும் வனசரனும் மெய்யன்பாற், கண்ணிடந்து சாத்தவருள் கண்ணுதலோன்" (203) என்றவிடத்துக் கண்ணப்ப நாயனார் செயலைப் புலப்படுத்தி யிருக்கின்றனர்.

பிறதலச் செய்திகளிற் சில இதன்கண் வந்துள்ளன: "காவேந்தளித்தவந்தக் கண்ணுதலைத் தென்கமலைப், பூவேந்த வைத்த புகழோனும்" (84) என்று முசுகுந்த சக்கரவர்த்தியைக் கூறுமுகத்தால் திருவாரூர்த் தலச்செய்தியும், "நெல் வேலிவரை, மாமுத்தை வேண்டி வளர்த்தோனும்" (85) என்று முழுதுகண்ட ராமபாண்டியனைக் கூறுமுகத்தால் திருநெல்வேலித் தலவரலாறொன்றும் இதன்கண் எடுத்தாளப்படுகின்றன. மதுரைப் பெருமான் திருவிளையாடல்களுள் திருமுகங் கொடுத்தது, "கூடலின் முக்கட் குழகன் வரவிட்ட, பாடலிசை" (83) என்றவிடத்தும், வளையல் விற்றது, "செங்கைவளை, அன்றணிந்தநீர்" (121 - 2) என்றவிடத்தும், கல்லானைக்குக் கரும்பருத்தியது, "மதன் விற்கரும்பைக் கல்லானைக், கன்றுபோ லின்றளித்தா லாகாதோ" (309) என்றவிடத்தும் குறிப்பிக்கப்பட்டுள்ளன.

"ஆவுடைத்தேன், பூசிக்கும் புன்னைவனப் பூங்கனியே" (143) என்றவிடத்துப் புன்னைவனமென்றதற் கேற்ப இறைவரைக் கனியாக உருவகம் செய்த இந்நூலாசிரியர் பின் அவரைத் தேனாக உருவகம் செய்து, "முக்கட் பசுந்தேறல், வந்திருக்கும் புன்னைவனம்" (214) என்று நயம்பெறக்கூறுகின்றார். மன்மதனுடைய ஆற்றலைப் புலப்படுத்துவதற் கெண்ணிய இவர், "அஞ்செழுத்தோன், பாதித் திருவுருவம் பச்சை கலந்தருகப், பேதித்தோன்" (118) என்று அவனைச் சொல்லியிருத்தல் பொருட்பொலிவோடு அமைந்துள்ளது.

இறைவருடைய தசாங்கங்கள் இந்நூலில் 261 - ஆம் கண்ணி முதலியவற்றிற் கூறப்பட்டுள்ளன.

இந்நூலிற் சொல்லப்படும் எழுபருவ மகளிரும் பொதுமகளிரென்பதை, "மன்னர், இனம்போ லுதவமனத் தெண்ணிப் புதைத்த, தனம்போ லமைந்த தனத்தாள்" (155 - 6) எனப் பேதையை

யும், "முரசளிக்கும் வேலைமதன் மூவுலகும் வெல்ல, அரசளிக்க வந்தமட வன்னம்" (190)என மங்கையையும், "எழுவாரி வையத் தெவர்க்கு மதனால், வழுவாம லோது மடந்தை" (208), "பூவலருங், கொத்துத் தொடையல் குவலயத்தோ ராவியொடு, வைத்துச் செருகு மலர்க்குழலாள்" (211) என மடந்தையையும், "இளைஞருயிரணைத்து முண்ணாமல், வெட்டியுடன் மீளும் விழியினாள்" (250), "கனியிருந்த சொல்லியர்க்குக் காமா கமநூல், இனிதிருந்து கற்பிக்கு மெல்லை" (260) எனத்தெரிவையையும் கூறுமுகத்தால் உய்த்துணரவைத்திருக்கின்றனர். அப்பருவ மகளிரது இயல்புகளை உரிய இடங்களில் ஏற்றவாறு புனைந்துள்ளார். அவர்களது பருவத்துக் கேற்ற விளையாடல்கள் பலவற்றை இதனுட்காணலாம். "தழைத்த கதிரெறிக்குந் தண்டரள வண்டல், இழைத்துவிளை யாட்டயரு மெல்லை" (161) எனப் பேதைப்பருவத்தில் சிற்றில்விளையாட்டும், பெதும்பைப் பருவத்தில் கழங்காடலும், மங்கைப்பருவத்தில் ஊசலாட்டும், மடந்தைப் பருவத்தில் யாழ்வாசித்தலும், அரிவைப்பருவத்தில் பொழில்விளையாட்டும், தெரிவைப் பருவத்திற் புனல்விளையாட்டும், பேரிளம்பெண் பருவத்தில் அம்மானையாடலும் சொல்லப்பட்டுள்ளன. எழுபருவ மகளிரின் பிராயஅளவு நூல்களிற் பலவாறாகக் கூறப்படும். இந்த உலாப்பிரதியின் பின்னர் எழுதியிருந்த * கட்டளைக்கலித்துறை ஒன்றிற் சொல்லப்பட்ட பிராயஅளவு வருமாறு: எழுவரையிற் பேதை, ஒன்பதுவரையிற் பெதும்பை, பன்னிரண்டுவரையில் மங்கை, பதினான்குவரையில் மடந்தை, பதினெட்டுவரையில் அரிவை, இருபத்தொன்றுவரையில் தெரிவை, முப்பத்திரண்டுவரையிற் பேரிளம்பெண்.

மாதர்களால் தலைவனிடத்தே தூதாக விடுக்கப்படுவனவாகப் புலனெறிவழக்கிற் பயிலும் பொருள்களுள், "ஏற்றமயல், விண்டுபசுந் தார்வாங்கி மீண்டுவரப் புன்னைவன, வண்டு களையழைத்து வம்மென்பார்" (136 - 7), "சுரும்பை யழைத்திதழி வாங்கிவரச், சொன்னாள் விடுத்தாள்" (239) என்று வண்டும், "உண்டசுவை, அன்னத்தை நஞ்சென் றயராதே நாகசுனை, அன்னத்தைத் தூதுக் கழையு மென்பார்" (137 - 8) என்று அன்னமும் எடுத்தாளப்பட்டுள்ளன.

* இதனை இப்புத்தகத்தில் 46-ஆம் பக்கத்திற் காணலாம்.



பிற தமிழ்நூல்களிற் காணப்படுதல்போலவே இதன்கண்ணும் தற்குறிப்பேற்ற அணி அமைந்த பலபகுதிகள் உள்ளன. இவ்வகையில் ஆசிரியர், சூரியன் உதயமானதை, " 'என் இறைவராகிய சிவபெருமான்மேல் அம்பெய்த மன்மதனை அவருடைய நெற்றிவிழியில் உள்ள எனது இனமாகிய அக்கினி அழித்தது; அதற்கிணங்க அம்மன்மதன் யானையாகிய இருளை நான் அழிக்கின்றேன்' என்றது போல உதயமானான்" (41 - 2) என்று சொல்லுகிறார்.

இறைவர் திருவாபரணங்களைப் புனைந்ததாக உள்ள பகுதியில், 'தன்விடம் சிவபெருமானது ஒருறுப்பாகிய திருக்கழுத்திற் றங்கி அழகு செய்வதை எண்ணிப் பாம்பானது தானும் ஒருறுப்பிற் பொருந்தி அழகுசெய்தது போலத் திருக்கரத்தில் திருக்காப்பணிந்தார்', 'இரண்டுபாம்புகள் தாம் விடத்தோடுள்ள பழியை நீக்குதற்கெண்ணி இறைவர் திருச்செவியில் இருப்பின் தேவாரங்களாகிய இனிய அமுதத்தைக் கவர்ந்து கொள்ளலாமென்று குழையாக வந்தது போலத் தோன்றத் திருக்குழைபுனைந்தார்' (54 - 6), 'தங்களுடைய தலைவனாகிய சந்திரனை இறைவர் அணிந்த அன்புகண்டு அம்முறைபற்றி, எம்மையும் அணிந்தருள்கவென்று நட்சத்திரங்கள் ஒழுங்காக வந்தனவென்று சொல்லும் வண்ணம் முத்துமாலையைப் பூண்டார்' (61 - 3), 'சந்திரசூரியர்களாகிய எங்களைக் கண்ணாகக் கொண்டீர்; ஆயினும் சந்திரனைமட்டும் முடியின்மீது அமைத்தீர்; என்னைமறந்தீர்; என்னையும் அவனைப்போலத் திருமுடிமேற் புனைந்தருளவேண்டுமென்று சூரியன் திருவடியைப்பிடித்து வேண்டுவதுபோலத் திருச்சிலம்பை அணிந்தார்' (66 - 8), 'முன்னொருகால் புரங்களை வெல்வதற்காக இறைவர் நம்மை வளைத்து வில்லாகக் கொண்டும் அவற்றை நகைத்தெரித்து விட்டமையால் நாம் பயனின்றி யொழிந்தேம்; இனி வேறொரு வகையிலேனும் உதவுவேமென மேருமலை நினைந்து அவ் வளைந்த உருவத்தோடே பணிசெய்ய வந்ததென்று சொல்லும்படியுள்ள திருவாசிகையைச் சேர்த்தினார்' (69 - 71) எனவரும் பகுதிகள் முதலியனவும், 'உமக்குள்ள இருதேவியாருள் கங்கையைமட்டும் சடையில் ஏந்தினீர்; என்னுடைய மகளாகிய உமையையும் அவ்வாறு செய்தருள்கவென்று வேண்டி ஏத்துதற்கு இமயமலைபோந்தது போன்றது தேர்' (91 - 2), " 'நாம் ஓரன்னமாகப் போயினமையாற் காணமுடியாத திருமுடியை இரண்டன்ன

மாக எழுந்துசென்றாற் காணலாம்' என்று பிரமன் நினைந்து அவ்வாறே வந்து முயல்வதுபோல இரண்டு சாமரைகள் இரட்டப்பெற்றன" (93 - 5), 'தலைவரைப் பிரிந்தவிடத்துச் சுடும் சந்திரனைக் கடியும்வண்ணம், மாதர்கள் இறைவர் சடைமேல் சந்திரனோடு இருந்த பாம்பிற்கு உணவாகக் காற்றை அளித்து விருந்தளிப்பதுபோல ஆலவட்டம் பணிமாறினர்' (95 - 7) என்பனவும் பிறவும் இவ்வகையைச் சார்ந்தனவே.

தெளிவு என்னும்பொருளில் தெள் (3) என்பதை இவர் அமைப்பர். தயவு (62), பகுந்த (180, 243), படியெடுப்பு (188), அருந்துபடி (308), செடாடவி (39) என ஒருமொழி தொடர்மொழிப் பிரயோகங்கள் சில இதில் வந்துள்ளன.

பலவகைச் சொற்பொருள் நயங்களும் அணியமைதிகளும் அமைய, 'ஒரேழ் பருவத் தொளிவளையார்—நேர்போதக், கண்ணுதலான் புன்னைநறுங் காவுடையா னோர்பாகத், தொண்ணுதலாள் போந்த' உலாவைச் சிறப்பித்துப் பாடப்பெற்ற இந்நூல் எழுதியிருந்த சுவடி ஒன்று ஏறக்குறைய 40 வருடங்களுக்கு முன்பு திருநெல்வேலிப் பக்கத்துள்ள ஒரூரிலிருந்துவந்த ஸ்ரீ முத்துக்குமாரசாமிபிள்ளை என்பவர் மூலமாக எனக்குக் கிடைத்தது. வேறுபிரதி இதுகாறும் கிடைக்கவில்லை. ஆதலின் உள்ள பிரதியை வைத்துக்கொண்டு எழுதுவோரால் நேர்ந்த பிழையென்று தெரிந்தவற்றை நீக்கி ஆராய்ந்து இப்பொழுது, 'புன்னைப் பொதும்பரின்கீழ்ப் புற்றாடினிதமர்ந்த, முன்னைப் பொருளாம் முழுமுதல்வன்' திருவருளைத் துணைக்கொண்டு இந்நூல் வெளியிடப்பெற்றது.

இத்தலசம்பந்தமாக யானறிந்த இரண்டுவரலாறுகள் உண்டு. அவைவருமாறு:

க. * ஆறை அழகப்பமுதலியார் என்பவர் திருநெல்வேலியில் இருந்து ஆட்சிபுரிந்துவருகையில், சங்கரநயினார் கோயிலிலுள்ள நாயகரைச் செண்பகக்கன் பட்டரென்பவர் களவுசெய்து கொண்டு போய்த் திருவுத்தரகோச மங்கையில் அடகுவைத்துப் பொருள் வாங்கிக்கொண்டு சென்றுவிட்டனர். அம்மூர்த்தி அத்தலத்தில்

* இவ் வரலாறு சொக்கம்பட்டிப் பாளையப்பட்டுச் சரித்திரம்—இரண்டாம் பாகத்திற் காணப்பட்டதாகும்.



இருப்பதனை அறிந்து, அக்காலத்து இராமநாதபுரத்தில் அரசாண்ட விஜயரகுநாதசேதுபதிமன்னர் அம்மூர்த்தியை அத்தலத்துக்கோயிலில் எழுந்தருளுவித்துப் பூசை முதலியன நடத்திவரும்படி கட்டளையிட்டனர். சங்கரநயினார் கோயிலில் மூர்த்தி களவுபோனசெய்தி ஆறை அழகப்ப முதலியாருக்கு அறிவிக்கப்பட்டது. அவர் அதனை அறிந்து அம்மூர்த்தியை மீண்டும் இத்தலத்திற்குக் கொணரும் வரையிற் பாற்கஞ்சியையன்றி வேறுண்பதில்லையென்ற நியமத்தோடிருந்தார். பின் உத்தரகோசமங்கையில் அம்மூர்த்தி இருப்பதையறிந்து அவரை எங்ஙனம் கொணர்வதென்று ஆலோசித்து வந்தார். வருகையில் வடகரை ஸமஸ்தானத்தில் அப்பொழுது ஸ்தானாதிபதியாக இருந்தவரும், மிக்க புத்திவன்மையும் செந்தமிழ்ப்புலமையும் உடையவருமாகிய பொன்னம்பலம்பிள்ளையென்பவர் அச்செயலை முடிக்கும்ஆற்றலையுடையவரென்று பலரால் அறிந்து அவரை வரவழைத்து, விக்கிரகத்தைக் கொணரவேண்டுமென்று இராமநாதபுரத்திற்கு அனுப்பினர். அவர் அங்கேசென்றும் சிலநாள்வரையிற் சேதுபதி மன்னரைக் காணமுடியவில்லை; காவடியெடுத்து வருபவர்களைத் தடையின்றிப் பார்க்கும் வழக்கம் அம்மன்னர்க்கு உண்டென்பதை யறிந்து, தாமும் ஒருகாவடியை எடுத்துக்கொண்டு, உடன்வந்தவரை வாத்தியகாரர் முதலியவர்களாக வேடம் புனைவித்து அரண்மனைவாயிலில் நிற்கையில் சேதுபதிமன்னர் வந்தனர். அவரைக் கண்டவுடனே பொன்னம்பலம்பிள்ளை விநயத்துடன் அவரைப்புகழ்ந்து சில செய்யுட்களைச் சொல்லி மகிழ்வித்துத் தம்மை இன்னாரென்று புலப்படுத்தி அவரால் உபசரிக்கப்பெற்று அங்கே சிலநாள் இருந்தனர். பின்னர், உத்தரகோசமங்கைக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்துவரவேண்டுமென்று அம் மன்னரிடம் விடைபெற்றுச் சென்று அங்கே சங்கரநயினார் கோயில் நாயகர் இருப்பதையும், அவர் அங்கேவந்த வரலாற்றையும் அறிந்து, தாம் அவரை வினவியதாக, * 'புற்றெங்கே' என்னும் வெண்பாவையும், அவர் விடைகூறியதாக, † 'விள்ளுவமோ' என்னும் வெண்பாவையும் பாடிவைத்துக்கொண்டு மீண்டும் இராமநாதபுரம் சென்று சேதுபதிவேந்தர்முன் அவ்விரண்டு வெண்பாக்களையும் கூறினர். அவற்றைக் கேட்ட மன்னர் பொன்னம்

* இதனை 45 - ஆம் பக்கத்திற் காண்க.

† இதனை 46 - ஆம் பக்கத்திற் காணலாம்.

பலம்பிள்ளையினுடைய குறிப்பை அறிந்து உத்தரகோசமங்கையிலிருந்த விக்கிரகத்தைச் சங்கரநயினார் கோயிலுக்கு எழுந்தருளச்செய்வித்தனர். அவரிடம் விடைபெற்றுப் பொன்னம்பலம்பிள்ளை ஸ்வாமியுடன் புறப்பட்டார். அவர் சென்றகாரியத்தை நிறைவேற்றிக் கொண்டு வருவதையறிந்த ஆறை அழகப்பமுதலியார் திருமங்கலத்திற்கே வந்து நாயகரைத் தரிசித்து சங்கரநயினார் கோயிலுக்கு எழுந்தருளுவித்தார்.

உ. தஞ்சைமாநகரில் மேலைவீதியில் சங்கரநாராயணர் கோயிலொன்று உளது. ஒருகாலத்தில் அந்நகரில் அரசாண்டிருந்த மகாராஷ்டிரமன்னர்களுள் ஒருவருடைய பெருந்தேவியார் இந்தச்சங்கரநயினார் கோயிலின் மகிமையையும், இத்தலமூர்த்தியைத் தரிசித்தோர் பிணிநீக்கம், மகப்பேறு முதலியன அடைதலையும் அறிந்து தாமும் இவரைத்தரிசிக்க வேண்டுமென்றெண்ணினார். அதனையறிந்த மன்னர் தக்க சிற்பிகளை இத்தலத்துக்கு அனுப்பி இங்குள்ள மூர்த்தியின் அமைப்பு முதலியவற்றை அறிந்துவரச் செய்து அங்ஙனமே ஒருகோயில் தஞ்சையில் எடுக்கச்செய்து, அதில் மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்வித்து, இங்கே நடப்பது போலவே நித்தியநைமித்திகங்கள் நடப்பித்துவந்தனர்.

இந்த உலாவைத் தமது 'சிவநேசன்' பத்திரிகையில் வெளியிட்டுப் பலசிவநேசர்களும் தமிழன்பர்களும் படித்து இன்புறச் செய்வித்த பத்திராதிபர் ஸ்ரீமான் ராம. கு. ராம. இராமசாமிசெட்டியாரவர்களது அன்புடைமை ஒருபொழுதும் மறக்கற்பாலதன்று.

இதனைப் பதிப்பிக்குங் காலத்து உடனிருந்து உதவியவர்கள் சென்னை, கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி வித்வான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், மோகனூர்த் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி கி. வா. ஜகந்நாதையரும் ஆவர்.

'தியாகராஜவிலாசம்'
திருவேட்டீசுவரன்பேட்டை,
சென்னை.
1—5—1933

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

உ

# பண்டிதமணி அவர்களின் யாழ்ப்பாண விஜயம்.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தார் ஷை சங்கத்துப் பதினோராவது ஆண்டு விழாவில் தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொண்டபடி மகிபாலன்பட்டி பண்டிதமணி ஸ்ரீமத் மு. கதிரேசச்செட்டியார் அவர்கள் 1933 ம் ஆண்டு மார்ச்மீ 31 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் புகையிரதமார்க்கமாக யாழ்ப்பாணப் புகையிரதஸ்தானத்தை அடைந்தார்கள். அத்தருணம் ஷை சங்க உபதலைவர் ஸ்ரீமத் சு. நடேசபிள்ளை B. A. B. L. அவர்களும், சங்க காரியதரிசி பிரமஸ்ரீ தி. சதாசிவஐயர் பிரதம வித்தியாதரிசி அவர்களும், ஏர்பன் கவுன்ஸில் தலைவர் R.R. நல்லையா அவர்களும், பழம்பேராசிரியர் நெவின்ஸ் செல்வத்துரைப் பிள்ளை J. P, M. B. E, அவர்களும், முதலியார் எஸ். திருச்சிற்றம்பலம். டாக்குத்தர் பொன்னுசாமி, சுவாமி உருத்திரகோடீசுரர், இன்னும் ஏனைய யாழ்ப்பாணத்துப் பிரபுக்கள் பலரும், வித்துவான் சி. கணேசையர், நவநீத கிருஷ்ணபாரதி, வே. மகாலிங்கசிவம் முதலிய தமிழ்ப்புலவர்களும், ஆசிரிய கல்விச்சாலை அதிபர்களும்,வித்தியாசாலை ஆசிரியர்களும்,மாணவர்களும், யாழ்ப்பாணத்து வசிக்கும் நாட்டுக்கோட்டைச் செட்டிப்பிள்ளைகளுமாக நூற்றுக்கணக்கானவர்கள் பண்டிதமணியவர்களை "வருக! வருக!" என வரவேற்றுபசரித்தார்கள். பின் புகையிரதஸ்தானமேடையில் ஒரு நாற்காலியில் பண்டிதமணியவர்களை அமரச்செய்து, ஆ. தி. பா. வி. சங்கத்தின் சார்பாக. பழம்பேராசிரியர் நெவின்ஸ் செல்வத்துரைப் பிள்ளை J. P, M. B. E அவர்களால் மாலையிடப்பட்டது. நாட்டுக்கோட்டைச் செட்டிப்பிள்ளைகள் சார்பாகவும் மற்றொரு மாலை யிடப்பட்டது.

அதன்மேல், சங்கத்தலைவர் சு. நடேசபிள்ளை அவர்கள், சங்க காரியதரிசி, பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்களை அறிமுகஞ் செய்துவைக்கஆரம்பிக்கையில், காரியதரிசிஅவர்களின் எடுத்தகருமங்களை இடையீடின்றி இனிது முடிக்கும் பேராற்றல், உள்ளத்துக் கிளர்ந்தெழுந்து முகத்துப் பிரதிபிம்பித்தமையா னெழுந்த சத்துவ வேறுபாட்டை உய்த்துணரும் நுண்ணுணர் வுடைமையினாற் போலும், பண்டிதமணி யவர்கள் காரியதரிசி அவர்களை எவருமறிவிக்காமல் முன்னமே தாமறிந்துகொண்டதாகக் கூறினார்கள். பின் தலைவர் அவர்களும் காரியதரிசி அவர்களும், ஆண்டுச் சமுகஞ் செய்தபிரபுக்கள் ஒவ்வொருவரையும் வித்துவான்கள் ஒவ்வொருவரையும் அறிமுகஞ்செய்து வைத்தார்கள். அப்போது பண்டிதமணி அவர்கள், அவரவர் தாரதம்மியத்துக் கேற்பத் தலையசைத்தும், முறுவலித்தும், கையெடுத்தும், கைகொடுத்தும், கைகுவித்தும், முதுகுதைவந்தும், வார்த்தையாடியும் வேண்டிய மரியாதைகள் செய்தார்கள். இந் நிகழ்ச்சிகளின்மேல், ஆண்டுச் சமுகஞ் செய்தவர்களெல்லாம், பண்டிதமணியவர்களை வண்ணார்பண்ணைச் சிவன்கோயில் வீதியில், கதிரேசன் கோயிற் சந்நிதியிலுள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் வாசஸ்தானத்துக்கு அழைத்துச்சென்றார்கள். அங்கே, அன்றுமுழுதும் பண்டிதமணி அவர்கள் பிரயாண

சிரம பரிகாரஞ் செய்தார்கள். ஆயினும், யாழ்ப்பாணத்துப் பிரபுக்களும், உத்தியோகஸ்தர்களும், வித்துவான்களும் அவர்களைச் சிரமப்படுத்தியே வந்தார்கள்.

அடுத்தநாள், ஏப்ரல் ௴ 1 ந்தேதி சனிக்கிழமை காலை $8\frac{1}{2}$ மணியளவில், வண்ணை வைத்தீசுவர வித்தியாலய மண்டபத்தில் நடாத்துவதாக நிச்சயித்த ஆ. தி. பா. வி. சங்கவிழாவுக்கு அழைத்துவரும்படி ஷைசங்க அங்கத்தவர்களும், பிரபுக்களும், பண்டிதமணி அவர்களின் வாசஸ்தானத்துக்குச் சென்று அவர்களை மோட்டார் ரதத்தில் இவரச்செய்து, மாலையிட்டுஉபசரித்தார்கள். அப்பொழுது பெரியதொரு மங்கலத்துக் கறிகுறியாக சிவன் கோயில் மணி ஒலித்தது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் முதன்முதல் சைவப்பிரசங்கம் செய்யத் தொடங்கும்போது எந்தமணி ஒலித்ததோ அந்தமணியே ஒலித்தது. 'இந்த நூற்றாண்டில் தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த பிரபல வித்துவான்களுள், பண்டிதமணி அவர்கள்மாத்திரமே, யாழ்ப்பாணத்து மதபேதவாதிகள், பாஷாபேதவாதிகள், பகிஷ்கார பேத வாதிகள் என்றித் தொடக்கத்தவர்கள் எல்லாராலும் ஏகமனசாக அங்கீகரித்துக் கொண்டாடுதற்குரியவர்கள்' என்பதற்கு ஒரு நற்குறியாகவே அந்தமணி ஒலித்ததாகப் பலரும் பேசிக்கொண்டார்கள். பண்டிதமணியவர்களை மேளவாத்திய வரிசைகளுடன் சிவன்கோயில் வீதிவழியாய் வலமாக அழைத்துச் சென்று, ஷை வித்தியாலய மண்டபத்திற் பிரவேசித்தார்கள். பண்டிதமணி அவர்கள், அவர்களுக்கென இடப்பட்ட அக்கிராசனத்தில் அமர்ந்தார்கள். கொடிகள்கட்டிப் பூமாலை நாற்றிக் கதலிகள் நாட்டி அலங்கரிக்கப்பட்டிருந்த மண்டபத்தில் தமிழ் சமஸ்கிருத அபிவிருத்தியில் ஆர்வமுள்ள அன்பர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் சமுகஞ் செய்தார்கள்.

முதலில் பண்டிதமணி அவர்களுக்கு மாலையிடப்பட்டது. ஷைசங்கத்தின் சார்பாக செய்யுள்வடிவில் நல்வரவேற்பு உபசார பத்திரமும் படித்துக் கொடுக்கப்பட்டது. பின், தலைவர் ஸ்ரீமாந் சு. நடேசபிள்ளை அவர்கள் சபையோருக்குப் பண்டிதமணியவர்களை அறிமுகஞ் செய்து வைக்குமுகத்தால், ஈழத்துக்கு (பொன்னுக்கு) மணியின் இன்றியமையாமையையும், மணிக்கு ஈழத்தின் இன்றியமையாமையையும் விளக்கி, ஈழநாட்டுக்கும்,பண்டிதமணிக்கும் இதுகாறு மிருந்துவந்த பெருங்குறை இன்றுடன்தீர்ந்தமையை எடுத்துக்காட்டி, ஆ. தி. பா. வி. சங்கத்தார் நடாத்த விருக்கு மூன்றுநாள் விழாவில் முதலிருநாள் விழாவிலும் பண்டிதமணியவர்களைத் தலைமைவகிக்குமாறு வேண்டுவதாகப் பிரேரித்தார்கள். அதனைச்சங்கத்து மற்றோர் உபதலைவரான வழக்கறிஞர் ஸ்ரீமான் வ. குமாரசுவாமி B. A. அவர்கள் அநுவதித்தார்கள்.

பின், பண்டிதமணி அவர்கள் சமுத்திர கோஷம் போலக் குதூகலித்தெழுந்த கரகோஷத் திடையே யெழுந்து, தமது விரிந்து பரந்த தலைமையுரையில், அரசகேசரி, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சேர். பொன். இராமநாதன் என்பவர்களின் பெருமைகளை எடுத்துப் பாராட்டுமுகத்தால் யாழ்ப்பாணப் புராதனத்தையும், யாழ்ப்பாணத்துக்கும் தென்னிந்திய தமிழ்நாட்டுக்கும் உள்ள தொடர்பையும், தமிழ் சமஸ்கிருத வளர்ச்சிக்குச் செய்யவேண்டுவன வற்றையும், தமிழ் சமஸ்கிருத இலக்கியச் சிறப்புக்களையும், சமய சம்பந்த



மாகச் செய்யவேண்டுவனவற்றையும், தேவார திருவாசகச் சிறப்புக்களையும், சிவஞான போதம் முதலிய சித்தாந்த சாஸ்திர நுட்பங்களையும், காவியச்சுவை சொட்டச்சொட்ட நவரசங்களுங் குதிகொண்டாட ஒன்றரை மணி நேரம்வரை எடுத்துப்பேசினார்கள். அவர்கள் பேச்சுத் தெவிட்டாது தித்திக்குந் தேனருவியாய் ரஸிகர்களின் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்தது. அதன்மேல் வியாசரணமகோபாத்தியாயர் ஸ்ரீமாந் வை. இராமசாமி சர்மா அவர்கள், கலித்தொகையில் பாலைக்கலியைப் பற்றி, சம்ஸ்கிருத சாகுந்தல நாடகத்தோடொப்பிட்டுப் பேசினார்கள். பண்டிதமணி அவர்களும், அங்ஙனமே அவ்விஷயத்தைப்பற்றிச் சாகுந்தலத்தோடொப்பிட்டுக் குறிப்புரை கூறினார்கள். அவ்வளவில் அன்றைய காலைநிகழ்ச்சி நிறைவேறியது.

மாலை $6\frac{1}{2}$ மணி தொடக்கம் 8 மணி நேரம் சிலப்பதிகாரத்தைப்பற்றி பண்டிதமணி அவர்களால் ஒரு சிறந்த உபந்நியாசஞ் செய்யப்பட்டது. சிலப்பதிகாரச் செய்யுணடையும் சொற்பொருளலங்களும் உரைநுட்பங்களும் நன்கு எடுத்துக் காட்டப்பட்டன. இடையிடையே சிலப்பதிகாரம் கானல் வரிப்பாட்டுக்கள் சில, பண்டிதர் டி. குமாரசுவாமி அவர்களால் இசையோடு பாடப்பட்டன. பிரமஸ்ரீ கே. நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்களால், புலமைப்போக்கில் பண்டிதமணி அவர்களுக்கு நன்றிகூறப்பட்டது. அவ்வளவில் அன்றைய மாலைநிகழ்ச்சி நிறைவேறியது.

ஏப்ரல் ௴ 2 ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை பண்டிதமணி அவர்களின் தலைமையில், பிரமஸ்ரீ என். நாராயணையர் B. A. B. L. L. T. அவர்களால் 'மனுவும் குறளும்' என்னும் விஷயம் சுருக்கமாகப் பேசப்பட்டது. உபந்நியாச முடிவில் தலைவர் அவர்கள் எழுந்து உபந்நியாசகர் பேசியவிஷயத்தில் சிலதவறான கருத்துக்களை எடுத்துக்காட்டிச் சமாதானங் கூறி உண்மையை நிலைநாட்டிச் சபையை மகிழ்வித்தார்கள். பின்பு, பண்டிதர் ஸ்ரீ சி. கணபதிப் பிள்ளை அவர்களால் 'இயற்கையும் புலவனும்' என்னும் விஷயம்பற்றி இன்சுவை ததும்பும் ஓர் அரியஉபந்நியாசம் செய்யப்பட்டது. அடுக்க, திருவாளர் கே. சோமசுந்தரப் புலவர் அவர்களால் 'பெரியபுராண ஆராய்ச்சி' என்னும் விஷயம் பேசப்பட்டது. மாலையில், ஸ்ரீமாந் சு. நடேசபிள்ளை B. A. B. L. அவர்களால் பரணிப் பிரபந்தம் என்னும் விஷயமும், வித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்களால் 'கம்பரும் உலகியலும்' என்னும் விஷயமும் பேசப்பட்டன. பண்டிதமணி யவர்கள் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் ஏற்றஏற்றவாறு குறிப்புரைகூறித் தாமும் பல நூல்களிலுமிருந்து அரிய மேற்கோள்கள் எடுத்துக் காட்டிச் சபையை மகிழ்வித்தார்கள். வழக்கறிஞர் கே. எஸ். கனகராயர் அவர்கள், பண்டிதமணி யவர்களைப் பாராட்டி, ஆ. தி. பா. வி. சங்கத்தின் சார்பாக மிகமிக நீண்ட சொற்பெருக்காற்றினார்கள். அவ்வளவில் அன்றைய நிகழ்ச்சி நிறைவேறியது.

ஏப்ரல் 3 ந்தேதி திங்கட்கிழமை காலை 10 மணிமுதல் 12 மணிவரை இராமநாத வித்தியாலயத்தின் அமைப்புக்களும் மாணவிகளின் கல்விநிலையும், பண்டிதமணி யவர்களால் ஆராயப்பட்டன. அப்பொழுது பிரின்ஸிபாலம்மையார், லேடி இராமநாதன், அவர்தம் புதல்வியார் முதலியோர் உடனிருந்தனர். அன்று மாலை திருநெல்வேலியில் பரமேசுவரக் கல்லூரி மேன்மாடத்தில் இலங்கை வித்தியா கர்த்தரும், ஆ. தி. பா. வி. சங்கத் தலைவருமான திருவாளர் எல். மைக்கிறெதுரை அவர்களின் தலைமையில்,

மூன்றாம் நாள் விழா ஆரம்பமாயது. பண்டிதமணியவர்கள் வித்தியாகர்த்தரின் வலப்பாகத்தில் வீற்றிருந்தார்கள். வித்தியாதரிசிகள் அத்தனைபேரும் சமூகமளித்தார்கள். கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையிற் கூடிய தலைமையாசிரியர் மகாநாடு அப்படியே சமூகஞ் செய்தது. வித்துவான்களும் பிரபுக்களும் உத்தியோகஸ்தர்களும் வழக்கம்போல் வந்திருந்தார்கள். முதலில், வித்தியாகர்த்தர் அவர்களுக்கும் பண்டிதமணி அவர்களுக்கும் மாலைகள் சூட்டப்பட்டன. அதன்மேல் சங்கீத வித்துவான் பிரமஸ்ரீ ச. பரமேசுவர ஐயர் அவர்களால், பக்கவாத்திய சகிதமாகச் செவிக்கமிழ்து வழங்கப்பட்டது. பின், சங்க அறிக்கைகள், வரவுசெலவுக் கணக்குக்கள் வாசித்தலும், அங்கத்தவர் தெரிவும் நடைபெற்றன. அதன்மேல் வித்தியாகர்த்தர் அவர்கள் பண்டிதமணி அவர்களின் ஆழ்ந்த கல்வித்திறமையையும், அவர்கள் பெருமையையும் தாம் முன்னமே கேள்விப்பட்டிருப்பதாகக்கூறி, முதலிருநாளும் குறித்தவிழாவில் தலைமை வகித்தமைக்கு நன்றி பாராட்டி, மூன்றாம்நாள் விழாவிலும் பங்குபற்றிக் குறித்த சங்க முன்னேற்றத்துக்கேற்ற புத்திமதிகள் கூறிவைக்குமாறு வேண்டினார்கள். பண்டிதமணியவர்கள் வித்தியாகர்த்தரின் வேண்டுகோட் கிணைந்து, ஆ. தி. பா. வி. சங்கம் தமிழ்சம்ஸ்கிருதம் இரண்டனையும் கண்ணேபோற் போற்றுவதனையும், அவற்றுள்ளும் தமிழுக்கே பல்லாற்றானும் முதன்மை வழங்குவதனையும் வியந்துபாராட்டி, அவ்விரண்டனையும் இக்காலத்துக் கேற்ப வளர்க்கும் வகையினை எடுத்துக் கூறினார்கள். பண்டிதமணி யவர்களின் நகைச்சுவை ததும்பும் பிரசங்க வெள்ளத்தை, வித்தியாகர்த்தரின் வலச் செவியில் பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்களும், இடச் செவியில் ஸ்ரீமாந் சு. நடேச பிள்ளை யவர்களுமாக சிறிதும் ஒழுகிச் சிந்தாது அப்படியே புகுத்திவிட்டார்கள். அதன்பின் வித்தியாகர்த்தர் கல்வியபிவிருத்தி சம்பந்தமாக நீண்ட பிரசங்கஞ் செய்தார்கள். இறுதியில், இயற்றமிழ்ப் புலமையைப் பிறப்பிலேயே படைத்துக் கொண்டவரும், கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலைத் தமிழ்ப்பண்டிதருமான வே. மகாலிங்கசிவம் அவர்களால் தமிழராய்ப் பிறந்து ஆங்கிலம் படித்தவர்கள் தமிழுக்குக் கேடுசூழவும், வெள்ளையராய்ப் பிறந்து தமிழையே அறியாதிருந்தும் தமிழை வளர்க்க முன்வந்தமைபற்றி வித்தியாகர்த்தர் அவர்களை வியந்தும், பண்டிதமணி அவர்களின் தமிழ் சம்ஸ்கிருதப் புலமைப் பெருக்கைப் பலவேறுவகையான் வருணித்தும், அவர்களின் வடிவை வருணத்தைப் பயனளிக்குமாற்றால் பலவேறு வடிவாகவும் வருணமாகவும் உருவகித்தும், அவ்வளவிலமையாது, பண்டிதமணியவர்கள்பாற் கொண்ட ஆராமையின் மிகுதிப்பாட்டால், அவர்களைச் "சபாமணி" என்று பாராட்டி ஒரு செய்யுள் புதுவது புனைந்து சாத்தியும், மகாபாரதத்தில் அருச்சுனனுக்குக் கண்ணனின் இன்றியமையாமையையும், இராமாயணத்தில் ஸ்ரீ இராமனுக்கு இலக்குவனின் இன்றியமையாமையையும், காந்தபுராணத்தில் முருகக்கடவுளுக்கு வீரவாகு தேவரின் இன்றியமையாமையையும் விளக்குமுகத்தால், ஆ. தி. பா. வி. சங்கத்துக்கு அதன்காரியதரிசியாகிய பிரமஸ்ரீ தி. சதாசிவஐயர் அவர்களின் இன்றியமையாமையை (ஐயரவர்கள் தடுக்கவும் தடுக்கவும்) எடுத்துக்கூறியும், இன்னும் ஏனைய சங்க அங்கத்தவர்களையும் சபையோர்களையும் பாராட்டியும் ஒரு பெருநன்றி கூறப்பட்டது. அவ்வளவில் ஆ. தி. பா. வி. சங்கத்தின் பதினோராவது ஆண்டுவிழாப் பூரணமெய்தியது.



பண்டிதமணியவர்களை ஸ்ரீமாந் சு. நடேசபிள்ளையவர்களும், சேர். பொன். இராமநாதன் துரை அவர்களின் தர்மபத்தினியாரும், இராமநாதன் கல்லூரிக்கு அழைத்துச்சென்று உபசரித்தார்கள்.

எப்ரல்மீ 4ந்தேதி செவ்வாய்க்கிழமை இராமநாதன் கல்லூரியில், சைவமாதர்கள் சங்கத்தில், இராமநாதன் துரை அவர்களின் தர்மபத்தினியாரின் தலைமையில், பண்டிதமணியவர்களால் மங்கையர்க்கரசியாரைப் பற்றி ஒரு உபந்நியாசஞ் செய்யப்பட்டது. அப்போது கல்லூரி உபாத்தியாயனிகளும் மாணவிகளுமாக 300பேர் சமூகமாயிருந்தனர். முதலில், ஷை கல்லூரிச் சைவ மாணவிகள் சார்பில் ஒரு உபசாரப்பத்திரம் வாசிக்கப்பட்டது. இறுதியில், ஷை கல்லூரி ஆசிரியைகளாகிய பண்டிதை ஸ்ரீமதி தங்கம்மாள் அவர்களாலும், ஸ்ரீமதி கு. இராஜேசுவரி யம்மையாலும் பண்டிதமணியைப் புகழ்ந்து பாராட்டிக் குறிப்புரை கூறப்பட்டது.

எப்ரல்மீ 5-ந்தேதி புதன்கிழமை யாழ்ப்பாணம் கலாநிலயத்தார் கலாநிலயத்தின் 2-ம் ஆண்டு விழாவுக்கு அழைத்து விருந்து முதலிய உபசாரங்கள் செய்தார்கள். முதலியார் ஸ்ரீமான் சு. திருச்சிற்றம்பலம் அவர்களின் உபசாரம் வருணனைக் கப்பாற்பட்டது. சரித்திர ஆராய்ச்சியாளர் ஸ்ரீமான் செ. இராசநாயக முதலியார் அவர்கள், தமிழ்மொழி யாராய்ச்சியாளர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் முதலிய பிரபலஸ்தர்கள் பண்டிதமணியவர்களைக் கலாநிலயத்தில் வந்து தரிசித்தார்கள். பண்டிதமணியவர்கள் ஒவ்வொருவரோடும், அவரவர் தகுதிக்கேற்ப அளவளாவிச் சம்பாஷிக்குந் திறமை, பழைய யாழ்ப்பாணத்துப் புலவர்களின் சம்பாஷணையை ஞாபகப்படுத்தியது. அன்று மாலையில் கலாநிலய அங்கத்தவர்களின் மத்தியில் பண்டிதமணியவர்களை அமரச்செய்து, அவர்களையும் யாழ்ப்பாணத்தவர்களையும் இறுகக் கட்டிய அன்புக் கறிகுறியாக ஒரு புகைப்பட மெடுக்கப்பட்டது. அதன்பின், பண்டிதமணியவர்கள் நிலய நிகழ்ச்சிகளிற் பங்குபற்றி, நிலயத் தலைவர் கேட்டுக்கொண்டவாறு நிலயம் முன்னேறுவதற்கேற்ற வழிவகைகளைக் கூறி, அந் நிலயத்தில் அன்று பகல் தங்கியபோது அதனை வாழ்த்திப் பாடிய மூன்று செய்யுள்களைப் படித்துக்காட்டி, அவற்றுக்கு வியாக்கியானமுஞ் செய்தார்கள். அன்றித் தாம்பற்றிய சுக்கிரநீதி முதலிய நூல்களை நிலயத்துக்கு வழங்கி உபகாரமுஞ் செய்தார்கள். தலைவர் அவர்களும், வழக்கறிஞர் திருவாளர் வே. நாகலிங்கம் அவர்களும் பண்டிதமணியவர்களைப் பாராட்டினார்கள்.

எப்ரல்மீ 6-ந்தேதி வியாழக்கிழமை மாலையில் வண்ணை வைத்தீசுவர வித்தியாலய மண்டபத்தில், கலாநிலயத்தின் சார்பாக, நிலயத் தலைவர் ஸ்ரீமாந் சு. நடேச பிள்ளை அவர்களின் தலைமையில், பண்டிதமணியவர்கள் "திருவாசகம்" என்னும்பொருள் பற்றி ஒரு பெரிய உபந்நியாசஞ் செய்தார்கள். ரஸிகர்களான மதுகரங்கள் திருவாசகத் தேனில் மூழ்கித் திளைத்தன. அவ் வுபந்நியாசத்திற் கண்டநலங்கள்பல பாராட்டாதார் இலர்.

தினகரன் உபபத்திராதிபர் ஸ்ரீமாந் நடராஜா அவர்கள் தம்மாலும், ஈழகேசரிப்பத்திராசிரியராலும் பண்டிதமணிமீது பாடப்பட்ட நீண்ட இனிய அகவற் செய்யுள்களையும், வெண்பாக்களையும் நிலயத்தின் சார்பாகப் படித்துக் கொடுத்தார்கள். பண்டிதமணி அவர்கள், தம்மீதுபாடப்பட்ட

செய்யுள்கள் என்பதனையும் நோக்காது, செய்யுள்களின் இனிமையிலும், பொருளமைதியிலும் ஈடுபட்டு, அவற்றினையும், யாழ்ப்பாணத்தாருக்கு இயல்பாளமைந்திருந்த கவித்துவ சக்தியினையும் மனமார விதந்து விதந்து பாராட்டினார்கள். தலைவர் அவர்கள், திருவாசகச் சிறப்பைக் காவியச் சுவையோடு எடுத்துக்காட்டிய பண்டிதமணியவர்களின் திறமையையும், திருவாசகங்கள் சிலவற்றிற்கு நூதனமாகப் பொருள் கொண்ட நுண்ணுணர்வின் கூர்மையையும் விதந்து பேசினார்கள்.

ஏப்ரல் மீ 7-ந்தேதி வெள்ளிக்கிழமை மாலையில் வேலணையைச்சார்ந்த சுருவில் என்னும் இடத்தில் அதற்கென அமைக்கப்பெற்ற அலங்கார மண்டபத்தில் தீவுப்பகுதியிலுள்ள பல கிராமவாசிகளாகிய சைவ அன்பர்கள் ஆயிரக்கணக்கானவர் குழுமியிருந்து மிக அமைதியாய்க் கேட்க "திருக்கண்ணப்பர்" என்னும் பொருள் பற்றி பண்டிதமணி அவர்களால் ஒரு சிறந்த உபந்நியாசஞ் செய்யப்பட்டது. பரமேசுவரக்கல்லூரி அதிபர் ஸ்ரீமாந் சு. நடேச பிள்ளை தலைமைவகித்தார்கள். வேலணை வாசிகள், பண்டிதமணியவர்களை மாலையிட்டு உபசரித்ததன்றி, பண்டிதமணியவர்கள்மீது வருகைப்பருவச் செய்யுள்கள் சிலபாடியும் வரவேற்றார்கள். வேலணைவாசிகள் சார்பாக, சரஸ்வதி வித்தியாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீமாந் இ. மருதையனார் அவர்கள் பண்டிதமணி அவர்களைப் பாராட்டினார்கள்.

ஏப்ரல் மீ அ-ந்தேதி சனிக்கிழமை காலையில் வலிகாமம் மேற்கு வாலிபர் சங்கத்தார் பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாசாலையில் பண்டிதமணியவர்களை வரவேற்று மாலையிட்டு உபசரித்தார்கள்.

வாலிபர்சங்கத் தலைவர் கண்டி பேரின்பநாயகம் முதலிய பிரபலஸ்தர்கள் சமுகமளித்தார்கள். நவாலி திருவாளர் சோமசுந்தரப்புலவர் அவர்களின் தலைமையில், பண்டிதமணியவர்கள் பாரதியாரைப்பற்றி நகைச்சுவை ததும்பப் பிரசங்கஞ் செய்தார்கள். இடையீடின்றி உபந்நியாசங்கள் செய்தமையாலும், முதலியார் ஸ்ரீமாந் சு. திருச்சிற்றம்பலம் அவர்களின், ஸ்ரீமாந் சு. நடேசபிள்ளை அவர்களின் அளவுகடந்த விருந்துபசாரங்களினாலும், பண்டிதமணியவர்களுக்குச் சிறிது சரீராரோக்கியங் குறைந்து, கண்டங் கட்டிக்கொண்டமையால், நீண்டநேரம் பிரசங்கிக்க முடியவில்லை. ஆயினும், அக் குறையைப் பண்டிதமணியவர்களின் நண்பரும்--மதுரைத் தமிழ்ச்சங்கப் பாலபண்டித பரீக்ஷையில் சித்தியெய்தியவரும்--மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபைச் சார்பில் நடைபெறும் காவியபாடசாலை ஆசிரியருமாகிய ஸ்ரீமாந் மு. அருணாசலம்பிள்ளை அவர்கள் "திருக்கோவையாரும் சங்கநூலும்" என்னும் பொருள்பற்றிப்பேசிப் பூர்த்திசெய்தார்கள். சபைத் தலைவர் அவர்களும், தேச ஊழியன் ஸ்ரீமாந் சேனாதிராயர் அவர்களும், வழக்கறிஞர் ஸ்ரீமான் நாகலிங்கம் அவர்களும், ஸ்ரீமான் கண்டி பேரின்பநாயகம் அவர்களும், பண்டிதமணி அவர்களையும் அவர்கள் நண்பரையும் பாராட்டினார்கள்.

அன்று நண்பகலில், யாழ்ப்பாணம் வாலிபர் மகாநாட்டார் சார்பில் ஷை மகாநாட்டுப் பிரபலஸ்தர்களுள் ஒருவரான வழக்கறிஞர் ஸ்ரீமாந் சுப்பையா அவர்களின் கிருகத்தில் பண்டிதமணியவர்களுக்கு ஒரு விசேஷ விருந்துபசாரம் நடைபெற்றது.



அன்றுபிற்பகல் 4 மணியளவில், யாழ்ப்பாணம் பெண்கள் தேசஊழிய சங்க சார்பாக. சாந்திநிகேதன கிருகத்தில், திருமகள் மா. மங்களம்மாளின் தலைமையில், பண்டிதமணி யவர்களால் 'பெண்கள்கடமை' என்னும் விஷயம் உபந்நியாசஞ் செய்யப்பட்டது. சென்னை, கற்கத்தா, லண்டன் சர்வகலாசாலைகளிலும் செங்கதிர்வேந்தர் தாகூரின் சாந்திநிகேதனத்திலும் பிறண்டுந் தேறிய பட்டதாரிகளான பலபெண்மணிகள் குழுமியிருந்தார்கள். சுவாமி விபுலானந்தா அவர்களும், வடபகுதித் தலைமைவித்தியாதரிசி உவாற்சன் B. A. B. S. C. அவர்களும் விஜயஞ் செய்தார்கள். திருமகள் மா. மகேசுவரி தேவியால் பண்டிதமணியவர்களுக்கோர் வாழ்த்துரை வாசிக்கப்பட்டது. வாழ்த்துரையில் பண்டிதமணியவர்களை "ஆரோக்கியத்தோடு சொந்த ஸ்தானத்துக்குச் சென்று மறுபடியும் யாழ்ப்பாணத்துக்கு மீண்டு வந்து தமதுகடமைகளை ஏற்றுக்கொள்ளுமாறு" குறிப்பிடப்பட்டது. அதற்குப் பண்டிதமணியவர்கள் அளவிறந்த மகிழ்ச்சி பொங்கத் தக்கவாறு பதிலிறுத்தார்கள்.

அன்று மாலை $5\frac{1}{2}$ மணியளவில் பண்டிதமணியவர்கள், சுவாமி விபுலானந்தா அவர்களுடன் திருநெல்வேலி பரமேசுவரக் கல்லூரியிற் கொண்டாடிய இராமநாத ஜயந்திக்கு விஜயஞ் செய்தார்கள்.

அன்று இரவு 7 மணியளவில் அளவெட்டி சதானந்த வித்தியாலய மண்டபத்தில் பிரதம வித்தியாதரிசி பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்களின் தலைமையில் பண்டிதமணி அவர்கள் "அடியார் பெருமை"யைப் பற்றி உபந்யாசஞ் செய்தார்கள். பண்டிதமணி அவர்களின் நண்பர் ஸ்ரீமாந் மு. அருணாசலம் பிள்ளை அவர்கள், தமிழரின் பழைய நாகரிகத்தைப் பற்றி புறநானூறு முதலிய சங்கநூல்களை ஆதாரமாகக்கொண்டு ஒரு உபந்யாசஞ் செய்தார்கள். வித்தியாலய மண்டபம் வெண்ணிறப் புஷ்பங்களால் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆயிரக்கணக்கானவர்கள் வித்தியாலய மண்டபத்திலும் வெளிப்புறங்களிலும் குழுமியிருந்தார்கள். முதலில் தலைவர் அவர்களுக்கும் பண்டிதமணியவர்களுக்கும் மாலையிட்டு உபசாரஞ் செய்யப்பட்டது. பின் பண்டிதமணியவர்கள்மீது செய்யுள்வடிவில் ஆக்கப்பட்ட உபசாரபத்திரமொன்று ஷை வித்தியாசாலை மாணவர் ஒருவரால் படித்துக் கொடுக்கப்பட்டது. இறுதியில், தலைவரவர்களும் ஸ்ரீமாந் பொ. கைலாசபதி B. S. C. அவர்களும் பண்டிதமணியவர்களையும் அவர்களின் நண்பரையும் பெரிதும் பாராட்டினார்கள்.

ஏப்ரல் மீ 9-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலையில் பண்டிதமணியவர்கள் பிரதம வித்தியாதரிசி பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்களோடு நாவலர் அவர்களின் தமையனார் புத்திரரும், நாவலர் அவர்களின் சைவப்பிரகாச வித்தியாசாலைகளின் மானேஜருமாகிய ஸ்ரீமான் த. கைலாசபிள்ளையவர்களைச் சந்தித்தார்கள். பிள்ளை அவர்கள் பண்டிதமணி அவர்களைப் பெரிதும் உபசரித்ததோடமையாது, பண்டிதமணி அவர்களை வரவேற்குங் கடப்பாடு தம்முடையதே யென்றும், இனி ஒருகால் யாழ்ப்பாணத்துக்குப் பண்டிதமணியவர்கள் வருதல் கூடுமாயின் முன்னணியில் வரவேற்பவர் தாமாகவே இருக்கவேண்டும் என்றும் பலவாறு பாராட்டினார்கள். அதன்மேல், பண்டிதமணியவர்கள் நாவலரவர்களின் [illegible] சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தரிசித்தார்கள்.

186929

அன்று மாலையில் சுன்னாகம் புகைரத ஸ்தானத்தில் லேடி இராமநாதன் அம்மையார் ஸ்ரீமாந் சு. நடேசபிள்ளை அவர்கள், அவர் தர்மபத்தினியார், பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்கள், வித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் முதலிய பலர் உபசரித்து வழியனுப்ப, பண்டிதமணியவர்கள் சுவாமி விபுலானந்தா அவர்களுடன் புகைரத மார்க்கமாகக் கொழும்புக்குப் பிரயாணஞ்செய்தார்கள். யாழ்ப்பாணம் புகைரதத்தானத்தில் பல்வேறு அன்பர்கள் பண்டிதமணியவர்களை வந்து சந்தித்துப் பிரியா விடை கூறி உபசரித்தனுப்பினர்.

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதலுக்" கிலக்கியம் பண்டிதமணி அவர்களின் பிரிவே.

யாழ்ப்பாணத்தில் பலபாகங்களிலு முள்ளவர்கள் நூற்றுக்கணக்கான இடங்களுக்கு அழைத்துச்சென்று பிரசங்கமாரி பொழிவிக்க எண்ணிய எண்ணம், காலதேச நிலைமைகளால் நிறைவேறாத ஒரு குறையேயன்றி, பண்டிதமணியவர்களிடத்தில் வேறெக்குறையுங் காணப்படவில்லை. யாழ்ப்பாணத்தார் எல்லாராலும் உபசரிக்கப்பட்டவர்கள் பண்டிதமணி அவர்களே. எல்லாருக்கும் எப்பாலாருக்கும் மகிழ்வளித்தவர்களும் அவர்களே. அவர்கள் நீடுவாழ்க!

[இஃது எழுதியது யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலிச் சைவாசிரியர் கலாசாலைத் தமிழாசிரியர். திரு. சி. கணபதிப் பிள்ளை யவர்கள்.]

---

**திருவெண்காடு:**—சிவாலய குமரகோட்டத்தில் சிவசண்முகப்பெருமான்றிருக்கோயிலும் நூற்றுக்கால் மண்டபமும் ஜீரணோத்தாரணம் செய்யப்பெற்று, சித்திரை கககூ அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றதென அறிகிறோம்.

**பரிமணங்குடி:**—ஸ்ரீசண்முகநாத சுவாமிகோவிலில் சித்திரை கூ கார்த்திகைநாள்—விசேட அபிடேக ஆராதனங்களும், ஸ்ரீபரமகுரு சுவாமிகள்குருபூசையும், சங்கவளர்ச்சியும், பிறவும் ஷை தேவஸ்தான உரிமையாளர் திரு. மு. முத்துப்பிள்ளை யவர்களால் நடைபெற்றன.

**பூவாளூர்:**—சைவசித்தாந்த சங்கத்தின் 23—வது ஆண்டுவிழா, சித்திரை ம் ௳கூ களிற் சிறப்பாக நடைபெற்றது.

**துளமங்கலம்:**—இம்மதி உஎவ மூத்தபிள்ளையாருக்குச் சந்தனக் காப்பணி விழாவும், இளையபிள்ளையாராகிய முருகப்பெருமானுக்கு அன்பர்கள் பாற்காவடி அபிடேகமும், அன்றிரவில் முருகப்பெருமான் முத்து விமானத் திருவுலாவும் இனிது நிறைவேறின. இஃது ஆறுவதாண்டுத் திருவிழாவாகும்.

**சென்னை:**—எக்மோர் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஒப்பந்தத்தை மீறிக் காரை விற்றுவிட்டதாகப் பலவான்குடி இளங்குமரன்பேரில் நடந்தவழக்கு இளங்குமரனை யேமாற்றி ஷை காரைப் பிடுங்கிக்கொண்டவர் தன்னைப்பீடி த்திருந்து நீங்கியோ, வேறு யாது காரணத்தாலோ, தான் புகுந்து இராசி பண்ணிக் கொண்டதனால் ஒழிந்து விட்டதெனத் தெரிகிறது.

# செய்தித் திரட்டு.

**திருமயிலை:**—தேவாரம் பெற்ற இத் திருத்தலத்தைத் தற்காலம் சைவ வேளாளர்கள் பரிபாலிக்கின்றனர். மயிலைநாட்டுத் திரு. அண்ணாமலை முதலியார் தர்மகர்த்தர்களில் ஒருவர். இவர் வைணவ மதத்தினராயினும், நீற்றினை நிறையப் பூசிச் சிவாலய பரிபாலனத்தைச் செவ்வே நடாத்துகின்றனர். திருமயிலையின் எல்லைக்கணுள்ள கிராமதேவதைக்கும் திருத்தேருக்கும் உயிர்ப்பலி யிடாமலும், ஆசாரவீனர்கள் ஆலயத்துட் புகாமலும் காத்தல் நன்றாம்.

**திருத்தொண்டர் புராணபடனம்:**—திருவல்லிக்கேணி சமரச சிவகணேச சபையார், சைவத்திருவாளர் கயப்பாக்கம் சதாசிவச்செட்டியாரவர்களைக் கொண்டு தொடங்கிய இப் புராணபடனம், குங்கிலியக்கலய நாயனார் புராணம் முற்பகுதிவரை அவர்களாலும், அதன் பிற்பகுதி கோயமுத்தூர் வழக்கறிஞர் சைத்திருவாளர் வி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களாலும், மானக்கஞ்சாற நாயனார்—அரிவாட்டாயநாயனார் புராணங்கள் யாழ்ப்பாணம் வண்ணைநகர் சைவத்திருவாளர் சுவாமிநாத பண்டிதரவர்களாலும், அப்பாலுள்ளவைகள் சைவத்திருவாளர் கயப்பாக்கம் சோமசுந்தரச்செட்டியாரவர்களாலும் படனம் செய்வித்து, இம்மதி கஉ திரு. வி. கே. சுப்பிரமணிய முதலியார் தலைமையில் நிறைவேற்றுவதாக வழங்கியுள்ள திருமுகம் வரப்பெற்றோம்.

**தேவி:**—இப்பெயருடன், சென்னை, மயிலாப்பூர், 110 - அப்பர்சுவாமி கோயில்தெரு, மகாா-ா ஸ்ரீ ஆர். சோமசுந்தர ஐயர், அட்வகேட் அவர்கள், 1933 ஜூன் முதல் சிறந்த தமிழ் மாதப்பத்திரிகை ஜகன்மாதாவான திரிபுரசுந்தரியின் அநுக்கிரகத்தை முன்னிட்டு, 40 பக்கங்களுக்குக் குறையாமல், ஆஸ்திக விளக்கத்துடன் தொடங்குவதாகத் துண்டுப்பிரசுரம் வழங்கியுள்ளார்கள். ஆத்திக மக்கள் அனைவரும் ஆதரிக்க வேண்டியதே. வருடசந்தா ரூ 3.

**கொழும்பு:**—நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கத்தினர், மகிபாலப்பதி பண்டிதமணி சைவத் திருவாளர் மு. கதிரேசச் செட்டியார், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப்பேராசிரியர் சுவாமி விபுலானந்தா ஆகிய இருவர்களையும் வரவேற்று மனமுவந் தளித்த உவகைப் பத்திரங்கள் வரப்பெற்றோம். அவ் விருவரும் அப் பகுதிகளில் அரிய பெரிய விரிவுரைகள் நிகழ்த்திச் சிந்தா யாத்திரையாய்த் திரும்பினார்கள்.

**பிரசுரிக்கவில்லை:**—போக்கலேயிலிருந்து திரு. காந்தியவர்கள்பாற் பெருகிய காதலுடைய திருவாளர் நாராயணன் செட்டியார், நமது சிவநேசனை நன்குபடித்து அறிகின்றார்கள். ஆயினும், அவர்கள் அனுப்பிய கடிதங்களும், 'அன்புருவுக்கு ஆசி' என்னும் விஷயமும் காரணகாரியஇயைபு கடந்திருப்பதால் பிரசுரிக்க வில்லை.

**கும்பகோணம்:**—ஸ்ரீ மௌனானந்த பரமசற்குருநாத சுவாமிகளின் 34—வது குருபூஜை, சித்திரை உசஉ உத்தரநாளில், மகேசுவரபூசா வைபவங்களுடன் சிறப்பாக நிறைவேறியது.

---

# கோவிலூர்.

திருநெல்லையம்மை சமேத கொற்றவாளீசர் திருக்கோயில் கொண்டருளும் இத் திருத்தலத்தில், ஆண்டவர் என்னும் சிறப்புப்பெயர் பெற்ற உயர் திரு முத்திராமலிங்க ஞானதேசிக சுவாமிகளின் பரம்பரையாக விளங்கும் வேதாந்த மடாலயத்தில், உயர்திரு மகாதேவ ஞானதேசிக சுவாமிகள்பால் "ஞானவாசிட்டம்" என்னும் சிறந்த நூலினைச் சில சாதுக்களுடன் கலந்து இம்மடாலய சிஷ்ய பரம்பரைத் தோன்றலாகிய பள்ளத்தூர் திருவாளர் மு. ராம. சொ. ராம. முத்துவீரப்ப ஐயா அவர்கள் ஒருவருட காலமாய்ப் பாடங் கேட்டு, சித்திரை ௨௯ குருவாரத்தில் குருமூர்த்தி சன்னிதானத்தில் ஆன்றோராசாரப்படி ஞானவாசிட்ட சமாப்தி நல்விழாக் கொண்டாடினர். திருவண்ணாமலை, சிதம்பரம், சென்னை, சிக்கல், திருக்களர், மதுரை, திருப்பூவணம், காளையார்கோவில், கும்பகோணம், குன்றக்குடி, பலவான்குடி, வீரவனம், முதலான பல பாகங்களிலிருந்தும் சாதுக்கள் பலரும், பலவூர்களிலிருந்து தனவணிக நகரத்தார்களும், பிறரும் வந்து குழுமியிருந்தனர். கைலாச கூடத்தில் புஷ்பவிமானம் அலங்கரித்து, திவ்யாசனம் அமைத்து, அதிற் குருநாதன் எழுந்தருள, அருட்குருநாதனையே ஆண்டவனெனக் கொண்டு அவரது திருவடிகளைத் திருமஞ்சனாதிகளால் விளக்கிப் பாதகாணிக்கையுடன் பத்திரபுஷ்பங்கள் சாத்தி அருச்சித்து, திருவாராதனை புரிந்து, பக்திபூர்வகமாக வணக்கத்துடன் முத்துவீரப்ப ஐயா முதலான அடியார்கள் திருவேடு பெற்றனர். ஆண்டவர்சன்னிதானத்தில் திவ்ய திருமஞ்சன அலங்காரத்துடன் திருவாராதனைகள் செய்யப்பெற்றன. ஞானதேசிகரைச் சூழ அன்பர் அடியவர் நெருங்கியிருக்க, சிவபுராணம்—கோயின் மூத்த திருப்பதிகம்—பெரியபுராண செய்யுட்கள் ஆதிய திருமுறை ஓதி மாகேசுவரபூசை மாண்புடன் நடைபெற்றது. அன்றிரவு, பிர்மசபையில் ஞானதேசிகர் எழுந்தருளி வேதாந்த உபதேசஞ் செய்து, சாதுக்களுக்கு வஸ்திரத்துடன் விபூதிப்பையும், நகரத்தார்கட்கு விபூதிப்பையும் வழங்கினார்கள். ஐம்பெருங்கடவுளர் திவ்விய அலங்காரத்துடன் செப்புதற்கரிய அற்புதக்காட்சியாய் திருவீதியில் திருப்பவனி கொண்டருளினர். ஞானதேசிகரை அன்பர் அடியவர்கள் ஆயிரக்கணக்காக வந்து பன்முறை பணிந்தெழுந்து அருளேற்கும் திருநீறும் பெற்று இன்புற்றனர். அடியார்களின் அமைதியும், புஷ்பப் பணிவிடைகளும், திருவேடப் பொலிவும் கண்டவர் கண்கட்குப் பெருவிருந்தளித்தன. ஞானதேசிகருக்குக் கௌரிசங்கம் அணிந்து அன்பர்கள் களிகூர்ந்தனர். எல்லாவகையாலும் திருவருளால் ஞானவாசிட்ட சமாப்தி நல்விழா இனிது நிறைவேறியது.

**அன்னதானம்:**—குன்றக்குடி மலையடிவாரத்தில், தனவணிக நகரத்தார்கட்குச் சொந்தமான அன்னதான மண்டபத்தில், முருகப்பெருமானுக்குத் திருவாராதனை புரிந்து சித்திரை ௩௰௨ முதல், பல்லாயிரக்கணக்கான அந்தணராதியோர்க்கு அமுதுபடி காய்கறி அன்னதானம் சிறப்பாகச் செய்யப்பெறுகின்றது.

* இத் திங்களில் இடம்பெறாத நிருபங்களும், கட்டுரைகளும், மதிப்புரைகளும் அடுத்த திங்களில் வரும்.

## 'சிவநேசன்' ஆண்டுத்தொகை விவரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ 2 4 0 | அதற்கு மூலதனம் | ரூ 30 0 0 |
| அயல்நாட்டிற்கு | ரூ 3 0 0 | அதற்கு மூலதனம் | ரூ 40 0 0 |

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில் பத்திராதிபர்
ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.